



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:205 | 09-02-2026 | திங்கட்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

09.02.2026 தை 26
திங்கட்கிழமை

சூரிய உதயம் 6.35

திதி:
இன்று காலை 7.05 வரை சப்தமி பின்பு அஷ்டமி.

நட்சத்திரம்:
இன்று காலை 7.07 வரை சுவாதி பின்பு விசாகம்.

யோகம் :
இன்று அதிகாலை 2.14 வரை கண்டம் பின்பு விருத்தி

கரணம் :
இன்று காலை 7.05 வரை பவம் பின்பு இரவு 7.55 வரை பாலவம் பின்பு கௌலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.34 வரை சித்த யோகம் பின்பு காலை 7.07 வரை அமிர்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

சந்திராஷ்டமம்
இன்று காலை 7.07 வரை உத்திரட்டாதி பின்பு ரேவதி.

நல்ல நேரம்
காலை 6.30 – 7.30.
மாலை 4.30 – 5.30
இராகு காலம்
காலை 7.30 – 9.00.
எமகண்டம்
காலை 10.30 – 12.00.

குளிகை
பிற்பகல் 1.30 – 3.00.

இன்று தேய்பிறை அஷ்டமி நாள்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

### பிரதமர் மோடி மற்றும் மலேசியா பிரதமர் அன்வார் இப்ராஹிம் முன்னிலையில்


# இந்தியா மலேசியா இடையே 11 புரிந்துணர்வு ஒப்பந்தம்

**கோலாலம்பூர், பிப்.9:**
இந்தியா மலேசியா இடையே 11 புரிந்துணர்வு ஒப்பந்தம் பிரதமர் மோடி மற்றும் மலேசியா பிரதமர் அன்வார் இப்ராஹிம் முன்னிலையில் இன்று கையெழுத்தானது.

பிரதமர் மோடி 2 நாள் அரசுமுறை பயணமாக மலேசியாவுக்கு சென்றுள்ளார். கோலாலம்பூர் விமான நிலையத்தில் வந்திறங்கிய அவருக்கு இரு நாடுகளின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பாரம்பரிய இசைநடனத்துடன் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமான நிலையத்தில் பிரதமர் மோடியை மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம், மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ரமணன் ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் நேரில் வரவேற்றனர். நடப்பாண்டில் முதல் வெளிநாட்டுப் பயணமாக மலேசியாவுக்கு பிரதமர் மோடி சென்றுள்ளார்.

இந்த நிலையில் இன்று புத்ராஜெயாவில் உள்ள பெர்டானா புத்ராவில் சம்பிரதாய முறைப்படி வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது. அப்போது பிரதமர் மோடியை மலேசியா பிரதமர் அன்வார் இப்ராஹிம், அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் சந்தித்து பேசினர்.



இந்த வரவேற்பு நிகழ்ச்சியின் புகைப்படங்களை பிரதமர் மோடி பகிர்ந்து, நம்பிக்கை, நட்பு மற்றும் உறவை, இந்தியாவும் மலேசியாவும் தொடர்ந்து வலுப்படுத்தி வருகின்றன" என குறிப்பிட்டுள்ளார்.

மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமுடன் பிரதமர் மோடி இன்று இருதரப்பு உயர்நிலை பேச்சுவார்த்தையைநடத்தினார். அப்போது இருநாடுகளும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தைக்குப் பின், முக்கிய ஒப்பந்தங்கள் பிரதமர் மோடி மற்றும் மலேசிய பிரதமர் முன்னிலையில் கையெழுத்தானது. இருநாட்டு தலைவர்களும் கூட்டாக நிருபர்களை சந்தித்தனர்.

**நல்லுறவு**

அப்போது பிரதமர் மோடி கூறியதாவது:

பயங்கரவாதம் குறித்த இந்தியாவின் நிலைப்பாடு தெளிவானது; இரட்டை நிலைப்பாடுகளுக்கு இடமில்லை, சமரசத்திற்கும் இடமில்லை. இந்தியாவும், மலேசியாவும் ஒரு சிறந்த உறவை கொண்டுள்ளன.

இன்று இந்திய வம்சாவளி மக்களைக் கொண்ட உலகின் இரண்டாவது பெரிய நாடு மலேசியா ஆகும். ஆசியான் (தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு) உடன் இணைந்து, இந்தோபசிபிக் பிராந்தியம் முழுவதும் வளர்ச்சி, அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு இந்தியா உறுதி பூண்டுள்ளது. வர்த்தகம், முதலீடு, இணைப்பு மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளில் இந்தியாவும், மலேசியாவும் உறவுகளை வலுப்படுத்தி வருகின்றன என்றார்.

**மோடியின் அர்ப்பணிப்பு**

மலேசியா பிரதமர் இப்ராஹிம் கூறியதாவது:

பிரதமர் மோடியுடனான சந்திப்பு இருநாட்டு உறவுக்கு மிகவும் முக்கியமானது. 1957ம் ஆண்டு முதல் இந்தியாமலேசியா இடையே இன்று 11 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. உலகம் முழுவதும் மேற்கொள்ளப்படும் அனைத்து அமைதி முயற்சிகளுக்கும் உறுதியான ஆதரவளிப்பதில் பிரதமர் மோடி கொண்டுள்ள அர்ப்பணிப்புக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது நல்லுறவுகளின் அடையாளமாக, சபா என்ற மாகாணத்தில் இந்தியாவின் துணைத் தூதரகத்தைத் திறக்கும் இந்திய அரசின் முடிவுக்கு நான் உடனடியாக ஒப்புதல் அளித்துள்ளேன். சுற்றுலா துறைக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கடந்த ஆண்டில் இந்த அற்புதமான வளர்ச்சியை நாம் கண்டிருக்கிறோம். மேலும் விசா நடைமுறைகள் எளிமையாக்கப்பட்டு, விமான சேவைகள் அதிகரிக்கப்பட்டு உள்ளதாலும் ஏராளமானோர் பயன் அடைவார்கள்.

நான் பலமுறை இந்தியாவிற்கு சென்று நூற்றுக்கணக்கான இடங்களை பார்த்திருக்கிறேன். ஆனாலும் நான் இன்னும் முழு இந்தியாவையும் சுற்றிப் பார்க்கவில்லை என்றே நினைக்கிறேன். அது மிகவும் பெரிய நாடு. வரலாறு, கலாச்சாரம், கலைகள் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்களைப் பற்றி அறிந்துகொள்ள ஒரு அற்புதமான நாடு.

இவ்வாறு அவர் கூறினார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி தன்னுடைய எக்ஸ் தளப் பதிவில், இன்று காலை பிரதமர் அன்வர் இப்ராஹிமுடன் சிறந்த சந்திப்பு நடைபெற்றது. இந்தியாவும் மலேசியாவும் கடல்வழி அண்டை நாடுகள், இரு நாடுகளும் எப்போதும் நெருங்கிய நட்புறவைப் போற்றி வருகின்றன. வர்த்தகம், உள்கட்டமைப்பு, எரிசக்தி, தகவல் தொழில்நுட்பம், உயிரி தொழில்நுட்பம் மற்றும் பல துறைகளில் உள்ள வளர்ச்சிக்கான ஒத்துழைப்பை நாங்கள் ஆய்வு செய்தோம். பாதுகாப்பு, தற்காப்பு, செயற்கைநுண்ணறிவு, டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் செமிகண்டக்டர் ஆகிய துறைகளிலும் இருநாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்த நாங்கள் ஒப்புக்கொண்டோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் திமுக அரசுக்கு பக்கபலமாக இருக்க வேண்டும்

### முதலமைச்சர்மு.க.ஸ்டாலின்



**சென்னை, பிப்.9:**
அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை (TAPS) தமிழக அரசு அமல்படுத்தியுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு நிகரான பலன்களை அரசு ஊழியர்கள் பெறுவார்கள்.

இதையடுத்து, உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை அறிவித்த முதலமைச்சர்மு.க.ஸ்டாலினுக்கு ஜாக்டோ ஜியோ சார்பில் சென்னையில் நேற்று பாராட்டு விழா நடைபெற்றது.

இந்த விழாவில் பங்கேற்ற முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் பேசியதாவது,

அரசு ஊழியர்களின் வேர்வைத்துளிகள் மதிக்கப்பட வேண்டும், கண்ணீர் துளிகள் துடைக்கப்பட வேண்டும். ஆகையால் தான் உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளோம்.

மக்கள் பிரதிநிதிகளாக ஆட்சி வரக்கூடிய நாங்களும், அரசு ஊழியர்களாக மக்களுக்காக பணியாற்றும் நீங்களும் சேர்ந்துதான் அரசாங்கம். ஒரு நாணயத்தில் இரு பக்கங்களாக இருக்கக்கூடிய அமைச்சரவையும், அரசு ஊழியர்களும் ஒருசேர பார்ப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அரசு ஊழியர்களின் அரசாக திராவிட மாடல் திமுக அரசு உள்ளது. கருணாநிதி ஆட்சி காலம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் பொற்காலம்.

திமுகஅரசில்நாட்டிற்கேமுன்னோடியான முத்திரைத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். கலைஞர் மகளிர் உரிமை திட்டம், மகளிர் விடியல் பயணம், புதுமைப்பெண், இல்லம் தேடி கல்வி என பல்வேறு திட்டங்களால் திமுக அரசுக்கு நற்பெயரும் செல்வாக்கும் கிடைத்ததற்கு அந்த பெருமையில் பெரும் பங்கு அரசு ஊழியர்களையே சாரும். அந்த நன்றியை கூறும் வாய்ப்பாக இந்த மாநாட்டிற்கு நான் வந்துள்ளேன்.

அனைத்து அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நான் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் கண்களாக, கரங்களாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

பழைய ஓய்வூதியத் திட்டம் பறிபோக அதிமுக அரசுதான் காரணம். வேர்வைத்துளி சிந்தி உழைத்தவர்களுக்கு ரத்தக்கண்ணீர் வர வைத்ததுதான் அதிமுக ஆட்சி.

தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களுக்கான சிறப்பு கருணை ஓய்வூதியம், உழைப்புக்கான உரிமைத்தொகை என்ற பெயரில் வழங்கப்படும். அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் எங்களுக்கு (திமுக அரசுக்கு) பக்கபலமாக இருங்கள், நாங்கள் உங்களுக்கு பக்கபலமாக இருக்கிறோம்

இவ்வாறு அவர் கூறினார்.

# நா.த.க.– த.வெ.க இடையே மோதல் த.வெ.க. நிர்வாகி உள்பட 3 பேர் கைது

**தேனி, பிப்.9:**
தேனியில் நாதக- தவெக இடையே நடந்த மோதல் விவகாரத்தில் தமிழக வெற்றிக் கழகத்தை சேர்ந்த 3 பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

இருதரப்பு மோதலில் தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகி கார் கண்ணாடி உடைக்கப்பட்டுள்ளது.

தவெக தேனி தெற்கு மாவட்ட பொருளாளர் கவுதம், தனவந்தன், வசந்த் ஆகிய மூன்று பேரை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தவெக தேனி தெற்கு மாவட்ட செயலாளர் லெப்ட் பாண்டி உள்பட 5 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# 13 மாவட்டங்களில் இன்று பனிமூட்டம் நிலவ வாய்ப்பு!

**சென்னை, பிப்.9:**
தமிழகத்தில் இன்று (பிப்.9) சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிபேட்டை, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.




# குரூப் 2, 2 ஏ தேர்வில் ஏற்பட்ட குளறுபடி: டி.என்.பி.எஸ்.சி. முதன்மை தேர்வுகள் தள்ளி வைப்பு

**சென்னை, பிப்.9:**
குரூப் 2, 2 ஏ தேர்வில் ஏற்பட்ட குளறுபடியால் நேற்று நடைபெற இருந்த டி.என்.பி.எஸ்.சி. முதன்மை தேர்வுகள் தமிழகம் முழுவதும் தள்ளிவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல்நிலைத் தேர்வு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 28ந்தேதி நடைபெற்றது. இந்த தேர்வை 4 லட்சத்து 20 ஆயிரத்து 217 பேர் எழுதினார்கள். அவர்களுக்கான தேர்வு முடிவு கடந்த டிசம்பர் மாதம் வெளியானது. அதில் குரூப்2 பதவிகளில் 1,126 பேரும், குரூப்2ஏ பதவிகளில் 9,457 பேரும் தகுதி பெற்றவர்களாக டி.என்.பி.எஸ்.சி. தெரிவித்தது.அதனைத் தொடர்ந்து முதன்மைத் தேர்வு 8-ந்தேதி (நேற்று) நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இன்று காலையில் குரூப் 2 பதவிகளுக்கான பாடத்தேர்வு, பிற்பகலில் குரூப்2, 2ஏ பதவிகளுக்கான தமிழ்த்தகுதித்தாள் தேர்வு நடைபெறவிருந்தது.

இதற்காக சென்னையில் 7 தேர்வு மையங்கள் உட்பட தமிழகம் முழுவதும் 38 மையங்களில் தேர்வு நடைபெறுவதாக இருந்தது.

சாலை மறியல்; பரபரப்பு

இந்த நிலையில், அரும்பாக்கம் மற்றும் நந்தனம் தேர்வு மையத்தில் குளறுபடி ஏற்பட்டுள்ளது. அதாவது, அரும்பாக்கத்தில் உள்ள தனியார் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த தேர்வு மையத்தில் 600 பேர் எழுதவிருந்த நிலையில் 200 பேர் மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர்.

டிஎன்பிஎஸ்சி விளக்கம்

இது தொடர்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: சென்னையில் நேற்று (8ந்தேதி) நடைபெறவிருந்த ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி II (மற்றும்) IIஏ பணிகள்) பிரதான தேர்வுகளுக்கான முற்பகல் மற்றும் பிற்பகல் நடைபெறவிருந்த எழுத்துதேர்வுகள் தொழில்நுட்ப கோளாறு காரணமாக சென்னையில் 3 மையங்களில் நடத்த இயலவில்லை. எனவே தேர்வர்கள் நலனை முன்னிட்டு இன்று நடைபெறவிருந்த இரண்டு தேர்வுகளும் சென்னை உட்பட தமிழ்நாடு முழுவதும் ரத்து செய்யப்பட்டு, பின்னர் வேறு தேதியில் நடத்தப்படும்.

இது குறித்து தேர்வர்கள் அனைவருக்கும் மறுதேர்வு நடைபெறும் நாளுக்கு 15 நாட்களுக்கு முன்பாக தேர்வு மையங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு விவரம் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் தகவல் அளிக்கப்படும்.எதிர்வரும் 22ம் தேதி நடைபெறவுள்ள ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி II பணிகள்) பொது அறிவு தேர்வு (தாள்II) வழக்கம்போல் அன்றைய தினமே நடத்தப்படும். இது தொடர்பாக தேர்வர்களுக்கு மீண்டும் சரிபார்த்து தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு மீண்டும் 13ந்தேதி அன்று வழங்கப்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## திருக்குறள் குறள்-525

**கொடுத்தலும் இன்சொல்லும் ஆற்றின்
அடுக்கிய சுற்றத்தாற் சுற்றப் படும்**



பொருள் கொடுத்தலும் இன்சொல் கூறுதலுமாகிய இரண்டும் செய்யவல்லவனானால் ஒருவன் தொடர்ந்த பலச் சுற்றத்தால் சூழப்படுவான்.

## சிந்திக்க ஒரு நொடி



பூமிக்கு அடியில் இடம் பிடிக்க பூமிக்கு மேல் நடக்கும் ஒரு பெரிய போராட்டத்தின் பெயர்தான் வாழ்க்கை

**உஷா முத்துராமன்**

## முதல்வரின் ஓவியத்தை வரைந்த கடலூரைச் சேர்ந்த பள்ளி மாணவன் பிரஜித்



கடலூரைச் சேர்ந்த பள்ளி மாணவன் பிரஜித், தான் வரைந்த முதல்வரின் ஓவியத்தை நேரில் வழங்க வேண்டும் என்று காணொளி மூலம் வேண்டுகோள் வைத்தான். இதையடுத்து நேற்று தனது குடும்பத்தினருடன் முதல்வர் ஸ்டாலினை அவரது இல்லத்தில் சந்தித்து அந்த ஓவியத்தை வழங்கினார். அவனை முதல்வர் வாழ்த்தினார்.

## பள்ளி மாணவர்களுக்கு ரூ.10 லட்சம் கல்வி உதவித்தொகை




கோவையில் குமரகுரு கல்வி நிறுவனங்களுடன் இங்கிலாந்து பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தது. பள்ளி மாணவர்களுக்கு ரூ.10 லட்சம் கல்வி உதவித்தொகை அறிவிக்கப்பட்டது.

## மஹா கும்பாபிஷேக விழா அன்னதானம்



நாகர்கோவில், மீனாட்சிபுரம் விஸ்வகர்மா சமுதாய அறக்கட்டளை ஸ்ரீ அற்புத விநாயகர், ஸ்ரீ உஜ்ஜையினி மாகாளி அம்மன், ஸ்ரீ துர்க்கை அம்பாள், ஸ்ரீசிவ சுடலை மாடசுவாமி திருக்கோவிலில் மஹா கும்பாபிஷேக விழாவில் அன்னதானத்தை பாஜக மாநில செயலாளர் மீனாதேவ் துவக்கி வைத்தார்.

## சாய்பாபா திருக்கோவிலில் ஓ.பன்னீர் செல்வம், தனது மகனுடன் சிறப்பு வழிபாடு



சென்னை மயிலாப்பூர் சாய்பாபா திருக்கோவிலில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், தனது மகனுடன் சிறப்பு வழிபாடு செய்தார்.

## அருள்மிகு ஸ்ரீ தேவி, பூதேவி சமேத ஸ்ரீபேசும் பெருமாள் கோயில் மகா கும்பாபிஷேகம்

**திருவண்ணாமலை, பிப்.09:**

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், கூழமந்தல் பிரசித்தி பெற்ற தொன்மையான அருள்மிகு ஸ்ரீ தேவி, பூதேவி சமேத ஸ்ரீபேசும் பெருமாள் கோயில் புனரமைப்பு திருப்பணிகள் செய்து மகா கும்பாபிஷேகம் நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது.





கடந்த ஆறாம் தேதி பகவத் அனுக்ஞை யுடன் தொடங்கிய பூஜைகள் எட்டாம் தேதி வரை தொடர்ந்து பல்வேறு கட்ட பூஜைகள் நடைபெற்றது.

நேற்று காலை புனித கலசம் புறப்பாடு நடைபெற்று மகா சம்ரோஷணம் நடைபெற்றது. அறங்காவலர் குழு, ஊர் பொதுமக்கள், இந்து சமய அறநிலைத்துறை அலுவலர்கள், எம் எல் ஏ .ஜோதி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், அனைத்துக் கட்சி பிரமுகர்கள், திரளான பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**எறும்பூர் கை. செல்வகுமார், செய்யாறு.**

## நெய்வேலியில் நடைபெறும் மாநில அளவிலான துளிர் வினாடி வினா போட்டிகளில் பங்கேற்க வேலூர் மாவட்டத்திலிருந்து மாணவர்கள் பயணம்!

**வேலூர், பிப். 09:**

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் பள்ளிக்கல்வித்துறை இணைந்து மாநில அளவிலான துளிர் & ஐந்தர் மந்தர் வினாடி வினாப் போட்டிகள் 08-02-2026 ஞாயிறு அன்று கடலூர் மாவட்டம், நெய்வேலி என்எல்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

அறிவியல், கணிதம், வானவியல், அறிவியல் தொழில்நுட்பம், அறிவியல் அறிஞர்கள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் வினாடி வினா போட்டி தமிழ் மற்றும் ஆங்கில வழியில் நடைபெறுகிறது.

மாநில போட்டியில் இளநிலை ( 6,7,8 வகுப்பு ) உயர்நிலை (9 & 10) முதுநிலை ( 11&12) ஆகிய மூன்று பிரிவுகளில் மாவட்டத்தில் முதல் இரண்டு இடங்களை பிடித்த குழுக்கள் பங்கேற்க வேலூர் மாவட்டத்தில் இருந்து அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, பொய்கை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, லத்தேரி மற்றும் கே. வி. குப்பம், குடியாத்தம் ஆர். எஸ். மேல்நிலைப்பள்ளி,



பேரணாம்பட்டு பெரியதாமல் செருவு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வேலூர் சாய்நாதபுரம் கிருஷ்ணசாமி முதலியார் அரசு நிதி உதவி மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் இருந்து 27 மாணவ, மாணவிகளும், 5 ஆசிரியர்களும், 6 அறிவியல் இயக்க நிர்வாகிகளும் சனிக்கிழமை பிற்பகல் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து புறப்பட்டு சென்றனர்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் வேலூர் மாவட்ட தலைவர் மற்றும் துளிர் வினாடி வினா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முத்து சிலுப்பன், செயலாளர் முனைவர் செ. நா.ஜனார்த்தனன் ஆகியோர் வழியனுப்பி வைத்தனர். மாவட்ட நிர்வாகிகள் வி.செல்வராஜ், பி.ரவீந்திரன், ப. ராஜேந்திரன், பெ.ராமு, பி.சுகுமார், ஆடியோ ப.சேகர், கலைச்செல்வன் ஆகியோர் உடன் புறப்பட்டு சென்றனர்.

டிசம்பர் மாதம் நடைபெறுவதாக அறிவிக்கப் பட்ட இந்த போட்டிகள் கடும் மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டன. எனவே இந்த போட்டிகள் ஞாயிற்றுக்கிழமை நெய்வேலி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி



மொடக்குறிச்சி வட்டம், முகாசி அனுமன்பள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை பாஜக எம்எல்ஏ சரசுவதி வழங்கினார்.

## ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் பூமி பூஜை



**வாடிப்பட்டி, பிப்.09:**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேரூராட்சி 5வது வார்டு தாதப்ப நாயக்கன்பட்டியில் பேரூராட்சி பொது நிதி ரூ.40லட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் கட்டுவதற்கு பூமி பூஜை நடந்தது. இந்த பூஜைக்கு பேரூராட்சி தலைவர் மு. பால் பாண்டியன் தலைமை தாங்கினார்.

தி.மு.க.ஒன்றிய செயலாளர் பால. ராஜேந்திரன், முன்னாள் பேரூராட் சி தலைவர் கிருஷ்ணவேணி, பேரூ ராட்சி துணை தலைவர் கார்த்திக், முன்னாள் பேரூர் செயலாளர் மு.பா.பிரகாஷ், கவுன்சிலர் ஜெயகாந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வார்டு கவுன்சிலர் சரஸ்வதி ராமு வரவேற்றார்.

இந்த பூமி பூஜையை வெங்கடேசன் எம்.எல்.ஏ., துவக்கி வைத்தார். இதில் தாதப்பநாயக்கன் பட்டி கிராம பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் கண்ணதாசன் நன்றி கூறினார்.

## மாநில அளவிலான தொழில் போட்டிகள்




கோவை ராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில் எந்திரா-2026 என்ற தலைப்பில் மாநில அளவிலான தொழில் போட்டிகள் நடந்தன.

## அருணகிரிநாதர் கோயில் குடமுழுக்கு விழா



திருவண்ணாமலை அருணகிரிநாதர் கோயில் குடமுழுக்கு விழாவில் காஞ்சிகாமகோடி பீடாதிபதி சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பங்கேற்றார்.

## பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி



முன்னாள் முதலமைச்சர்கள் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, எடப்பாடி பழனிசாமி ஆகியோரின் பிறந்த நாளையொட்டி, கோவை சாய்பாபா காலனியில் அம்மன் கே.அர்ச்சுணன் எம்எல்ஏ, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## ஜெகன் மோகன் ரெட்டியின் அண்ணன் மகன் சுனில் ரெட்டி திருமண நிகழ்வு



சென்னை கிண்டி நட்சத்திரஓட்டலில் நேற்று நடந்த ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டியின் அண்ணன் மகன் சுனில் ரெட்டி திருமண நிகழ்வில் மணமக்களை தவெக தலைவர் விஜய் வாழ்த்தினார்.

## மார்க்கண்டேயன்பட்டி தாமரை கண்மாயில் மீன்பிடித் திருவிழா



திருப்பத்தூர் அருகே மார்க்கண்டேயன்பட்டி தாமரை கண்மாயில் நேற்று மீன்பிடித் திருவிழா நடந்தது. பல்வேறு கிராமத்தினர் குவிந்து மீன் பிடித்தனர்.

## எஸ்.எப்.எஸ். மெட்ரிக் பள்ளி அணிக்கு சுழற்கோப்பை



கோவில்பட்டியில் கலை விழா போட்டியில் வெற்றி பெற்ற நாலாட்டின்புதூர் எஸ்.எப்.எஸ். மெட்ரிக் பள்ளி அணிக்கு சுழற்கோப்பை வழங்கப்பட்டது.

## செஞ்சி திண்டிவனம் சாலை சக்கராபுரம் ஸ்ரீசெல்வ விநாயகர் கோவிலில் மஹா கும்பாபிஷேகம் விழா

**செஞ்சி, பிப். 09**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சிக்கு உட்பட்ட திண்டிவனம் சாலையில் அமைந்துள்ள சங்கராபுரம் ஸ்ரீசெல்வ விநாயகர் கோவிலில் செல்வ விநாயகர், வீர விநாயகர், பாலமுருகன், ஐயப்பன், அரச மரத்தடி விநாயகர், நவகிரக சுவாமிகளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் 06/02/2026ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று கணபதி பூஜை, யாகசாலை பிரவேசம், அங்குறாற்பணம், முதல் யாகசாலை பூஜை தொடங்கியது .

தொடர்ந்து 07/02/2026 சனிக்கிழமை அன்று இரவு கணபதி ஹோமம், நவகிரக பூஜை, தீக்ஷா ஹோமம், இரண்டாம்யாகசாலை நடைபெற்றது. 08/02/2026 ஞாயிற்றுக்கிழமை அன்றுகாலை, கணபதி பூஜை, மூல மந்திர ஹோமம், பூர்ணாஹுதி மூன்றாம் யாகசாலை நடைபெற்றது. கடம் புறப்பாடு நடைபெற்று கோபுர கலசத்திற்கு புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.



அதனைத் தொடர்ந்து மூலவருக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மேல் ஒலக்கூர் ஸ்ரீலலிதானந்தா ஆசிரமம்த்தின் ராமானந்தா சரஸ்வதி சுவாமிகள் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## உணவகத்திற்கு தடை விதிக்க பரிந்துரை

விருதுநகர், பிப்.9:

விருதுநகர் அருகே ஆர்.ஆர்.நகரில் உள்ள பயண வழி உணவகத்தில் தரமற்ற உணவுப் பொருட்கள் விற்ப னைக்காக வைத்திருப்பது தெரிய வந்தது. இதையடுத்து, அப்பொருட்களை பறிமுதல் செய்ததோடு, உணவகத்தில் பேருந்துகளை நிறுத்திடத் தடை விதிக்கப் பரிந்துரைக்கப்பட்டது. மாவட்ட உணவு பாதுகாப்புத் துறை நியமன அலு வலர் மாரியப்பன் தலைமையிலான குழுவினர் 4 வழிச் சாலையில் ஆர்.ஆர்.நகர் அருகேயுள்ள துலுக்கபட்டி யில் உள்ள பயணவழி உணவகத்தில் திடீர் ஆய்வு செய்தனர். அப்போது, சமையலறை சுகாதாரமற்றும், கழிவுநீரானது உணவகத்தின் அருகே தேங்கிக் கிடந்ததும், மேற்கூரை அழுக்கடைந்து, சிலந்தி வலை யுடன் இருப்பதும் கண்டறியப்பட்டது. மேலும், அந்த உணவகத்தில் தரமற்ற 5 கிலோ சிப்ஸ், 4 கிலோ முந்திரிக் குருணை, 1.5 கிலோ சோம்பு, அரைக் கிலோ தடைசெய்யப்பட்ட நெகிழி ஆகிய வற்றை பறிமுதல் செய்தனர்.

## இயற்கை விவசாயத்தில் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் விற்பனை மையம்

சிவகங்கை, பிப்.9:

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகரில், வைகை ஆற்றங்கரையோரம் குலாலர் தெருவில் இயற்கை விவசாயத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் மையம் செயல்படத் தொடங்கியுள்ளது. இந்த மையத்தில் விற்பனை செய்யப்படும் அனைத்து பொருட்களும் முழுமையாக இயற்கை விவசாய முறையில் உற்பத்தி செய்யப்பட்டவை என, கடையின் உரிமையாளர் பொன்னையா தெரிவித்துள்ளார். இயற்கை விவசாயப் பொருட்களை விரும்பும் பொது மக்கள் மற்றும் ஆரோக்கிய உணவு தேடும் நுகர்வோரி டையே இந்த விற்பனை மையம் நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது.

## இராஜபாளையம் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்




இராஜபாளையம், பிப்.9:

இராஜபாளையம் வட்டம் சத்திரப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் சனிக்கிழமை அன்று, வட்டார சுகாதாரத்துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் பல்வேறு துறைகள் சார்பில் கண்காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. இராஜபாளையம் குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சார்பில் குழந்தைகள் நலன் மற்றும் சத்துணவு தொடர்பான கண்காட்சி சிறப்பாக இடம்பெற்றது. இக்கண்காட்சியை முகாமில் பங்கேற்ற மருத்துவர்கள், செவிலியர்கள், பல்வேறு துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்வ முடன் பார்வையிட்டனர். கண்காட்சிக்கான ஏற்பாடுகளை இராஜபாளையம் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் பங்கஜம் தலை மையில், மேற்பார்வையாளர் சாந்தி முன்னிலையில், அங்கன்வாடி பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர். கண்காட்சியில் சத்துமாவில் தயாரிக்கப்பட்ட கொழுக் கட்டை அனைவரையும் கவர்ந்தது. மேலும், சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகள் குறித்த விளக்கங்களும், அவை உடல்நலத்திற்கு தரும் நன்மைகள் பற்றிய தகவல்களும் பொதுமக்களுக்கு பணியாளர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

## ஊழல் பற்றி பேசும் விஜய் தனது ஊதியத்தை வெளிப்படுத்துவாரா? அமைச்சர் கேள்வி

சென்னை, பிப்.9:

ஊழல் பற்றி பேசும் நடிகர் விஜய், தான் வாங்கும் ஊதியத்தை வெளிப்படையாக அறிவிப்பாரா என்று அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கேள்வி எழுப்பியுள்ளார். வருமானத்தை மறைத்ததால் அபராதம் விதிக்கப்பட்டுள்ள நிலையில் ஊழல் பற்றி பேச விஜய்க்கு தகுதி இல்லை என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். தவறு செய்த வர்கள் அனைவரும் விஜய்யுடன் உள்ளனர். இவர்கள் நாட்டை ஆண்டால் எப்படி இருக்கும் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். வரி ஏய்ப்பு விவகாரத்தில் உயர்நீதிமன்றம் 1.50 கோடி ரூபாய் அபராதம் விதித்துள்ள நிலையில், விஜய் ஊழலை ஒழிப்பார் என்று எப்படி கூற முடியும் என்று அமைச்சர் பன்னீர்செல்வம் கேட்டுள்ளார். கி.வீரமணி இந்நிலையில், திராவிடர் கழகத்தின் தலைவர் கி. வீரமணி, ஊழல் குறித்துப் பேச விஜய்க்கு எந்தத் தகுதியும் கிடையாது என்றும், எந்தவொரு கொள்கையும் இல்லாமல் அரசியல் ஷூட்டிங் நடத்தி வருகிறார் என்றும் கி. வீரமணி குற்றம் சாட்டியுள்ளார்.

## எஸ்.பி.முத்துராமன், எம்.என்.ராஜத்துக்கு கலைஞர் நினைவு "கலைத்துறை வித்தகர்" விருது: தமிழ்நாடு அரசு அறிவிப்பு





சென்னை, பிப்.9:

தமிழ்நாடு அரசு சார்பில் வெளியி டப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கும் வாழ்நாள் சாதனையாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் "கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது" வழங்கப்படும் எனச் சட்டமன்றப் பேரவையில் 27.4.2022 அன்று செய்தித்துறை அமைச்சரால் அறிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2022ம் ஆண்டுக்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளரான ஆரூர்தாசுக்கும், 2023ம் ஆண்டுக்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது கவிஞர் மு.மேத்தாவுக்கும்,

கலைஞரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பெண்மையைப் போற்றும் வகையில் சிறப்பினமாக 2023ஆம் ஆண்டுக்கு மட்டும் கூடுதலாக கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது பின்னணிப் பாடகி பி.சுசீலாவுக்கும் முதலமைச்சரால் வழங்கப்பட்டது.

தமிழ் திரையுலகின் பழம்பெரும் நடிகைகளில் ஒருவரான நடிகை எம்.என். ராஜம், சிறு வயதிலேயே நாடகங்களில் நடிக்கத் தொடங்கி, 1949ல் குழந்தை நட்சத்திரமாக திரைப்படங்களில் அறிமுகமான இவர், 1950கள் மற்றும் 1960களில் முன்னணி நாயகியாக விளங்கினார். ரத்தக்கண்ணீர், பெண்ணின் பெருமை, புதையல், தங்கப்பதுமை, நாடோடி மன்னன், பாசமலர், தாலி பாக்கியம், மங்கையர் திலகம் அரங்கேற்றம், ஊருக்கு உழைப்பவன், போன்ற பல்வேறு வெற்றிப்படங்களில் நடித்து ரசிகர்களின் அன்பைப் பெற்றார். 200க்கும் மேற்பட்ட தமிழ் திரைப்படங்களில் நடித்த இவர், பின்னர் தாயார், மாமியார் போன்ற பல்வேறு துணை வேடங்களிலும் சிறப்பாக நடித்து மக்கள் மனங்களில் நீங்கா இடம் பிடித்தவர்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் முதல் பெண் உறுப்பினர். நீண்டகால கலைச் சேவைக்காக எண்ணற்ற விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர். இத்தகைய பெருமைக்குரிய பழம்பெரும் நடிகை எம்.என்.ராஜம் 2024ம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

எஸ்.பி. முத்துராமன் பிரபலமாகஎஸ்.பி.எம். என்று அழைக்கப்படுபவர், தமிழ்த் திரைப்படத் துறையின் மூத்த இயக்குநர்களில் ஒருவராவார். 1935 ஏப்ரல் 7ம் தேதி காரைக்குடியில் பிறந்த இவர், 1960ல் களத்தூர் கண்ணம்மா படத்தில் உதவி இயக்குநராகத் தொடங்கி, பின்னர் 1970கள் முதல் 1990கள் வரை தமிழ் சினிமாவில் மிகவும் வெற்றிகரமான வணிக இயக்குநராக உயர்ந்தார். 70-க்கும் மேற்பட்ட தமிழ்ப் படங்களை இயக்கியுள்ளார்.

இவரது சிறந்த படங்களில் ஆறிலிருந்து அறுபது வரை, புவனா ஒரு கேள்விக்குறி (1977), ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது (1978), முரட்டுக்காளை, எங்கேயோ கேட்ட குரல் (1982), சகலகலா வல்லவன் (1985) போன்றவை முக்கியமானவை. தமிழ் திரைப்படத் துறைக்கு அளித்த பங்களிப்புகளுக்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

கலைஞர் நினைவு கலைத்துறைவித்தகர் விருதுகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பழம்பெரும் நடிகை எம்.என். ராஜம், திரைப்பட இயக்குனர் எஸ்.பி. முத்துராமன் ஆகிய இருவருக்கும் முதலமைச்சரால் ரொக்கப் பரிசாக தலா 10 லட்சம் ரூபாயும், நினைவுப் பரிசும் வழங்கப்படும்.

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் வெளி மாவட்ட நெல் விற்பனை செய்வதால் நடவடிக்கை

திருவள்ளூர், பிப்.9:

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் வெளி மாவட்ட நெல் விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை என்று திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் மு.பிரதாப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பு காரீப் கொள்முதல் 2025-2026 சம்பா பருவத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 60 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும் மற்றும் தேசிய நுகர்வோர் கூட்டமைப்பு நிறுவனம் மூலம் 13 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும் ஆக மொத்தம் 73 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளின் நெல்லினை கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. கொள்முதல் நிலையங்கள் மூலமாக விவசாயிகளிடமிருந்து 02.02.2026 வரையில் 8,425 மெ.டன் நெல்லினை 978 விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு இது வரையில் ரூ.16 கோடி தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளிடமிருந்து மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்பட வேண்டும். வியாபாரிகளோ அல்லது பிற மாவட்ட / மாநில நெல்லோ கொள்முதல் செய்யப்படுவது கண்டறியப்பட்டால் நேரடி நெல் கொள்முதல் நிலைய பணியாளர்கள் மீது மற்றும் தொடர்புடைய நெல் விற்பனையாளர் மீதும் கடும் நடவடிக்கைமேற்கொள்ளப்படும். விவசாயிகள் தங்கள் அடங்கல் சான்றை வியாபாரிகளிடம் விற்றால் அவர்களுக்கு விவசாயம் தொடர்பான திட்டங்கள் நிறுத்தப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் வியாபாரிகள் மீது காவல்துறை மூலம் கடும் நடவடிக்கைமேற்கொள்ளப்படும். திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் நெல் கொள்முதல் நிலையங்களில் மேற்கண்ட புகார் குறித்து மண்டல அலுவலக எண் 9514265373 மற்றும் கைப்பேசி எண் 8925279611 தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தொப்பையாறு நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறப்பு


தருமபுரி, பிப்.9:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டத்தில் உள்ள தொப்பையாறு நீர்த்தேக்கத்திலிருந்து விவசாய நிலங்களின் பாசனத்திற்காக, கலெக்டர் ரெ.சதீஸ், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி முன்னிலையில் வியாழக்கிழமை தண்ணீரை திறந்து வைத்தார்.

ஆயக்கட்டுதாரர்களின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணையின்படி, தருமபுரி மாவட்ட ஆயக்கட்டு பகுதிகளில் உள்ள 2,050 ஏக்கர் நிலங்களும், சேலம் மாவட்ட ஆயக்கட்டு பகுதிகளில் உள்ள 3,280 ஏக்கர் நிலங்களும் என மொத்தம் 5,330 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், பிப்ரவரி 5 முதல் 48 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதன் மூலம், தருமபுரி மாவட்டத்தில் உள்ள தொப்பூர், கம்மம்பட்டி ஆகிய கிராமங்களிலும், சேலம் மாவட்டத்தில் உள்ள செக்காரப் பட்டி, வெள்ளார், தெத்திகிரிப்பட்டி மற்றும் மல்லிகுந்தம் ஆகிய கிராமங்களிலும் உள்ள விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

## ரூ.1.94 கோடியில் கோவை வஉசி பூங்கா வளாகத்தில் சர்வதேச தரத்தில் நீச்சல் குளம்



கோவை, பிப்.9:

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, மாநகராட்சிப் பகுதிகளில் விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு விளையாட்டு உட் கட்டமைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், வஉசி மைதானத்தை சுற்றியுள்ள பகுதி ஏற்கெனவே செம்மொழிப்பூங்கா, விளையாட்டு மைதானங்கள், நேரு உள் விளையாட்டு அரங்கம், ஸ்கேட்டிங் பயிற்சி பள்ளி, உடற்பயிற்சி கூடம், கால்பந்து மற்றும் கூடைப்பந்து மைதானங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் கொண்ட விளையாட்டு மையமாக விளங்கி வருகிறது. இப்பகுதியில் நீச்சல் குளம் அமைக்க வேண்டும் என்ற பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை தொடர்ந்து, மாநகராட்சி பூங்கா வளாகத்தில் புதிய நீச்சல் குளம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, முதற்கட்ட மாக ரூ.1.94 கோடி மதிப்பீட்டில் நீச்சல் குளம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனி குளிக்கும் வசதிகள், உடை மாற்றும் அறைகள், பாதுகாப்பை உறுதி செய்யும் சிசிடிவி கண்காணிப்பு அமைப்புகள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன. குழந்தைகளுக்கென தனியாக சிறப்பு நீராடும் பகுதியும் அமைக்கப்பட உள்ளது.

நீரின் தரம் மற்றும் குளோரின் அளவுகளை கண்காணிக்கும் வசதிகளுடன், 50 இருசக்கர வாகனங்கள் மற்றும் 25 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில் வாகன நிறுத்துமிடமும் ஏற்படுத்தப்படுகிறது.

ஒரு மணி நேரத்திற்கு 50 பேர் வீதம், ஒரு நாளில் சுமார் 500 பேர் பயன்படுத்தும் வகையில் இந்த நீச்சல் குளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

13.5 மீட்டர் அகலமும், 25 மீட்டர் நீளமும் கொண்ட இந்த குளத்தின் ஆழம் 1.2 மீட்டர் முதல் 1.8 மீட்டர் வரை இருக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, நீச்சல் வீரர்கள் முறையான பயிற்சி பெறவும், சர்வதேச அளவிலான போட்டிகள் நடத்தவும், வ.உ.சி. மைதானப் பகுதியில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான நீச்சல் குளம் அமைக்கும் பணிகளும், மாநகராட்சியின் பொது நிதி, நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி, நமக்கு நாமே திட்டம் மற்றும் பெரு நிறுவன சமூகப் பொறுப்பு நிதியின் கீழ் விரைவில் தொடங்கப்பட உள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### வெந்தய டீயும் நன்மைகளும்!



ஒரு பாத்திரத்தில் நீரை ஊற்றி, அதில் வெந்தயத்தை சிறிது சேர்த்து மூடி வைத்து, 3 நிமிடங்கள் கொதிக்க வைத்து இறக்க வேண்டும். பின் அதை வடிகட்டி தேன் சேர்த்துக் கலந்து சூடாகவோ அல்லது குளிர்ச்சியான நிலையிலோ குடிக்கலாம்.

* மாதவிடாய் காலத்தில் பெண்கள் வயிற்று வலி மற்றும் பிடிப்புகளை சந்திப்பார்கள். இந்த சமயத்தில் வெந்தய டீயை குடித்தால் வலியில் இருந்து உடனடி நிவாரணம் கிடைக்கும்.

* பூப்படையும் வயதில் உள்ள சிறுமிகள் இந்த டீயை குடிப்பது நல்லது. ஏனெனில் இந்த டீ ஹார்மோன்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

* பிரசவத்தை நெருங்கும் கர்ப்பிணிப் பெண்கள் இந்த டீயை குடித்தால் அது பிரசவ வலியை தூண்டுவதோடு, எளிதில் பிரசவம் நடக்கவும் உதவிப் புரியும்.

* தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் தொடர்ந்து குடித்து வர, தாய்ப்பால் சுரப்பு அதிகரிப்பதோடு, தாய்ப்பாலில் சத்துக்களும் அதிகரிக்கும்.

* உயர் கொலஸ்ட்ரால் பிரச்னை குறைவதோடு, ரத்த சர்க்கரை அளவும் குறையும்.

* ரத்தத்தில் உள்ள கசடுகள் வெளியேறும். அடிக்கடி சிறுநீர் கழிக்க உதவும்.

* இதய நோயின் தாக்கத்தை தடுக்கும்.

* வெந்தய டீயில் அழற்சி எதிர்ப்பு பண்புகள் ஏராளமாக அடங்கியுள்ளன. ஆகவே மூட்டு வலி, முழங்கால் வலி உள்ளவர்கள் இதை தொடர்ந்து குடித்து வரலாம்.

* உடலில் தேங்கியுள்ள கொழுப்புகளை கரைத்து, அடிக்கடி பசி ஏற்படுவதையும் தடுத்து, உடல் எடையை குறைக்க பெரிதும் உதவுகிறது.

### எளிய வீட்டு வைத்தியம்!

*முருங்கை ஈர்க்குகளை மிளகு சேர்த்து ரசம் வைத்து அருந்த உடல் அசதி குணமாகும்.

*ஆவாரை இலையைச் சாறு எடுத்து முகத்தில் தடவி வர முகம் பளபளப்பதுடன் பொலிவாக மாறும்.

*வெந்தயத்தை நெய்விட்டு வறுத்து அத்துடன் சிறிது சோம்பு, உப்பு சேர்த்து அரைத்து மோரில் கலந்து குடிக்க வயிற்றுப்போக்கு குணமாகும்.

*மாதுளம் பழத்தின் சாற்றுடன் கற்கண்டு சேர்த்து அருந்த உடல் உஷ்ணம் குறைந்து, குடல் இயக்கத்தை மேம்படுத்தும்.

*இஞ்சிச் சாறுடன் பனைவெல்லம் சேர்த்து காய்ச்சி ஏலம், கிராம்பு, ஜாதிக்காய்தூள் சேர்த்துக் கிளறி இறக்கி, ஒரு தேக்கரண்டி அளவு உண்டு வர வாயுத் தொல்லைகள் அறவே நீங்கும்.

*அகத்திக்கீரையை எடுத்து அரிசி கழுவிய நீரில் போட்டு அவித்து அதனுடன் உப்பும், சீரகமும் பொடி செய்து கலந்து பருக ரத்தக் கொதிப்பு குணமாகும்.

*ஜாதிக்காய், சுக்கு தலா 20 கிராம் எடுத்துக் கொண்டு அதனுடன் சீரகம் 50 கிராம் கலந்து பொடித்து வைத்துக் கொண்டு தினசரி ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து அதனுடன் சர்க்கரை கலந்து உணவுக்கு முன் உண்டு வர செரிக்கும் திறன் அதிகரித்து வயிற்றில் உள்ள வாயு அகலும். *பெருங்காயம் ஜீரண சக்தியை அதிகரிக்கும் தன்மை கொண்டது. உடலின் படபடப்பை போக்கி வாயுவை அகற்றி, வயிற்றுவலியை குணமாக்கும்.

*மூச்சுத்திணறல், சுவாச நோய்கள், வயிற்று உப்புசத்திற்கு நல்ல மருந்து. மயக்கம், சித்தபிரமை போக்கக் கூடியது. வயிற்றுப் பூச்சிகளை நீக்கி மலக்குடலை சுத்தம் செய்யும் திறன் கொண்டது பெருங்காயம்.

*துளசி இலை, தும்பை இலை, வெற்றிலை, மிளகு ஆகியவற்றை கஷாயம் செய்து காலையில் குடித்து வர மார்புச்சளி வெளியேறும். மூச்சுத் திணறல் குணமாகும்.

*மாதவிடாய் தொந்தரவுகளை குணப்படுத்தவும். உடல் உறுப்புகளை பலப்படுத்தவும் சாமை நல்ல பலன் கொடுக்கும். சாமை கிச்சடி, சாமை கஞ்சி என சாமையில் தயாரித்த உணவுகளை அந்த சமயங்களில் எடுத்துக் கொள்ளலாம்.

## பள்ளியில் ரூ.76 ஆயிரம் திருட்டு: முதல்வர் காவல்துறையில் புகார்

**திருவில்லிபுத்தூர், பிப்.9:**

திருவில்லிபுத்தூரிலிருந்து மல்லி செல்லும் சாலையில் தைலா குளம் அருகே அமைந்துள்ள அரிமா இண்டர் நேஷனல் பள்ளியில், பிப்.4-ஆம் தேதி வழக்கம்போல் பள்ளி பணிகள் முடிந்த பின்னர், பணியாளர் தங்கமணி அலுவலக அறை மற்றும் ரெக்கார்டு அறையை பூட்டி, சாவியை காவலர் குருநாதனிடம் ஒப்படைத்துவிட்டு வீட்டிற்குச் சென்றுள்ளார். அடுத்த நாள் பிப்.5 ஆம் தேதி காலை, பள்ளியின் கணக்காளர் செல்வலட்சுமி அலுவலக அறையின் கதவை திறக்க வந்தபோது, ஜன்னல் கம்பிகள் உடைக்கப்பட்டி ருப்பதை கண்டுள்ளார். தொடர்ந்து அறைக்குள் சென்று பார்வையிட்ட போது, கட்டுமான பணிகளுக்காக வைக்கப் பட்டிருந்த ரூ.20,000 மற்றும் ரெக்கார்டு அறையில் வைத்தி ருந்த ரூ.56,000 என மொத்தம் ரூ.76,000 பணம் திருடு போனது தெரியவந்தது. இதுகுறித்து பள்ளியின் தாளாளருக்கு தகவல் தெரி விக்கப்பட்ட நிலையில், அவரது அறிவுறுத்தலின் பேரில் பள்ளி முதல்வர் சிவக்குமார், பள்ளியின் சிசிடிவி காட்சி களை ஆய்வு செய்தார். அதில் அடையாளம் தெரியாத 2 நபர்கள் பள்ளிக்குள் நுழைந்து பணத்தை திருடிச் சென்றது பதிவாகியிருந்தது. இந்த காட்சிகளை கொண்டு, பள்ளி முதல்வர் சிவக் குமார் மல்லி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். புகாரின் பேரில் மல்லி காவல்நிலைய போலீசார் வழக்குப் பதிவு செய்து, திருட்டு சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மதுரை அரசுப்பள்ளி மாணவர்கள் 3 பேர் மலேசியாவிற்கு கல்விச்சுற்றுலா

**மதுரை, பிப்.9:**

தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை சார்பில் மாணவர்களின் கலைத்திறன், படைப்பாற்றல் மற்றும் தனித்திறன்களை ஊக்குவிக்கும் நோக்கில் ஆண்டுதோறும் கலைத்திருவிழா மற்றும் மன்றப் போட்டி கள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டி களில் மாநில அளவில் முதல் மூன்று இடங்க ளைப் பெறும் மாணவர்கள் அரசு செலவில் வெளிநாட்டு கல்விச்சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்படுவது சிறப்பம்ச மாகும். அந்த வகையில், கடந்த கல்வியாண் டில் மாநில அளவில் சிறப்பிடம் பெற்ற மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த அரசுப் பள்ளி மாணவர்கள் மூவர், மலேசியா நாட்டிற்கு கல்விச் சுற்றுலாவாக பிப்.9 ஆம் தேதி பயணம் மேற்கொள்ள உள்ளனர். மதுரை வெள்ளிவீதியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவி எம்.சாருலதா (தற்போது 8-ஆம் வகுப்பு) கவிதை எழுதும் போட்டியில் மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளார். அதே பள்ளியைச் சேர்ந்த மாணவி எஸ்.அமித்தா கதை சொல்லும் போட்டியில் மாநில அளவில் இரண்டாம் இடம் பிடித்து சாதனை புரிந்துள்ளார். மேலும், மேலூர் அருகே குறிச்சிபட்டி அரசு நடுநிலைப்பள்ளி யைச் சேர்ந்த மாணவன் ஜி.பாலாஜி, வான வில் மன்றப் போட்டியில் மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார். இந்த மூன்று மாணவர்களும் பிப்.9- ஆம் தேதி சென்னை விமான நிலையத்தி லிருந்து மலேசியா நாட்டிற்கு கல்விச் சுற்று லாவிற்காக புறப்பட உள்ளனர்.

# திருக்கோஷ்டியூர் கோயில் கும்பாபிஷேகம்: பக்தர்கள் தரிசனம்

**திருப்பத்தூர், பிப்.9:**





சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே திருக் கோஷ்டியூரில் சிவகங்கை தேவஸ்தானத்துக்கு உட்பட்ட சவுமிய நாராயணப் பெரு மாள் கோயில் உள்ளது. 108 வைணவத் தலங்களில் ஒன் றான இக்கோயில் மூலவர் கோபுரம் 108 அடி உயரத் தில் அஷ்டாங்க விமான மாக உள்ளது.

இது 'ஓம் நமோ நாராயணாய' எனும் மந் திரத்தை உணர்த்தும் வகை யில் 3 தளங் களாக உள் ளன. இதில் உச்சியில் உள்ள தளமான முதல் நிலைக்கு தங்கத் தகடு வேயும் திருப் பணி நடைபெற்றது. மொத் தம் 32 கிலோ அளவிலான தங்கத் தகடு வேயப்பட்டது. திருப்பணி முடிந்த நிலை யில் நேற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதையொட்டி, கடந்த 1-ம் தேதி முதல் பல்வேறு சிறப்பு பூஜைகள், ஹோமங் கள் நடைபெற்றன. நேற்று காலை 8 மணிக்கு யாக சாலையிலிருந்து கடம் புறப் பாடு நடைபெற்றது. காலை 9.55 மணிக்கு மூலவர் தங்க விமான கும்பத்தில் புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன், சிவகங்கை தேவஸ் தான பரம்பரை அறங் காவலர் மதுராந்தகி நாச் சியார், மேலாளர் இளங் கோ, இலங்கை முன்னாள் அமைச்சர் செந்தில் தொண் டமான், அறக்கட்டளைத் தலைவர்காந்தி, திருப்பணிகள் குழுத் தலைவர் ராஜ்மோகன் அருணகிரி, துணைத் தலை வர் ரவிச்சந்திரன், செயலா ளர் ஸ்ரீராம் பட்டாச்சாரியர், பொருளாளர் கதிர்வேலன், கவுரவத் தலைவர்கள் மணி கண்டன், ராமேசுவரன், பெருமாள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# கன்னியாகுமரி: திருப்பதி வெங்கடாஜலபதி கோவிலில் வருஷாபிஷேக விழா

**கன்னியாகுமரி, பிப்.9:**



கன்னியாகுமரி விவேகா னந்தபுரத்தில் உள்ள விவேகானந்தா கேந்திர வளாகத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் 5.5 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.22 கோடி செலவில் திருப்பதி வெங்கடாஜலபதி கோவில் கட்டப்பட்டு உள்ளது.


இந்த கோவிலில் மூலவராக வெங்கடாஜலபதியும், வலதுபுறம் ஸ்ரீதேவி தாயாரும், இடது புறம் ஸ்ரீ பூதேவி தாயாரும் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார்கள். மேலும் மூலஸ்தானத்தின் வலதுபுறம் பத்மாவதி தாயார் சன்னதியும் இடதுபுறம் ஆண்டாள் சன்னதியும் அமைந்துள்ளது. மூலவரின் எதிரே கருடாழ்வார் எழுந்தருளியிருக்கிறார். 40 அடி உயர கொடி மரமும் அமைந்துள்ளது.

இந்த கோவிலில் கடந்த 2019-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ந் தேதி மகா கும்பாபிஷேகம் நடந்தது. கும்பாபிஷேகம் நடந்து 7 ஆண்டுகள் நிறைவடைந்ததை அடுத்து வருஷாபிஷேக விழாவை, நட்சத்திர திதியின்படி சப்தமி திதியான இன்று நடத்த திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் ஆகம ஆலோசகர் அறிவுரை வழங்கினார்.

அதன்படி கன்னியாகுமரி திருப்பதி வெங்கடாஜலபதி கோவிலில் 7-வது ஆண்டு வருஷாபிஷேக விழா இன்று நடைபெற்றது. வருஷாபிஷேக விழாவை முன்னிட்டு இன்று காலை 6 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு சுப்ரபாத சேவையும் அதைத் தொடர்ந்து 8 மணிக்கு புண்ணியாகவாசனம், அங்குரார்ப்பணம், ரக்சாபந்தனம், விசேஷ ஹோமம், அஸ்டோத்திர ஸத கலசாபிஷேகம், உற்சவமூர்த்திக்கு மகா சாந்தி ஹோமம், பூர்ணாஹுதி, அச்சதாரோபனம் போன்றவை நடைபெற்றன. அதைத்தொடர்ந்து சதாகலசாபிஷேக பூஜை நடந்தது. பின்னர் சுவாமிக்கு திருமஞ்சனம் சாத்துதலும் 11 மணிக்கு யாகசாலை பூஜையும் நடந்தது. ஹோமம், அபிஷேகத்தைத்தொடர்ந்து தீர்த்தபிரசாதம் வழங்கப்பட்டது. பகல் 12 மணிக்கு அலங்கார தீபாராதனை நடந்தது.

# மயிலாடுதுறை புனுகீஸ்வரர் கோவிலில் லட்சதீப திருவிழா

**மயிலாடுதுறை, பிப்.9:**



மயிலாடுதுறையில் பழமை வாய்ந்த ஸ்ரீ சாந்தநாயகி சமேத புனுகீஸ்வரர் கோவில் அமைந்துள்ளது.

வேத காலத்தில் தட்சனின் யாகத்தில் கலந்துகொண்டதால் சாபம் பெற்ற இந்திரன், தனது சாபம் நீங்க புனுகு பூனை வடிவம் எடுத்து இங்கு உள்ள சிவன் மற்றும் சாந்தநாயகி அம்மனை வழிபாடு செய்ததாக புராண வரலாறு கூறுகிறது.

மேலும் அடர்ந்த வனமாக இருந்த பகுதியில் புனுகு பூனை உயர்ந்த வாசனை திரவியமான புனுகினை சாத்தி சிவலிங்கத்திற்கு பூஜை செய்தது என்றும், தஞ்சையை ஆண்ட சோழ மன்னன் இதனை அறிந்து காட்டை சீர்திருத்தி கோவிலை அமைத்தான் என்றும் வரலாறு தெரிவிக்கின்றது.

இத்தகைய பழமை வாய்ந்த இக்கோவிலில் 32ஆம் ஆண்டு லட்சதீப திருவிழா நடைபெற்றது.

திரளான பக்தர்கள் விளக்குகள் ஏற்றி சுவாமி மற்றும் அம்பாளை தரிசனம் செய்தனர்.

கோவில் வளாகத்தில் நமச்சிவாய வாழ்கஎன்றஎழுத்து வடிவில் அகல் விளக்குகள் ஏற்றப்பட்டன. சிவன், பார்வதி, விநாயகர், முருகர் உள்ளிட்ட கடவுள்களின் உருவங்களை ரங்கோலியாக வரைந்து, அருகில் அகல் விளக்குகளில் தீபம் ஏற்றினர். கோவில் முழுவதும் அகல் விளக்கு தீபங்கள் மற்றும் மின்னொளியால் ஜொலித்தது.




## கர்ப்பிணியான சிறுமி: போக்சோ வழக்குப் பதிவு

**திருவில்லிபுத்தூர், பிப்.9:**

வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் விரிவாக்க அலுவலராக பணிபுரிந்து வரும் ஜானகி என்பவருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த சிறுமியிடம் பிப்.5 ஆம் தேதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது வ.புதுப்பட்டியைச் சேர்ந்த அந்த சிறுமி, அதே ஊரைச் சேர்ந்த தனது அத்தை மகன் தங்கேஸ்வரனுடன் பழக்கம் ஏற்பட்டதாகவும், பின்னர் அது காதலாக மாறியதாகவும் தெரிவித்துள்ளார். இருவரின் வீட்டாரும் இதற்கு சம்மதிக்காத நிலையில், இருவரும் திருமணம் செய்து கொண்டு தனியாக குடித்தனம் நடத்தி வந்ததாக வும், தற்போது 7 மாத கர்ப்பிணியாக இருப்பதாகவும் சிறுமி கூறியுள்ளார். இதையடுத்து, சிறுமி சிகிச்சைக்காக திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்திருந்தபோது கிடைத்த தகவலின் அடிப்படையில் சிறுமியை திரு மணம் செய்து கர்ப்பிணியாக்கிய தங்கேஸ்வரன் மீது திரு வில்லிபுத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசா ரணை நடத்தி வருகின்றனர்.

## கொலை மிரட்டல் விடுத்த மூவர் மீது வழக்குப் பதிவு

**திருவில்லிபுத்தூர், பிப்.9:**

திருவில்லிபுத்தூர் கிருஷ்ணன் கோவில் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பானாங்குளம் பகுதியில், வருவாய்த்துறை சார்பில் ஆக்கிரமிப்பு அகற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த போது, நடந்து சென்ற நபரை வழிமறித்து தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாக மூவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பானாங்குளம் பகுதியைச் சேர்ந்த முருகேசன் என்ப வர் புதன்கிழமை அப்பகுதியில் நடந்து சென்ற போது, அதே ஊரைச் சேர்ந்த அய்யனார், அவரது மனைவி முத்து மற்றும் மகன் அஜித்குமார் ஆகிய மூவரும் அவரை வழி மறித்து தாக்கியதுடன், கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து முருகேசன் அளித்த புகாரின் பேரில், கிருஷ்ணன் கோவில் காவல் நிலைய போலீசார் வழக்குப் பதிவு செய்து, சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வரு கின்றனர்.

## தேவநேயப் பாவாணருக்கு முதலமைச்சர் புகழாரம்

**சென்னை, பிப்.9:**

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பிறந்தநாள் நினைவாக புகழாரம் செலுத்தி வெளியிட்டுள்ள பதிவில், "தனித்தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமாற் கலைஞர்; செடியாகத் தழைக்கச் செய்தவர் நிறைதமிழ் மலையாம் மறைமலையடிகள்;நானே மரமாக வளர்த்து வருகிறேன் எனத் தம் தமிழ்ப்பணியை மதிப்பிட்டார் பாவாணர். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தைத் தம் வாழ்நாள் கடமையாக எண்ணி உழைத்தார். இந்திய மொழிகளிலேயே வேறு எம்மொழிக்கும் இல்லாத சிறப்பாகத் தமிழின் தனித் தன்மையைப் பேணிக் காத்திட்ட தனித் தமிழறிஞர் பாவாணர் வாழ்க" என்று தெரிவித்துள்ளார்.

# இதயத்துக்கும் மூளைக்கும் பாதுகாப்பு! இந்த கொழுப்பு குறைந்தால் பாதிப்பு! எச்சரிக்கை...

ஒமேகா3 (OMEGA 3) கொழுப்பு அமிலங்கள் உடல் ஆரோக்கியத்தில் நேர்மறையானவிளைவுகளை ஏற்படுத்துகின்றன. உடல் சீராக இயங்க ஊட்டச்சத்துக்களும் தாதுக்களும் எந்த அளவுக்கு அவசியமானதோ, அதே அளவுக்கு ஆரோக்கியமான கொழுப்புகளும் மிகவும் அவசியமாகும். ஆரோக்கியமான கொழுப்பு அமிலங்களில் மிகவும் முக்கியமானது ஒமேகா-3 (OMEGA 3) ஆகும். நம் உடல் இந்த கொழுப்பு அமிலத்தை இயற்கையாக உருவாக்குவது இல்லை என்பதால், இந்த கொழுப்பு சத்தை நாம் உணவின் மூலமாகவோ அல்லது ஊட்டச்சத்து மருந்துகளின் மூலமாகவோ பெற முடியும்.




ஒமேகா-3 ஏன் முக்கியமானது?

ஒமேகா-3 என்பது வெறும் கொழுப்பு மட்டுமல்ல, அது செல்களின் சவ்வு கட்டமைப்பிற்கு அடிப்படை தேவையாகும். இந்த கொழுப்பு அமிலங்களில் மூன்று முக்கிய வகைகள் உள்ளன. அவை ALA, EPA மற்றும் DHA ஆகும். முதலில் ALA (ALPHA-LINOLENIC ACID) வகை கொழுப்பு அமிலம் தாவர உணவுகளில் காணப்படுகிறது. EPA (EICOSAPENTA ENOIC ACID) கொழுப்பு அமிலம் வீக்கங்களை குறைக்க உதவுகிறது. DHA (DOCOSAHE XAENOIC ACID) வகை கொழுப்பு அமிலம் மூளை மற்றும் கண் ஆரோக்கியத்திற்கு அத்தியாவசியமானது.

ஒமேகா - 3 இன் ஆரோக்கிய நன்மைகள்:

இதயம்: சுருக்கமாக கூறினால் ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள் இதயத்தையும் மூளையையும் பாதுகாக்கும் ஒரு கவசமாக செயல்படுகின்றன. ஒமேகா-3 இரத்தத்தில் உள்ள ட்ரைகிளிசரைடு அளவைக் குறைத்து, இதயத் துடிப்பு சீராக இருக்க உதவுகிறது. மேலும், இது இதயத் தமனிகளில் கொழுப்பு படிவதைத் தடுத்து, இரத்த நாளங்களை மென்மையாக வைத்திருக்கும் எண்டோடெலியல் செயல்பாட்டை மேம்படுத்துகிறது.

மூளை: மூளையின் பகுதிகள் 60% கொழுப்பால் ஆனது. அதில் பெரும்பகுதி DHA ஆகும். ஒமேகா-3 செரோடோனின் மற்றும் டோபமைன் ஆகிய ஹார்மோன்களை தூண்டி விடுகிறது. இந்த மகிழ்ச்சி ஹார்மோன் சுரப்பு மனநலத்தை மேம்படுத்தும். இதனால் ஞாபகமறதி நோய் (ALZHEIMER'S) தாக்கும் பாதிப்பில் இருந்து தப்பிக்க முடியும். மேலும், இது மனச்சோர்வு மற்றும் பதட்டத்தைக் குறைக்க உதவுகிறது.

புற்றுநோய்: ஒமேகா-3 இயற்கையாகவே வீக்கத்தைக் கட்டுப்படுத்த தொடங்குகிறது. உடலில் ஏற்படும் நாள்பட்ட வீக்கமே புற்றுநோய் மற்றும் மூட்டுவலிக்கு முக்கிய காரணமாக இருக்கிறது. இவற்றில் இருந்து ஒமேகா 3 நிவாரணம் அளிக்கிறது.

ஒமேகா 3 பற்றாக்குறையால் ஏற்படும் நோய் அபாயங்கள்:

சர்வதேச அளவில் 80% மக்கள் ஒமேகா-3 ஊட்டச்சத்து குறைபாட்டுடன் இருப்பதாக சில ஆய்வுகள் கூறுகின்றன. இதனால், சருமத்திற்கு ஒமேகா3 (OMEGA 3) கொழுப்பு கிடைக்காமல் வறண்ட சருமம், முடி உதிர்தல் ஆகியவை ஏற்படுகின்றன. இது இதய பாதிப்பையும் பக்கவாதம் ஏற்படும் அபாயத்தையும் அதிகரிக்கிறது. விழித்திரை படல ஆரோக்கியத்திற்கும் இந்த கொழுப்பு அவசியமானது. பற்றாக்குறையாக இருந்தால் கண்பார்வையும் குறையத் தொடங்கும்.

ஒமேகா-3 குறைபாட்டை எவ்வாறு அறிவது?

இரத்தப்பரிசோதனையில் ஒமேகா 3 இண்டெக்ஸ் சோதனை செய்வதன் மூலம், உடலில் உள்ள ஒமேகா3 கொழுப்பு அமிலத்தின் அளவை கண்டறியலாம். இந்த சோதனையில் இரத்த சிவப்பணுக்களில் உள்ள EPA மற்றும் DHA அளவு கணக்கிடப்படுகிறது.

இதில் 8% அல்லது அதற்கு மேல் இந்த கொழுப்பு அமிலங்கள் இருப்பது பாதுகாப்பானது. இந்த அளவு 4%க்குக் கீழ் இருந்தால், அந்த நபர் இதயம் மற்றும் மூளை நோய்க்கான அபாயத்தில் இருக்கிறார்.

ஒமேகா 3 கொழுப்பை பெறுவது எப்படி?

உணவில் வாரத்திற்கு இருமுறை மீன் சாப்பிடலாம். சால்மன், மத்தி மற்றும் கொழுப்பு நிறைந்த மீன்களை உணவில் சேர்த்துக் கொள்ளவும். தினசரி ஒரு கைப்பிடி அளவு ஒமேகா3 (OMEGA 3) நிறைந்த ஆளிவிதை, வால்நட்ஸ், சியா விதைகள் ஆகியவற்றை சாப்பிடுவதன் மூலம் பெறலாம். மருத்துவரின் பரிந்துரைப் படி மீன் எண்ணெய் மாத்திரை சாப்பிடுவதன் மூலமும் பெறலாம். ஒமேகா-3 என்பது ஒரு சத்து மட்டுமல்ல, அது நீண்ட கால ஆரோக்கியத்திற்கான முதலீடு. இதன் மூலம் உங்களின் இதயம் மற்றும் மூளையைப் பாதுகாக்க முடியும்.

# "வாடகை அழுகை"

அவன் தொழில்
விசித்திரமானது.
அழ
முடியாதவர்களுக்காக
அவர்கள் சார்பில்
அழுவது.

அவன் என்பவன்
அமுதன்.
நவீன உலகில்,
நாகரீக சமுதாயத்தில்
"உணர்ச்சிகள்
தேவையில்லை" என்று
எந்திர வாழ்க்கையை
வாழக் கற்றுக்
கொண்டவர்கள்தான்
அதிகம்.
இறப்புச் செய்தி
வந்தாலும் கண்கள்
உலர்ந்தே இருந்தன.
அப்போதுதான் அவர்கள்
அழைப்பது அமுதனை.
"மூத்தோர் மரணமா?...
ஒரு மணி நேரம்...
இவ்வளவு ஆகும்"
"இள வயதினர்
மரணமா?.... அரை
மணி நேரம்... இவ்வளவு
ஆகும்"

ஒவ்வொரு
அழுகைக்கும்
குறிப்பிட்ட கட்டணம்
இருந்தது.

அவன்
கண்ணீரையும்
காசாக்கப்
பழகினான்.
கண்கள் காலக்
கணக்கில்
ஈரமாவதற்குப்
பழகின.

இறுதிச்சடங்குகளில்
அவன் அழும்போது,
சுற்றியிருந்தவர்கள்
நிம்மதியாக மூச்சு
விடுவார்கள்.
"யாரோ ஒருவன்
நமக்காக அழுகிறான்"
என்கிற நம்பிக்கையில்.

அவன் அழுகையில்
உண்மை இல்லை.
நேர்மை மட்டும்
இருந்தது.

ஒரு நாள்,
மருத்துவமனையிலிருந்து
அழைப்பு.

"மிஸ்டர்.அமுதன்...
உங்கள் அம்மா..."
அந்த வார்த்தை
முழுமையடையவில்லை.

ஓடினான்.
அம்மாவின் உடல்
எரியத் தொடங்கியது.
ஆனால், அவன்
கண்களில்
இன்னும்
ஈரமில்லை.
முயன்றான். மனதைப்
பிழிந்தான். பழைய
நினைவுகளை ரீவைண்ட்
செய்தும் பார்த்தான்.
ஒரு துளி கூட
வரவில்லை.
அப்போதுதான்
இன்னொருவன்
வந்தான். வயது
முப்பத்தைத்
தாண்டியவன்.
கண்களில் புரொபஷனல்
ஈரம்.

"யார் மரணம்?"
கேட்டான்.

"அம்மா," என்றான்
அமுதன்.
அந்த மனிதன்
தலையசைத்தான்.
அடுத்த சில நொடிகளில்
வெடித்து அழுதான்.
உண்மையைப்
போலவே நடித்த துயரம்.
சுற்றியிருந்தவர்கள்
நிம்மதியாக
நிமிர்ந்தார்கள்.
அமுதன் அந்த
மனிதனைப் பார்த்தான்.
அவனைப் போலவே
அழுவதை
காசுக்காகக்
கற்றுக்கொண்ட
இன்னொரு மனிதன்.





-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# வால்மீகி !!

இப்படி ஒரு விளம்பரம்..
அன்று காலையில் வந்த செய்தித்தாள்களில் வந்த ஒரு விளம்பரம் எல்லோரையும் ஒருவருக்கு ஒருவர் பார்த்து பேசும்படியாக அமைந்தது. இப்படி ஒரு விளம்பரமா , செய்தித்தாள்கள் இதை அனுமதிக்கலாமா , கொடுத்தவர் ஒரு மன நிலை பாதித்தவரா , இப்படி போனால் வருங்காலம் எப்படி இருக்கும் , இதை உடனே கண்டிக்கவேணும் , வளர விடக்கூடாது , அரசாங்கம் கொடுத்தவர் மேல் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நகரம் முழுவதும் பரபரப்பான பேச்சுக்கள். இந்த விளம்பரம் பார்த்து யார் செல்வார்கள் என்று பேசினார்கள். தெருவுக்கு தெரு இதே பேச்சுக்கள். செய்தித்தாள்கள் விற்பனை அன்று அமோகம்.
அப்படி என்ன தான் அந்த விளம்பரம் என்று ஜான் ஒரு பேப்பர் வாங்கிப் பார்த்தான். விளம்பரம் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். வீட்டிற்கு வந்து மனைவியிடம் காண்பித்தார். மேரி அதைப் பார்த்ததும் இப்படி ஒரு விளம்பரமா என்று சொல்லாமல் நன்கு ஆழ்ந்து படித்தார். படித்து ஒரு புன்னகை பூத்தார்.
ஆஹா வித்தியாசமான விளம்பரம் என்று சொல்லி மகிழ்ந்தார். ஜான் மறுபடியும் ஒரு முறை படித்தார். அதில் அவருக்கு ஒரு ஆர்வம் உண்டானது. அந்த விளம்பரத்தில் என் பெற்றோர்கள் விலைக்கு. யார் அதிகத்தொகை சொல்கிறார்களோ அவர்களுக்கே பெற்றோர்கள் என்று இருந்தது. நம் வீட்டில் பெரியவர்கள் இல்லை பிள்ளைகளும் தாத்தா பாட்டி பாசம் அறிந்ததில்லை. எனவே அங்கு சென்று பார்த்தால் என்ன என்று நினைத்து மேரியிடம் கூற அவர் போகலாம் என்ன வென்று அங்கு சென்று அறியலாம் என்றார். மேரி பெரியவர்களை பணம் கொடுத்து கூட்டி வருவது மனதிற்கு வருத்தமாக உள்ளது என்றார். சரி நாம் நாளை போன் செய்து விட்டு செல்லலாம் என்றார். மறுநாள் ஜான் மேரி தங்களது பெண் ப்ரீத்தியுடன் கிளம்பினார்கள். அவர்கள் சென்ற இடம் சற்று மலைப்பாங்கான இடமாதலால் வாகனத்தில் மெதுவாகவே செல்ல நேர்ந்தது. இவர்கள் தேடித் சென்ற வீடு சற்று உள்புறமாக இருந்தது. ஒரு வழியாக வீட்டை அடைந்தார்கள். அழைப்பு மணியை அழுத்த சில மணித்துளிகள் சென்று ஒரு வயதானவர் வந்து இவர்களை உள்ளே அழைத்துச் சென்றார். ஜான் தான் கொண்டுவந்திருந்த சிற்றுண்டியை அவருக்கு தந்தார். அவர் தனது மனைவியை அழைத்து இவர்களை அறிமுகம் செய்து இவர்கள் தந்த சிற்றுண்டியை தந்தார். மிகவும் நன்றி என இருவரும் கூறினார்கள். சிற்றுண்டியை உண்டபின் இருவரும் நல்ல சுவையாக இருந்தது என்றார்கள். பெரியவர்கள் இருவரும் தங்களை பற்றி விரிவாக ஏதும் கூறாமல் வேறு சில அநுபவங்களை கூறினார்கள். ஜான் நடுநடுவே எங்கே உங்கள் மகன் என்று கேட்க , பதில் தராமல் பேச்சை மாற்றினார்கள். இப்படி விளம்பரம் தரலாமா என்று ஜான் கேட்க சிரிப்பே பதிலாக அமைந்தது அவர்களிடமிருந்து. பணம் தந்து பெற்றோர்களை அடுத்தவர் பெறுவது மனதிற்கு வருத்தத்தை தானே தருகிறது என்றதும் இது ஒரு வித்தியாசமான யாரும் சொல்லாத ஒன்று தானே என்றார்கள். இதுவரை யாராவது வந்தார்களா என்று கேட்க பெரியவர் நிறைய பேர் வந்தார்கள் வந்து இப்படி விளம்பரம் கொடுத்த உங்கள் மகனை கோர்ட்டில் நிறுத்தப் போகிறேன் என்று கூறிவிட்டு சென்றார்கள் என்றார். ஜான் மறுபடியும் மகன் எங்கே என்றதும் அந்த வீட்டு அம்மா வருவார் வெளியே சென்றுள்ளார் என்றதும் ஜான் நான் அவரை பார்த்து விட்டு தான் செல்வேன் என்றார். பெரியவர்கள் இதற்கும் ஒரு புன்னகையே பதிலாகத் தந்தார்கள்.
நேரம் கடந்து கொண்டே சென்றது. ஜான் அவர்களிடம் உங்களது பெயர்கள் கூறவில்லையே என்றதும் நீங்கள் கேட்கவில்லையே என்றார்கள். எனது பெயர் தாம்ப்ஸன் இவர் பெயர் ஹெலன் என்றார். இதற்குள் ஜான் பெண் தாத்தா என்று கூறி தாம்ப்ஸன் மடியில் போய் அமர்ந்தார். அப்போது அவர் உன் பெயர் என்ன என்று கேட்க ப்ரீத்தி என்றார். ஹெலன் நல்ல பெயர் என்றார். அவர்கள் ப்ரீத்தியுடன் அலவலாக ஆரம்பித்தனர். நேரம் செல்வது அவர்களுக்கு தெரியவில்லை. ஜான், தாம்ப்ஸன் இடம் மதிய உணவு ஏற்பாடு பண்ணட்டுமா என்றதும், ஹெலன் சற்று முன் உங்களுக்கும் சேர்த்து சாப்பாடு தயாராகிறது என்றார். எதற்கு வீண் சிரமம் என்ற ஜானிடம் நீங்கள் தந்த சிற்றுண்டியை நாங்கள் மறுக்காமல் ஏற்றுக்கொண்டோமே என்றார். மேரி இடைமறித்து நாங்கள் உங்களுடன் உணவு அருந்துகிறோம் என்றார். உணவு உண்டவுடன் ஜான், உங்கள் சுவையான விருந்துக்கு நன்றி என்றார். ப்ரீத்தி தாத்தா உணவு சூப்பர் என்றதும், ஹெலன் அவரைக் கட்டி முத்தம் இட்டார். நேரம் கடந்து கொண்டே சென்றது.
ஹெலன் தாம்ப்ஸன் இருவரும் மேரியை பார்த்து இனி நீங்கள் எங்களுடன் தங்கலாமே நிரந்தரமாக என்றதும், ஜான் நாங்கள் இங்கிருந்து நான்கு கிலோமீட்டர் தொலைவில் உள்ளோம் என்றார். நாங்கள் சொந்த வீட்டில் உள்ளோம் என்றார். தாம்ப்ஸன் நீங்கள் எங்களுடன் இணைவதை நாங்கள் விரும்புகிறோம். இந்த வீட்டில் ப்ரீத்தி ஓடி விளையாடவேண்டும் என்றார். ப்ரீத்தி அப்பா அம்மா ,தாத்தா பாட்டி பாவம் நாம் இவர்களுடன் இருக்கலாமே என்றார். ஹெலன் மேரியிடம் உங்கள் அப்பா அம்மா என்று கேட்க மேரி, அவர்கள் இந்த உலகத்தில் இல்லை என்றார். ஜான் உடனே இதே நிலைமை தான் எனக்கும் என்றார். நல்லதா போச்சு, இனிமேல் ப்ரீத்தி தாத்தா பாட்டி நாங்கள் தான் என்றார்கள். ஜான் மேரியை பார்க்க இருவரும் அங்கேயே கலந்து ஆலோசிக்க ஆரம்பித்தார்கள். இடையில் ஜான் அவர்களிடம் உங்கள் மகன் இதற்கு ஒத்துக்கொள்ள வேண்டுமே என்றார்.
ஹெலன் இவர் மேயர்பதவி வகித்தவர். நான் பக்கத்துக்கு பள்ளியில் தலைமை ஆசிரியராக பணி புரிந்தேன் . உங்கள் மகளை இந்த பள்ளியிலே சேர்த்து விடலாம். அவர் படிப்பு , பள்ளி சென்று அழைத்தல் எல்லாம் தாத்தா பார்த்துக்கொள்வார். நான் பாடம் சொல்லிக்கொடுப்பேன். இந்த வீட்டில் நீங்கள் எங்கு வேண்டுமானாலும் தங்கலாம். அப்போது இடைமறித்த ஜான், உங்கள் மகன் இன்னும் காணுமே. அவர் வந்து ஏதும் சொன்னால் என்றதும், தாம்ப்ஸன் இனிமேல் உண்மையைக் கூறி விடுகிறேன் ஜான் மேரியைப் பார்க்க தாம்ப்ஸன் எங்களுக்கு வாரிசுகள் கிடையாது. ஹெலன் தான் இந்த மாதிரி விளம்பரம் கொடுப்போம் மக்கள் மத்தியில் என்ன விமர்சனங்கள் வருகிறது, நல்ல மனிதர்கள் யாராவது வருவார்கள் என்றதும் , ஹெலன் நிறைய அவச்சொற்களைக் கேட்டோம். கடைசியில் நல்ல பலனாக நீங்கள் வந்தீர்கள், நாங்கள் இந்த விளம்பரம் யாரையாவது பாதித்திருந்தால் மன்னிக்கவும் என்று விளம்பரம் தந்து விட்டோம் என்றார். ஜான், மேரி இருவரும் நாங்கள் எங்கள் வீட்டை இனிமேல் வயதானவர் , ஆதரவு அற்றவர்கள் தங்கும் விடுதியாக மாற்றப் போகிறோம் என்றார்கள். அதற்கு உண்டான செலவுகளை நாங்கள் ஏற்கப் போகிறோம் என்றார்கள். ஹெலன் விளம்பரம் நல்ல கலக்கலையே சமுதாயத்தில் ஏற்படுத்தி உள்ளது என்றார் தாம்ப்ஸன் நமக்கு இல்லாத மகனை விளம்பரத்தில் கொடுத்தோம் ப்ரீத்தி வந்து குறையையை தீர்த்தார் என்றார்.



மு.வெ.சம்பத்

# திருவிளையாடல் புராணம் 21



▪சிவ.முத்து
லட்சுமணன்
போச்சம்பள்ளி.

## கல் யானைக்குக் கரும்பு தந்த படலம்

மதுரை நகரில் சிவபெருமான் நடத்திய அறுபத்து நான்கு திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று. மன்னன் ஒருவன் சிவபெருமானின் திருவிளையாடல்களைப் பற்றி அறிய விரும்பியபோது, சிவபெருமான் கல்லால் ஆன ஒரு யானையை உருவாக்கி, அதற்கு கரும்புகளை ஊட்டியதாக கூறப்படுகிறது. இந்தக் கதை சிவபெருமானின் எல்லையற்ற கருணையையும், வல்லமையையும் குறிக்கிறது.

சிவபெருமான் மதுரையை ஆண்ட அபிஷேகப் பாண்டிய மன்னனுக்கு முக்தியளிக்க திருவுளம் கொண்டார். எல்லாம்வல்ல சித்தராக உருமாறி மதுரைக்கு வந்தார். மீனாட்சி அம்மன் கோயிலில் சென்று உட்கார்ந்து கொண்டார். கோயிலுக்கு வரும் மக்களிடம் எல்லாம் தன்னுடைய சித்து வேலைகளால் பலவித அற்புதங்களை செய்தார். மண்ணைப் பொன்னாக்குதல், கிழவனை வாலிபனாக்குதல், வாலிபனை கிழவனாக்குதல், ஊனமுற்றவர்களை குணமாக்குதல் என அற்புதங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன.
மதுரை மீனாட்சி அம்மன் கோயிலிலேயே தங்கியிருந்து சித்து வேலைகளை செய்து கொண்டிருந்த எல்லா வல்ல சித்தரைக் காணக் கூட்டம் கூட்டமாக மக்கள் வந்தனர். வந்தவர்கள் அனைவரும் சித்தரின் சித்து வேலைகளைக் கண்டு அதிசயித்துப் போயினர்.
அவர் செய்யும் சித்து வேலைகளைப் பற்றிக் கேள்விப்பட்ட மன்னன் அவரை அழைத்து வரும்படி மந்திரியிடம் கூறினார். ஆனால், சித்தர் பெருமானோ அரசன்தான் தன்னை வந்து காண வேண்டும் என்று பதில் சொல்லி அனுப்பி விட்டார்.

இதைக் கேட்டதும் அரசனே சித்தரைக் காணச் சென்றான். அரசன் சித்தரைப் பார்த்து, "இந்த ஊருக்கு வந்து ஏன் சித்து வேலைகள் செய்கிறீர்கள்? தங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான். அதற்கு சித்தர் பெருமான் தான் காசியிலிருந்து வருவதாகவும் தனக்கு ஒன்றும் தேவையில்லை என்றும், அரசனுக்கு வேண்டுமானால் தேவையானதை தன்னிடம் கேட்டுப் பெறலாம் என்றும் கூறினார்.

இதை ஆணவப் பேச்சாக எண்ணி வெகுண்ட அரசன், சித்தரை சோதிக்க நினைத்தான். தன் அருகில் ஒருவர் கையில் கரும்பை வைத்துக் கொண்டு நிற்பதைக் கண்டான். அதனை வாங்கி சித்தரிடம் கொடுத்து, "தாங்கள் இக்கரும்பினை இந்திர விமானத்தைத் தாங்கும் கல் யானை உண்ணும்படி செய்வீர்களா?" என்றான் கேலியாக.
சித்தர் அந்தக் கரும்பினை தன் கையில் வாங்கினார். கையில் கரும்புடன் கல் யானையைப் பார்க்க அந்தக் கல் யானைக்கு உயிர் வந்தது. தன் பீடு மிக்க நடையுடன் முன்னேறி வந்த அந்த யானை, சித்தர் கையில் இருந்த கரும்பை உண்டது. அத்துடன் மன்னர் அணிந்திருந்த முத்துமாலையை பிடுங்கி உண்டது. இதைப் பார்த்து அரசனின் சேவகர்கள் சித்தர் மேல் பாய, அவர் அவர்களை ஏறிட்டு நோக்கினார்.
அனைவரும் கற்சிலைகளாக மாறி விட்டனர். இதனால் நடுநடுங்கிப் போன அரசன், சிவபெருமானே சித்தராக வந்துள்ளார் என்று உணர்ந்து அவரை வணங்கி மன்னிப்பு கேட்டான். கரும்பைத் தின்ற யானை, திரும்பவும் கல் யானையாக மாறி, தனது இடத்தில் போய் நிற்க, கற்சிலைகளாக உருமாறிய சேவகர்கள் உயிர் பெற்றெழுந்தார்கள். அபிஷேகப் பாண்டிய மன்னன் சிவபெருமானிடம் தனக்குப் பிள்ளை வரம் வேண்டினான்.

கல் யானை கரும்பைத் தின்ற' இந்தத் திருவிளையாடல் நடந்தது பொங்கல் தினத்தன்று. அபிஷேகப் பாண்டியனுக்கு விக்கிரமன் என்ற ஆண் குழந்தை பிறந்து கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினான். அபிஷேகப் பாண்டியன் மகனுக்கு பட்டாபிஷேகம் செய்து முக்தி அடைந்தார்.

இந்த மகத்தான நிகழ்வைக் கொண்டாடும் வகையில் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் அன்றும் கல் யானைக்குக் கரும்பு தரும் லீலை ஒரு விழாவாக நடத்தப்பட்டு வருகிறது. மீனாட்சி அம்மன் கோயிலில் சோமசுந்தரேஸ்வரர் திருச்சுற்றில் இருக்கும் வெள்ளை யானைகளை நம்மால் காண முடியும். அந்த அற்புதத்தின்படி கரும்பு தின்றதாகக் கூறப்படும் கல் யானையை மீனாட்சி அம்மன் கோயிலில் சுவாமி சன்னிதிக்கு இடது புறத்தில் இன்றும் நாம் காணலாம்.

(தொடரும்)

# மகா சிவராத்திரி 2026 பஞ்சபூத தலங்கள் தவிர தமிழகத்தில் செல்ல வேண்டிய டாப் 10 சக்தி வாய்ந்த சிவாலயங்கள்



*மகா சிவராத்திரி அன்று இரவு முழுவதும் கண் விழித்து, சிவ பூஜை, சிவ அபிஷேகங்களை தரிசிப்பதால் பாவங்கள் நீங்கி, புண்ணியம் கிடைக்கும். இரவு முழுவதும் நடைபெறும் நான்கு கால பூஜைகளை தரிசிக்க அனைத்து சிவன் கோவில்களிலும் பக்தர்கள் கூடுவது வழக்கம். கன்னியாகுமரி மாவட்டத்தில் இரவு முழுவது ஒவ்வொரு சிவன் கோவிலான சென்று வழிபாடு செய்யும் வழக்கம் உள்ளது.

› இந்த ஆண்டு மகா சிவராத்திரி பிப்ரவரி 15ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வருகிறது. அன்றைய தினம் தமிழகத்தில் சென்று வழிபட வேண்டிய மிகவும் சக்தி வாய்ந்த சிவன் கோவில்களில் மிக முக்கியமான, பிரபலமான ஆலயங்கள் சிலவற்றை பற்றி தெரிந்து கொள்ளலாம்.

**மகா சிவராத்திரி வழிபாடு :**

› மகா சிவராத்திரி என்பது சிவ பெருமானை வழிபடுவதற்குரிய நாள் மட்டுமல்ல. இது பிரபஞ்ச ஆற்றல் அதிகரித்து காணப்படும் ஒரு சக்தி வாய்ந்த நாளாகும். இந்த நாளில் உலகம் முழுவதிலும் உள்ள சிவ பக்தர்கள் விரதம் இருந்து, இரவு முழுவதும் கண் விழித்து, சிவ வழிபாடு செய்வது வழக்கம். மகா சிவராத்திரி என்பது சிவபெருமானுக்கும், பார்வதி தேவிக்கும் திருமணம் நடைபெற்ற நாளாக கருதப்படுகிறது. அதே போல் சிவபெருமான் தன்னுடைய ஆனந்த தாண்டவத்தை நிகழ்த்தி காட்டிய இரவாகவும் கருதப்படுகிறது. சிவனின் ஆற்றல் அதிகரித்து காணப்படும் இந்த நாளில் சிவபெருமானின் அருளை பெற மகாசிவராத்திரி அன்று தமிழகத்தில் உள்ள சில முக்கியமான, பழமையான கோவில்களுக்கு சென்று தரிசனம் செய்வது சிறப்பானதாகும்.

**சிறப்புமிக்க சிவ தலங்கள் :**

வழக்கமாக தமிழகத்தில் சிவ தலங்களில் என்றால் பஞ்சபூத தலங்களான காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோவில், திருவானைகாவல் ஜம்புலிங்கேஸ்வரர் கோவில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவில், சிதம்பரம் நடராஜர் கோவில், காளஹஸ்தி காளாத்தீஸ்வரர் கோவில் ஆகியனை தான் நம்முடைய நினைவிற்கு வரும். ஆனால் இந்த பஞ்ச பூத தலங்களை தவிர சிறப்பு மிக்க, புகழ்பெற்ற, பல மடங்கு புண்ணியம் தரும் சிவ தலங்கள் உள்ளன. அவர்களில் முக்கியமான 10 கோவில்களை இங்கு தெரிந்து கொள்ளலாம்.

**மகா சிவராத்திரியன்று செல்ல வேண்டிய 10 சிவன் கோவில்கள் :**

1. தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில், தஞ்சாவூர் - பெரிய கோவில், பெரிய லிங்கம், பெரிய நந்தி என அனைத்து பெரிய என சிறப்பித்து கூறப்படும் தலம். மிக பழமையான, பல அற்புதங்கள், ஆச்சரியங்கள் நிறைந்த சிவ தலம் இது. மிகப் பெரிய சிவ தலமாகவும், பாரம்பரிய சின்னமாகவும், பழமையான சிவாலயமாகவும் விளங்கும் தலம். ஆயிரம் ஆண்டுகள் பழமையான இந்த பெருவுடையாரை தரிசனம் செய்வதே மிகப் பெரிய பாக்கியம் ஆகும்.

2. மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில், மதுரை - பாடல் பெற்ற சிவ தலங்களில் ஒன்றாவும், சக்தி பீடங்களில் ஒன்றாகவும், மிகப் பெரிய அம்மன் கோவிலாகவும் விளங்கும் ஒரே தலம் மதுரை. சிவ பெருமான் தன்னுடைய 64 திருவிளையாடல்களையும் நிகழ்த்திக் காட்டிய தலம். சிவ பெருமான் ஆண்டவனாக மட்டுமின்றி அரசனாகவும் ஆட்சி புரியக் கூடிய தலம். சொக்கநாதர், சுந்தரேஸ்வரர் என பல பெயர்கள் கொண்ட இத்தல சிவனை பற்றியும், இக்கோவில் பற்றியும் சொல்லிக் கொண்டே போகலாம்.

**உலகின் முதல் சிவன் கோவில் :**

3. திருஉத்திரகோசமங்கை திருக்கோவில், ராமநாதபுரம் - உலகின் முதல் சிவன் கோவில் என போற்றப்படும் பெருமைக்குரிய தலமாகும். மிகப் பெரிய மரகத நடராஜர் அமைந்துள்ள ஒரே தலம். சகஸ்ரலிங்கம் உருவாக காரணமான தலமாகவும், சிவ பெருமான் நிரந்தரமாக வீற்றிருந்து அருள்புரியும் தலமாக கருதப்படும் கோவில் இது. வாழ்நாளில் ஒரு முறையாவது சென்று தரிசிக்க வேண்டிய சிவ தலங்களில் இதுவும் ஒன்றாகும்.

4. கபாலீஸ்வர் கோவில், சென்னை - சென்னையில் உள்ள சப்தசிவ தலங்களில் இதுவும் ஒன்று. அம்பிகை, மயில் உருவில் வந்து ஈசனை வழிபட்டு, வரம் பெற்ற தலம். முருகப் பெருமானை சிவனை வழிபட்டு சக்திவேல் பெற்ற தலம். பிரம்ம தேவரே தன்னுடைய பாவங்கள் நீங்க வழிபட்ட தலம் என ஏராளமான சிறப்புகளைக் கொண்ட சென்னை மியலாப்பூரில் அமைந்துள்ள கபாலீஸ்வரர் கோவில்.

**அனைத்து தோஷ பரிகார தலம் :**

5. சங்கமேஸ்வரர் கோவில், பவானி, ஈரோடு - அனைத்து விதமான தோஷங்கள், பாவங்கள் ஆகியவை நீங்குவதற்கான பரிகார தலமாக விளங்கும் கோவில் இது. விஸ்வாமித்ரரால் காயத்ரி மந்திரம் சொல்லி பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கத்தை இங்கு தரிசனம் செய்யலாம். தென்னிந்தியாவின் திரிவேணி சங்கமம் என்று அழைக்கப்படும் புண்ணிய தலம் இது.

6. அர்த்தநாரீஸ்வர் கோவில், திருச்செங்கோடு - ஈசன், தன்னுடைய உடலில் பாதியை அம்பிகைக்கு அளித்து சிவன் பாதி, சக்தி பாதியாக காட்சி தரும் தலம். மலைமீது சுயம்பு உருவமாக ஈசனும், அம்பிகையும் உறைந்திருக்கும் தலம். உலகிலேயே உமையொரு பாகனாக ஈசன் காட்சி தரும் சிறப்பு மிக்க தலம். மலையே லிங்கமாக காட்சி தரும் தலம். இங்கு பெருமாளும் அருள்புரிவதால் இந்த மலையை கிரிவலம் வந்தால் கைலாயத்தையும், வைகுண்டத்தையும் வலம் வந்து வழிபட்ட புண்ணியம் கிடைக்கும்.

**யம பயம் போக்கும் சிவ தலம்**

7. திருவாரூர் தியாகராஜர் கோவில் - கடவுள்கள் அனைவருக்கும் மகாராஜா என ஈசன் போற்றப்படும் தலம். ஆசியாவின் மிகப் பெரிய தேர் அமைந்துள்ள கோவில். சைவ மரபில் பெரிய கோவில் என போற்றப்படும் ஒரே கோவில். திருவாரூரில் பிறந்தே முக்தி என்பார்கள். இங்குள்ள நடராஜரின் திருமுகத்தையும், கரங்களையும் மட்டுமே தரிசிக்க முடியும். வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே பாதத்தை தரிசிக்க முடியும்.

8. அமிர்தகடேஸ்வரர் கோவில், திருக்கடையூர் - மார்கண்டேயருக்காக எமனையே ஈசன் வதம் செய்த தலம். தன்னுடைய பக்தனுக்காக அமாவாசை திதியில் அம்பிகை முழு நிலவு காட்டிய தலம். எம பயம் போக்கி, தீர்க்க ஆயுள் அருளக் கூடிய தலம். சொல்லிக் கொண்டே செல்லும் அளவிற்கு அளவில்லாத சிறப்புக்களை கொண்ட அற்புத தலம்.

**பாவம் போக்கும் புண்ணிய தலம் :**

9. ராமநாத சுவாமி கோவில், ராமேஸ்வரம் - இந்தியாவில் உள்ள முக்தி தலங்களில் ஒன்றாகவும், ஜோதிர்லிங்க தலங்களில் ஒன்றாகவும் விளங்கும் தலம். ஸ்ரீராமபிரானே தன்னுடைய பாவம் நீங்க வழிபட்ட தலம். அக்னி தேவர் உள்ளிட்ட பலரும் வழிபட்டு, பாவம் மற்றும் சாப நிவர்த்தி பெற்ற தலம். இங்குள்ள 22 தீர்த்தங்களில் நீராடி சிவனை வழிபட்டால் பித்ருதோஷம் உள்ளிட்ட அனைத்து தோஷங்களும் நீங்கும்.

10. நெல்லையப்பர் கோவில், திருநெல்வேலி - தமிழகத்தில் உள்ள மிக பழமையான சிவ தலங்களில் இதுவும் ஒன்று. மரண பயத்தை போக்கி, தன்னுடைய பக்தர்களுக்கு காவலமாக இருந்து அருளக் கூடியவர் இத்தல ஈசன். ஈசன் நெல்லையப்பராகவும், அம்பிகை காந்திமதி அம்மனாகவும் அருள்புரியும் அற்புத தலம்.

-முனைவர்
இராம.வேதநாயகம்

# தினம் ஒரு தலைவர்கள்
# உசைன் அகமது மதானி வரலாறு






உசைன் அகமத் மதானி (1879 அக்டோபர் 6 - 1957 திசம்பர் 5 ) இவர் ஓர் இந்திய இஸ்லாமிய அறிஞராவார் . 1954இல் இந்தியாவின் குடிமை கௌரமான பத்ம பூசண் விருதினைப் பெற்ற முதல் நபர்களில் இவரும் ஒருவராவார். 1920களில் காங்கிரசு-கிலாபத் ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துவதில் மதானி முக்கிய பங்கு வகித்தார். மேலும் 1920கள் மற்றும் 1930களில் தொடர்ச்சியான சொற்பொழிவுகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மூலம், இந்திய தேசிய காங்கிரசுடன் இந்திய உலமாக்களின் ஒத்துழைப்புக்கு களம் தயார் செய்தார். 1938 இல் இவர் எழுதிய முத்தாகிதா கௌமியாத் இஸ்ர் இஸ்லாம் என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. இந்த புத்தகம் இந்தியாவின் பிரிவினையை எதிர்த்தது. அதில் மதானி ஒரு ஐக்கியப்பட்ட இந்தியாவுக்குள் ஒரு கலப்பு தேசியவாதத்தின் இலட்சியத்திற்காக வாதிட்டார். இது எந்தவொரு மதப் பகிர்வையும் விட முழு துணைக் கண்டத்திலும் தனது சமூகத்தின் பரவலுக்கும் செழிப்புக்கும் உகந்ததாக இருக்கும் என்று இவர் கருதினார்.

ஆரம்ப கால வாழ்க்கை

உசைன் அகமது மதானி உத்தரபிரதேசத்தில் உன்னாவ் மாவட்டத்தில் பங்கர்மாவ் என்ற சிறிய நகரத்தில் பிறந்தார். இவர் பிறந்தபோது இவரது தந்தை பங்கர்மாவில் ஆசிரியராக பணிபுரிகிறார். இவரது குடும்பம் முதலில் பைசாபாத் மாவட்டத்தில் உள்ள தாண்டாவில் இருந்தது . நபிகள் நாயகத்தின் வழித்தோன்றலாக இருந்த இவரது தந்தையின் பெயர் சையித் ஹபீபுல்லா என்பதாகும்.

கல்வி மற்றும் ஆன்மீக பயிற்சி

1892ஆம் ஆண்டில், தனது பதின்மூன்றாவது வயதில், தாருல் உலூம் தேவ்பந்திற்குச் சென்றார். அங்கு இவர் முகமது ஹசன் என்பவரிடம் படித்தார். ஆழ்ந்த விஞ்ஞானங்களை முடித்த பின்னர், இவர் ரசீத் அகமத் கங்கோகியின் சீடரானார். பின்னர் சூபி பாதையில் மற்றவர்களுக்கு வழிகாட்ட இவருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

தொழில்

தாருல் உலூம் தேவ்பந்தில் பட்டம் பெற்ற பிறகு, இவர் தனது குடும்பத்துடன் மதீனாவுக்கு குடிபெயர்ந்தார். இவர் அரபு இலக்கணம், உசுல் அல்-ஃபிக், உசுல் அல்-ஹதீஸ் மற்றும் குர்ஆனிய எக்ஸெஜெஸிஸ் ஆகியவற்றைக் கற்பிக்கத் தொடங்கினார். மதீனாவில் இந்த பல்வேறு இஸ்லாமிய அறிவியல்களை கற்பிக்க 18 ஆண்டுகள் செலவிட்டார். பின்னர் இவர் தலைமை ஆசிரியராகவும், தாருல் உலூம் தேவ்பந்தின் "ஷேகுல் ஹதீஸ்" ஆகவும் நியமிக்கப்பட்டார். இவர் சுமார் 28 ஆண்டுகள் இந்த பதவியில் பணியாற்றினார்.

சுதந்திரத்திற்கான முயற்சிகள்

மால்ட்டா தீவில் உள்ள ஒரு சிறைக்கு பட்டுக் கடித இயக்கத்தில் பங்கு வகித்ததற்காக இவரது ஆசிரியர் முகமது ஹசனுக்கு ஆங்கிலேயர்கள் தண்டனை விதித்த பின்னர், மதானியும் அவருக்குத் துணையாக அவருடன் சிறை செல்ல முன்வந்தார்.

மூன்றுகளுக்குப் பின்னர் விடுதலையைத் தொடர்ந்து, இவர் இந்தியாவுக்குத் திரும்பி இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார். கிழக்கு உத்தரப் பிரதேசம் மற்றும் பீகாரைச் சேர்ந்த முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் மீது இவர் கணிசமான செல்வாக்கைக் கொண்டிருந்தார். புதுதில்லியின் ஜாமியா மில்லியா இஸ்லாமியாவின் நிறுவனர் உறுப்பினர்களில் ஒருவராக இருந்தார். ஷேகுல்-ஹிந்த் மௌலானா மகமது ஹசன் தலைமையிலான அடித்தளக் குழுவில் (ஜாமியா மில்லியா இஸ்லாமியாவின் அடித்தளத்திற்காக) 1929 அக்டோபர் 29 அன்று சந்தித்தார். இவர் இரு நாடுகளின் விரிவினைக்கு எதிராக இருந்த்தால் கிழக்கு உ.பி. மற்றும் பீகாரில் இருந்து ஏராளமான முஸ்லிம்கள் இந்தியப் பிரிவினையின் போது பாக்கித்தானுக்கு குடியேற மறுத்துவிட்டனர். இவர் 1957 இல் இறக்கும் வரை ஜாமியத் உலமா-இ-ஹிந்தின் தலைவராக இருந்தார். (இவர் இறக்கும் வரை தாருல் உலூம் தேவ்பந்தில் ஷேகுல் ஹதீஸின் பதவியையும் வகித்தார்)..

விருதுகள் மற்றும் அங்கீகாரம்

1954 இல் இந்திய அரசால் பத்ம பூசண் விருது

இந்தியா அஞ்சல் துறை 2012 ஆம் ஆண்டில் இவரது நினைவாக ஒரு நினைவு தபால்தலை வெளியிட்டது

வங்காளதேசத்தின் சில்ஹெட்டில் இவரது முயற்சிகள் மற்றும் கடின உழைப்பால் 'மதானி சத்தர்' என்ற பெயரிடப்பட்ட அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

மரணம் மற்றும் மரபு

மௌலானி மதானி 1957 திசம்பர் 5 அன்று இறந்தார்.

# "அந்தோணி" ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு




அறிமுக இயக்குநர்கள் ஜெனோசன் மற்றும் சுகிர்தன் ஆகிய இருவர் இயக்கத்தில் கயல் வின்சண்ட் கதாநாயகனாக நடித்துள்ள 'அந்தோனி' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியிடப்பட்டுள்ளது.

இசைஞானி இளையராஜா இசையமைத்துள்ள இப்படத்தில் டி.ஜே.பானு, அருள்தாஸ், நிகழ்கள் ரவி உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

இலங்கையில் போருக்குப் பின்னரான மக்கள் வாழ்க்கையின் சாரம் கொண்ட திரைப்படமாக இது உருவாகியுள்ளது.

இப்படத்தின் மிக முக்கியமான சிறப்பம்சம் என்னவென்றால், ஜெனோசன் மற்றும் சுகிர்தன் ஆகிய இரண்டு இளம் இயக்குநர்கள் இணைந்து இப்படத்தை இயக்கியுள்ளனர். பொதுவாக ஒரு படத்தை இருவர் இயக்குவது அரிதான ஒன்று.

இவர்களின் புதிய சிந்தனையில் ஒரு மாறுபட்ட திரில்லர் அல்லது ஆக்ஷன் கதைக்களமாக 'அந்தோனி' இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# துருவ நட்சத்திரம் அப்டேட்



இயக்குநர் கவுதம் வாசுதேவ் மேனன் – நடிகர் விக்ரம் கூட்டணியில் உருவாகி இருக்கும் திரைப்படம் "துருவநட்சத்திரம்". ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைத்துள்ள இந்தத் திரைப்படத்தின் ரிலீஸ் பலமுறை ஒத்திவைக்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக எப்போது வெளியாகும் என்ற எதிர்பார்ப்பிலேயே இந்தப் படம் இருக்கிறது.

சட்டரீதியிலான சிக்கல்கள் காரணமாக இந்தப் படத்தின் ரிலீஸ் தொடர்ந்து தள்ளிப்போனது. இந்த நிலையில், இயக்குநர் கவுதம் வாசுதேவ் "துருவநட்சத்திரம்" பட பிரச்சினை குறித்து புதிய தகவல் கொடுத்துள்ளார். அதன்படி இந்தப் படத்திற்கு இருந்த சட்டரீதியிலான பிரச்சினைகள் கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துவிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பேசும் போது, "2018ஆம் ஆண்டு இந்தப் படத்தை யூனிவர்ஸ் போன்று உருவாக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன். எனினும், படத்தின் பிரச்சினைகளை தீர்க்கவே அதிக காலம் கடந்துவிட்டது. எங்களுக்கு பணத்தேவை இருந்ததால், இந்தப் படத்திற்கு லியோ திரைப்படம் மிகவும் உதவிகரமாக இருந்தது."

"படத்தின் ரிலீசை ஒட்டி நாங்கள் சில சட்டரீதியிலான பிரச்சினைகளை எதிர்கொண்டோம். அவற்றை ஒவ்வொன்றாக தீர்த்து வருகிறோம். தற்போதைக்கு ஒரேயொரு பிரச்சினை தான் மீதமுள்ளது. வரும் வாரத்தில் அதுவும் முடிக்கப்பட்டு விடும்," என்றார்.

முன்னதாக திரைத்துறையில் 25 ஆண்டுகள் நிறைவு செய்ததை கொண்டாடும் இசைக் கச்சேரியில் ரசிகர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த கவுதம் மேனன், படம் இந்த ஆண்டு வெளியாகும் என்று கூறியிருந்தார். தற்போது படத்தின் பிரச்சினைகள் முடிந்துள்ளதாக கூறியிருப்பதை அடுத்து விரைவில், "துருவநட்சத்திரம்" படத்தின் புதிய ரிலீஸ் தேதியை எதிர்பார்க்கலாம்.



நடிகை பிரியங்கா அருள் மோகன் பூக்களுடன் எடுத்திருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்கள் இதோ. தற்போது அவர் Made in Korea என்ற நெட்பிலிக்ஸ் படத்தில் நடித்து வருகிறார். அதன் டீஸர் சமீபத்தில் வெளியாகி இருந்தது. தமிழ்நாட்டில் இருந்துகொண்டு கொரியாவுக்கு செல்ல விரும்பும் பெண்ணாக அதில் பிரியங்கா மோகன் நடித்து இருப்பார். தற்போது பிரியங்கா மோகன் அழகிய லுக்கில் பூக்கள் உடன் போட்டோஷூட் எடுத்து இருக்கிறார்.

# "இதுதான் அஜித் குமார்..!" X தளத்தில் இயக்குநர் வெங்கட் பிரபு




அஜித் குமார் டிரெண்டிங்கில் இருந்து வருகிறார்.

துபாயில் நடைபெற்று வரும் ஆசிய லீ மேன்ஸ் கார் ரேசிங் தொடருக்காக ரேசர் அஜித் குமார் துபாயில் இருக்கிறார். அஜித் குமாரின் ரேசிங்கை நேரில் காணவும், அவரை வாழ்த்தவும், திரைப் பிரபலங்கள் மற்றும் ரசிகர்கள் துபாய் சென்று வருகின்றனர். இந்த வரிசையில், இயக்குநர் வெங்கட் பிரபு, ரேசர் அஜித் குமாரை சந்தித்துள்ளார்.

ரேசிங் டி–ஷர்ட் மற்றும் சாம்பல் நிற தொப்பி அணிந்தபடி அஜித் குமாரை சந்தித்த வெங்கட் பிரபு அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். இயக்குநர் வெங்கட் பிரபு, அஜித் குமார் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலானது. இந்த நிலையில், அஜித் குமாரை சந்தித்தது, பந்தய களத்தில் கிடைத்த அனுபவம் குறித்து இயக்குநர் வெங்கட் பிரபு x தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், "ரீடேக் இல்லை. ஸ்டன்ட் டபுள்ஸ் இல்லை. ஸ்டார்ட், கேமரா, ஆக்ஷன் இல்லை. உண்மையான வேகம், அபாயம் மற்றும் அர்ப்பணிப்பு. யாஸ் மெரினா சர்க்யூட்டில் நம்ம அண்ணனை நேரில் பார்ப்பது உண்மயில் மெய்சிலிர்க்கும் அனுபவம், அது கற்பனைக்கும் அப்பாற்பட்டது. இது சினிமா இல்லை, இதுதான் அஜித் குமார்," என குறிப்பிட்டுள்ளார்.

# ஆந்திரா Ex. CM உடன் சூர்யா, கார்த்தி... வைரலாகும்வீடியோ



அஜித் குமார் டிரெண்டிங்கில் இருந்து வருகிறார்.

தமிழ் திரையுலகின் உச்ச நட்சத்திரம் அஜித் குமார். நடிப்பு ஒருபக்கம், ரேசிங் ஒருபக்கம் என பம்பரமாக சுழன்று வருகிறார். அந்த வகையில், தற்போது துபாயில் நடைபெறும் ஆசிய லீ மேன்ஸ் கார் ரேசிங் பந்தயத்தில் அஜித் குமார் பங்கேற்று வருகிறார். ரேசிங் ஒருபக்கம், ரசிகர்கள் ஒருபக்கம் என சமூக வலைத்தளங்களில் அஜித் குமார் தொடர்ந்து டிரெண்டிங்கில் இருந்து வருகிறார்.

அடிக்கடி ரேசர் அஜித் குமாரை தமிழ் திரைப்பிரபலங்கள் துபாயில் வைத்து சந்தித்து வருகின்றனர். சமீபத்தில் நடிகர் சிவகார்த்திகேயன், சிலம்பரசன், மாதவன் என துபாயில் தமிழ் நடிகர்கள் அஜித் குமாரை சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். இவர்களது சந்திப்பு தொடர்பான புகைப்படங்கள், வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

இந்த வரிசையில், இயக்குநர் வெங்கட் பிரபு, ரேசர் அஜித் குமாரை சந்தித்துள்ளார். ரேசிங் டி–ஷர்ட் மற்றும் சாம்பல் நிற தொப்பி அணிந்தபடி அஜித் குமாரை சந்தித்த வெங்கட் பிரபு அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். இயக்குநர் வெங்கட் பிரபு, அஜித் குமார் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.



நடிகை பிரக்யா நக்ரா பஞ்சாபி குடும்பத்தில் இருந்து வந்தவர் என்றாலும் தமிழ், மலையாளம் சினிமாவில் தான் கவனம் செலுத்தி வருகிறார். ஜீவாவின் வரலாறு முக்கியம் படத்தில் அறிமுகம் ஆன அவர், அதன் பின் ஏராளமான படங்களில் நடித்து இருக்கிறார். தற்போது பிரக்யா நக்ரா ட்ரான்ஸ்பரென்ட் சேலையில் செம ஹாட் ஆக போஸ் கொடுத்து போட்டோஷூட் எடுத்து இருக்கிறார். புகைப்படங்களை பாருங்க.

# பிரபல தயாரிப்பு நிறுவனத்திடம் ரூ.23 கோடி மோசடி



ரூ.23 கோடி மோசடி செய்த புகாரில் ஈ.வி.பி. சந்தோஷ் ரெட்டியை மத்திய குற்றப்பிரிவு போலீசார் கைது செய்தனர்.

வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் நிறுவனத்திடம் சுமார் ரூ.23 கோடி மோசடி செய்த புகாரில் சந்தோஷ் ரெட்டியை தாம்பரம் மத்திய குற்றப்பிரிவு போலீசார் கைது செய்துள்ளனர்.

வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் புகாரின் பேரில் சந்தோஷ் ரெட்டி உள்பட மூன்று பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஈவிபி குழுமத்தின் சந்தோஷ் ரெட்டி கைதான நிலையில், அவரது கூட்டாளிகளான வினோத் மற்றும் கிரண் ராஜை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

சோழிங்கநல்லூரில் 34.75 ஏக்கர் நிலம், ஸ்டுடியோக்கள் உள்ளிட்டவைகளை நிர்வகிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அதில், கட்டடங்கள் அனைத்தும் சட்டப்பூர்வ அனுமதி பெற்றவை என போலி வாக்குறுதி அளிக்கப்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ANY MLM PLAN
INR PLAN RS.20000
CRYPTO PLAN RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247

We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
- Minimum 5 years of experience in print media ad sales
- Proven experience in space selling
- Strong background in field sales and client acquisition
- Excellent communication and negotiation skills
- If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889

SATHLOKHAR
SYNERGYS E&C GLOBAL LIMITED
Enduring Relationships
EPC & Infra Turnkey Contractors
CIVIL | PEB | MEP | INTERIORS | SOLAR
NSE Listed Company
We are looking for enthusiastic and self driven Engineers to join our growing team.
Vacancies
Civil | PEB | MEP Engineers
Qualification
Diploma or BE in Civil, Mechanical & EEE, Any degree / +2 passed
Experience
only 0 to 3 years
Apply Now
hr@sathlokhar.com
Contact: 98408 96529
Build your career with a company committed to construction engineering excellence.

Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com

Just499
TOURS & TRAVELS WEBSITE
We Provide Complete Tours & Travels Website Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

Wanted REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக நிருபர்கள் தேவை
PRESS
PRGI No. TNBIL/25/A1564
பேப்பர்பாய்
www.paperboy.biz vaigaraiyilpaperboy@gmail.com
8122664699

TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009

UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com




## காசு இல்லைனா நீயும் நானும் தூசிதான்

வீட்டிலே , ரோட்லே நோட்டு
இல்லன ஏதுடா மதிப்பு....
உனக்கு ஏதுடா மதிப்பு...!

காட்டுல , மேட்டுல மரம்
இல்லைனா மழை ஏதுடா
உனக்கு....மழை ஏதுடா
உனக்கு....!

பள்ளியிலே நீ
படிக்கலைனா...பட்டம்
ஏது உனக்கு....
கல்லூரியிலே நீ
படிக்கலைனா...சட்டம்
ஏது உனக்கு....!

வீழ்ந்தாலும் , தாழ்ந்தாலும் ,
கையிலே காசு இல்லேனா...
உன்னை கான்பது...யாரு
இல்லை காப்பது...யாரு


நீ உழைக்க மறந்தால்
உனக்கு சோறு கொடுப்பது
யாரு... நீ செத்தாலும் உன்
கையில் காசு இல்லைனா
உன்னை தூக்குவது யாரு...!



சத்தியமா நான்
சொல்லுவது
உண்மையா...?
பொய்யானு யோசிச்சு..
பாரு

நல்லா யோசிச்சு பாரு...!!

**பொன். கருணா**



என் கஷ்டங்களையெல்லாம்
குறிப்பால் உணர்த்துகிறேன்
என் வலிகளை எல்லாம்
கவிதை வரிகளின் மூலம்
பாடுகிறேன் எல்லாம்
அறிந்தும் –அந்த பொல்லாத
கடவுளை போல் நீயும்
ஊமையாய் தான் கடந்து
போகிறாய் நீ நினைப்பது
போல் நடக்கும் உயிருள்ள
தலையாட்டி பொம்மையா ?
என் வியர்ப்பின் பணத்தை
உன் இஷ்டத்துக்கு எடுத்து
புழங்கும் ஏ. டி.எம் கார்டு
அல்ல நான் எல்லாம்
இருந்தும் ஆச பாசங்களை
துறந்து வாழும் பாவப்பட்ட
மனிதர்களில் நானும்
ஒருவனாகி போனேன்
உன்னால் தானடி !

உன் அழைப்பின் போது
மட்டுமே என் செல்போன்
ரிங்டோனின் சிணுங்கல்கள்
எல்லாம் ரிதமாய் ஒலிக்கிறது.
நீ புலனங்களின் வழி அனுப்பும்
குறுந்தகவல் செய்தி
பார்த்து தானடி என் இரவு
முழுமையடைகிறது.
தொலைவில் நீ இருந்தாலும்
எனதருகில் தானடி
எப்போதும் வாழ்கிறாய்?

எனது நிழலாய்!!

நான் யாரடி? என்
அடையாளங்கள்
வருங்காலத்தில்
இல்லாமல் கூட
போகலாம். நானெழுதும்
டைரியில் கூட முழுதும்
உன் குறிப்புகள்தான்!!

நீ உச்சம் தொட்டு
என் மேல் வரைந்த
நகக்கீறல்களின் வரிகள்
புதியதாய் நீ மீட்ட ஒரு
கிதாரின் இசைக்குறிப்பின்
கிதாப்புக்கள் தான்!

உன் காதல் எங்கிருக்கிறது
என்கிறாய்? கடவுளை போல
எங்கும் இருக்குமென்றேன்!!

நீ யாரென்று கேட்காதே
நான் தான் நீ என
எப்படி சொல்வேன்!!

என் உறக்கத்தை
கெடுத்தவளே உனக்கு
எப்படி மனம் வருகிறது?
என்னை விட்டு கனவு காண!

கடவுளை வேண்டும் போது
என்னை ஏன் பார்க்கிறாய்
என்கிறாய்? எப்படி
சொல்வேன்? என் கடவுள்
நீதான் என்று!!



என்னை எந்தளவுக்கு
பிடிக்குமென்றாள்.
என்னுயிரை விட
அதிகம்
பிடிக்குமென்றேன்.

**லி.நௌஷாத் கான்**

## செய்யும் நன்மைகள் இன்பமாக மலரும்

நல்ல செயல்கள்
எப்போதும் மகிழ்ச்சியான
நற்பயன்களையே தரும்!

நீங்கள் செய்யும் ஒவ்வொரு
உதவியும் நறுமணம் வீசும்
மலரை போன்றது !

மன அமைதி பெருகும்
நல்லுறவு வளரும் !

வாழ்க்கை அர்த்தமுள்ளதாக
மாறும்!

கடமையைச் செய் பலனை
எதிர்பார்க்காதே!

நாம் விதைக்கும்
நற்செயல்கள் நமக்கு
இன்பத்தை தரும்

இந்தத் தியாகமே
ஒருவனைப் பேரின்ப
நிலைக்கு கொண்டு
செல்லும்!

நீங்கள் எதைக்
கொடுக்கிறீர்களோ
அதுவே உங்களிடம்

பன்மடங்காய் திரும்பும் !

நன்மை செய்வது ஒரு
பந்தமே!

அன்பால் தரும் சிறு உதவியும்
பேரின்பம் தரும் !

கைமாறு கருதாமல் செய்யும்
நன்மையே உயரியது !

பிறர் முகம் மலர செய்வது
சிறந்த அறம் !

நல்ல உள்ளம்
கொண்டவர்களுக்கு உலகம்
எப்போதும் வசந்தமே!

வாடும் பயிருக்கு
மழையா இரு!

உன் வார்த்தை பிறருக்கு
மருந்தாகட்டும்!



மலர் தரும் மணம்
போல நீ செய்யும் தர்மம்
உலகெங்கும் வீசட்டும்!

விதையாய் விழுந்த
சிறு உதவி இன்று
விருட்சமாய் நிற்குதே !

**பெ.திருமுகம்** மணமேல்குடி

## இரண்டாவது கோப்பை'

இரண்டாவது கோப்பை
எதிர்பார்ப்பது தவறு
எல்லோருக்கும் ஒரு கோப்பை
என்பதே சரி !

தமிழகம் வந்தபோது
காந்தியடிகளுக்கு
தாகம் தணிக்க இளநீர்
வழங்கினார்கள் !

குடித்துவிட்டு சுவையாக
உள்ளது என்றார்
காந்தியடிகளுக்கு மற்றொரு
இளநீர் தந்தனர் !

காந்தியடிகள் வாங்க மறுத்து
விட்டார் காரணம் என்ன ?
என்று கேட்டார் தந்தவர் !

மற்றுவருக்கான இளநீரை
நான் குடிப்பது முறையன்று
நியாயம் அன்று என்றார் !

இயற்கையின் வளத்தை
ஒருவரே இனிதே
அனுபவிப்பது தவறு
என்றார் !

வள்ளுவர் வழியில்
பகிர்ந்துண்டு வாழ
வழி சொன்னவர் நமது

அண்ணல்!

ஒருவருக்கு ஒரு கோப்பை
என்று முறையாக
ஒவ்வருவருக்கும் வழங்கிடும்
வேளையில் !

ஒருவர் மற்றும் இரண்டாவது
கோப்பை ஒருபோதும் கேட்கக்
கூடாது உணர்க !

நாகரிகம் அருந்துவதிலும்
வேண்டும் நாகரிகமன்று
இரண்டாவது கோப்பை !

ஆர்வமாய் கேட்கும்
இரண்டாவது கோப்பை
அடுத்தவருக்கானது
என்பதை அறிந்திடுக !

யாரும் காணவில்லை என
இரண்டாவது கோப்பை
யாசிப்பதை உங்கள்
மனசாட்சி தடுக்க வேண்டும் !

ஒரு கோப்பை
போதும் என்று
திருப்தி கொள்க
ஒவ்வருவருக்கும்
வேண்டும்
நினைவில் கொள்க!



**கவிஞர்**
**இரா .இரவி !**

## காவல்துறைக்கு நன்றி

சட்டத்தின் முன்
அனைவரும் சமம் என்பதை
நிரூபித்தும் "நல்ல பெயர்"
வாங்க முடியாமல் சில
"கெட்டவர்களினால்" கெட்ட
பெயரே வாங்கும் துறை !
" காவல்துறையே "

சோறுதண்ணி இல்லாமல் !

சொந்தபந்தம் பாராமல் !

உழைத்தாலும் அரசும் இந்த
அரசியல்வாதியும்
ஒரு சேர நெருக்கடி
கொடுப்பது !
இந்த "காவல்துறைக்கே"

தவறுசெய்து தண்டனையில்
இருக்கும் சிறை "கைதிக்குக்"
கூட மணி அடித்தால்
"சோறு "

சட்டம் ஒழுங்கை காத்து
மக்கள் நலம் பேணி மழை
வெயில் நின்று காவல்பணி
செய்தாலும் பசி நேரத்திற்குக்




உண்ணமுடியாது "சோறு "
பிறகு கிடைத்து என்ன
பயன் நமக்காக தியாகப்பணி
செய்யும் "காவல்துறைக்கு"

அனைத்துத்துறைக்கும்
வித்தியமானதுதான் !

ஆம் அரசு விடுமுறை
நாள் முதல் "குடும்ப
நிகழ்ச்சி" "நல்லநாள்
பெரியநாள்" "நேரம் காலம்"
என எதுவாகினும் அதைப்
பொருட்படுத்தாமல்
சட்ட உத்தரவின்படி !

"செவ்வனே
பணிசெய்வது" நம்ம
"காவல்துறையே"

அண்ணன் தம்பி பகை !

அடுத்தவன் வீட்டில் திருடும்
நகை ! பொதுஇடத்தில்
நடக்கும் நிகழ்வின் வகை !

என அனைத்தையும் அறிந்து
அதற்கேற்ற பாதுகாப்பைப்
பலப்படுத்தி பொதுமக்களை
காப்பதில் ஊர்காக்கும்
முப்பாட்டன் "முனியாகவும்"
பயம்போக்கி காக்கும்
பாட்டன் "பதினெட்டாம்படி
கருப்பனசாமியாகவும்" இருந்து
காக்கும் மனிதரூப தெய்வம் !
நம்ம "காவல்துறையே"

நான் சிந்தித்து சந்தித்து
எழுதினேன் அவர்கள்
மனதைத் தோன்றி !

இந்தியாவில் முதலிடத்தில்
இருக்கு வேண்டும் நம்
தமிழ்நாடு காவல்துறை கால்
ஊன்றி !



காவல்துறைக்கு நன்றி !

**G.A.கோவிந்தராஜ்**
**(எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்



## எல்லாம் அவளே

" அவள் முகமே கண்ணாடி
அவளுக்கு எதற்கு மூக்கு
கண்ணாடி ..."

அவளே எழுதுகோல்
அவளே திறவுகோல்
அவளே ஊன்றுகோல்
அவளே தூண்டுகோல்
அவளே செங்கோல் ...."

அவளே கவிதை விழியும்
அவள் இதழும் எதுகை
மோனை அவள்
மௌனமும்
உடல் ஜாலமும்
சொல்லுமே

அலுக்காத கவிதை ..."

அ என்றால் அவள்
ஆ என்றால் ஆசை
இ என்றால் இசை
ஈ என்றால் ஈர்ப்பு
உ என்றால் உரிமை
ஊ என்றால் ஊக்கம்
எ என்றால் எழுச்சி
ஏ என்றால் ஏற்றம்
ஐ என்றால் அவள் ஐ
ஒ என்றால் ஒற்றுமை
ஓ என்றால் ஓவியம்

அவளே உயிர் எழுத்து
மெய் எழுத்து அவளே
தாலாட்டு அவளே தாய்மொழி
அவளே தமிழ்மொழி..."

அவளே வழிகாட்டி முதல்
ஆசான் முன்னோடி
முதுகெலும்பு அச்சாணி ....."

அவளன்றி ஓர் அணுவும்
அசையாது அவளுக்கு இணை
எங்கும் எதிலும்
கிடையாது .... "



அம்மா தாய் அன்னை
அகிலமும் அவளே
அவள்கண்ணுக்குள்ளே
காந்தம்
உண்டுகேளம்மா ..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி

## நூல் விமர்சனம்


நூலின் பெயர்: பாரதியாரின் சுதேச கீதங்கள்
உரை பகுதி – I
ஆசிரியர்: ரா. நிரஞ்சன் பாரதி
வெளியீடு: பாரதி பதிப்பகம்
விலை : ₹380/–.(கூரியர் செலவுடன்)
தொடர்புக்கு: 93839 82930

மகாகவி பாரதியார் ஒரு தீர்க்கதரிசி.

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று....

சுதந்திரம் அடையும் முன்பே பாடியவர்.

அவரின் பாடல்கள் உரையின்றியே எல்லோருக்கும் புரியும் என்றாலும், அது எல்லோரையும் சென்றடைய வேண்டும் எனும் பேரவாவுடன் , அவரின் 15 சுதேச கீதங்களுக்கு பல அரிய, அறிய வேண்டிய தகவல்களுடன் அவரின் எள்ளுப் பேரனும் என் உடன் பிறவா சகோதரர் திரு. பல்ராம் துரை அவர்களின் மாப்பிள்ளையும் ஆன திரு.நிரஞ்சன் பாரதி உரை எழுதியுள்ளார்.




*14. மாதாவின் துவஜம்:*

இந்நாட்டின் முதல் தேசியக் கொடியை வடிவமைத்த பெருமை சகோதரி நிவேதிதாவையே சாரும். அவர் வடிவமைத்த கொடி ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றாலும், அடுத்தடுத்து பல வடிவங்களை முயற்சி செய்து பார்க்க அவரது முதல் முயற்சி அடித்தளமாக அமைந்தது என்கிறார்.

தன் குருவாகிய சகோதரி நிவேதிதாவின் இந்த முயற்சியால் ஈர்க்கப்பட்ட பாரதி தானும் ஒரு தேசியக் கொடியை உருவாக்க வேண்டும் என ஆசைப்பட்டார். அந்த ஆசை தான் தாயின் மணிக்கொடி பாரீர் என்ற பாடல்.

மணிக்கொடி என்னும் வார்த்தையைப் பிரசவித்தது கம்பனாக இருந்தாலும் அதைப் பிரபலப்படுத்தி ஒரு படைப்பாளர் பாரம்பரியத்தை உருவாக்கிய பெருமை பாரதியாரையே சாரும்.


1933ம் ஆண்டு ஸ்டாலின் சீனிவாசன், வ.ராமசாமி ஐயங்கார்,டி.எஸ்.சொக்கலிங்கம் ஆகியோர் 'மணிக்கொடி' என்னும் இலக்கிய சிற்றிதழைத் தொடங்கினர். இதில் வ.ரா என இலக்கிய வட்டத்தில் அழைக்கப்பட்ட வ.ராமசாமி ஐயங்கார் பாரதியின் சீடர்களில் ஒருவர், புதுமைப்பித்தன்,ந. பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன்,லா.ச.ராமாமிர்தம், மௌனி, க.நா.சுப்ரமணியம்,தி. ஜானகிராமன், எம். வி.வெங்கட்ராம் உள்ளிட்ட எழுத்தாளர்கள் இந்த இதழில் எழுதியிருக்கின்றனர். இவர்கள் பின்னாளில் மணிக்கொடி எழுத்தாளர்கள் என்றே அறியப்பட்டனர்.

வள்ளுவரின் குறள், கம்பர் பாடல்களை மேற்கோளாக காட்டியதுடன், மாணிக்க வாசகப் பெருமான் திருப்பெருந்துறை சிவபெருமான் மீது பாடிய திருப்பள்ளியெழுச்சியை முன்மாதிரியாகக் கொண்டு பாரதமாதா திருப்பள்ளியெழுச்சியை பாரதி பாடியுள்ளதாக நிரஞ்சன் பாரதி குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் இஸ்ரோ சந்திரயான் 3 ஐ விண்ணில் நிலைநிறுத்தியபோது பாரதி பாடிய "சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்" பேசு பொருளானதையும் சுட்டியுள்ளார்.

வாழ்த்துகள் நிரஞ்சன் பாரதி

**ஸ்ரீகாந்த்** திருச்சி



## பெற்றோர்களே!

புதர்களில் முளைத்திட்ட
தப்புச்செடிகளாய்ப்
புதல்வர்களைப்
பாவிக்கிறார்கள்
பெற்றோர்கள் சிலர்!

இவர்கள் இயந்திரச்
சிறகுகளைக்
கட்டிக்கொண்டு
அலுவலகச்சிறைக்குச்
சென்று விடுவதால்
அரவணைப்பு இன்றித்
தவிக்கிறார்கள் பிள்ளைகள்!

பெற்றோர் அமைவதெல்லாம்
இறைவன் கொடுத்த
வரம் சிலர் சிகரங்களில்
ஏற்றுகிறார்கள் !
சிலர் சிலுவை சுமக்கச்
செய்கிறார்கள்!

சூரியனிடமிருந்தே
நட்சத்திரங்கள்
ஒளியைப்பெறுவதைப்
போல் பெற்றோர்களின்
நடத்தைகளே
பிள்ளைகளை ஈர்க்கின்றன!

பிள்ளைகளின் இந்திய
வாழ்வில் தனக்கென
ஒரு இலட்சிய சீலரை
முன்மாதிரியாகக்கொள்ளும்
வரை நாம் தான்

முன்மாதிரி!
கல்விப்பூங்காவில்
பெண்பிள்ளைகளின்
அறிவு அரும்பு விடும் போதே
அவற்றை அறுவடை செய்து
திருமணப்பூந்தொட்டியில்
நட்டு வைக்கிறார்கள்!

சொன்னதைச்சொல்லும்
கிளிப்பிள்ளைகள்தான்
பிள்ளைகள் அவர்களைக்
கூண்டுக்குள் அடைத்து
வைத்து ஜோசியம்
பார்க்காதீர்கள்!
சிந்தனைச்சிறகுகளைக்
கொடுங்கள் அவர்கள்
சுதந்திரவானில் பறக்கட்டும்!

தீயபழக்க வழக்கங்கள்
கிருமிகளைப்போல் பரவும்
நிக்கோடினையும்
மதுவையும் நீங்கள்
கைக்கொண்டால்
பிள்ளைகள் வாழ்க்கை
திசைமாறிப்போகும்!

கிடைப்பதற்கரிய
சந்தானபாக்கியம்
பெற்றவர்களே!
பிள்ளைகள் வாழ்வைச்
சந்தனம் போல்
மணக்கச்செய்யுங்கள்!



**கவிஞர்**
**த.அனந்தராமன்**
துறையூர்

## "ஆடாதடா ஆடாதடா மனிதா"

ஆடாதடா ஆடாதடா மனிதா

பணத்தைத் தாளமாக்கி
மனிதத்தை மிதிக்கும்
ரத்த நடனத்தை

ஆடாதடா ஆடாதடா மனிதா

அதிகாரம் உன் இரத்தமல்ல..
உன் மூச்சுமல்ல...
ஒரு வினாடி சறுக்கினால்
உனைத் துரத்தும் தீ அது!

ஆடாதடா ஆடாதடா மனிதா

காசுபணக் கனலில்
நியாயம் கருக நீ மட்டும்
குளிர்ச்சியாய்ச் சிரித்து
கடவுளாய் நடிக்கிறாய்!

ஆடாதடா ஆடாதடா மனிதா

உன் மேசை ஓரத்தில்
கண்ணீர்த் திவலைகளின்
கருமாதி நடக்க..

உன் பேனாவின்
நுனியில்
சாபச் சர்ப்பங்கள்
காத்திருக்க...

ஆடாதடா ஆடாதடா
மனிதா

ஒரு கையெழுத்தால்
ஓராயிரம் வயிறெரியும்...
ஒரு உத்தரவால்
ஓராயிரம் குடும்பம்
சாம்பலாகும்!

அப்போதும் நீ
நாற்காலியை இறுகப் பிடித்து
திமிர் குரலில்
எதிரொலிப்பாயா?
“நான்தான் சட்டம்”மென்று!

ஆடாதடா ஆடாதடா மனிதா

கேள் மனிதா!
பூமி பொறுமையாய் இருப்பது
பயத்தால் அல்ல...
புகைந்து கொண்டிருக்கும்
கோபத்தால்!

ஆடாதடா ஆடாதடா மனிதா

ஒருநாள் அந்தக் கோபம்
எரிமலையாக வெடிக்கும்
அன்று பணமும் அதிகாரமும்
பெயரைக்கூட காப்பாற்றாது!

ஆடாதடா ஆடாதடா மனிதா



திமிரில் ஆடாதடா
மனிதா...
சாம்பலாகும் முன்
மாறிவிடுடா மனிதா!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

## பொறுமை

ஒரு மரத்தின் ஒரே கிளையில்
இரண்டு காய்கள்
காய்க்கிறது

ஒன்று விரைவில்
பழுக்கிறது !
மற்றொன்று தன்
நேரத்தை

எதிர்பார்த்து காத்திருக்கிறது !
அதன் அர்த்தம் !
பிறர் வெற்றி அடைந்தால் !
நாம் தோல்வி அடைந்ததாக
எண்ணக்கூடாது !
நம்முடைய தருணம்
வரும் வரை ! பொறுமையாக
காத்திருப்போம்!



**ம. இந்திராணி**
திருச்சி




## சாதி வெறி

நாய் நன்றியுள்ள
பிராணிதான் சோறுப்
போட்டவனைக் கண்டால்
ஓடிவந்து வாலாட்டும்
வெறிப் பிடிக்காதவரை,,,

மனிதர்களும்
நல்லவர்கள்தான்
அன்பானவர்கள்தான்
சாதி வெறி தலைக்கு
ஏறாதவரை

வெறிநாய் கடிக்குக்கூட
மருந்து
கண்டுப்பிடித்து
விட்டார்கள்
இந்த சாதி
வெறிக்கு,,,?!



நாகை
ஆசைத்தம்பி
கோவை

## இயல்புநிலை...

உன்னிடம் இருந்து பதில்...
வராத.. தருணத்தில்...

நிலைகுலைந்து போகிறது...
மனது...

பொற்குவியல் பறிகொடுத்த...
வறியவனின்...
ஆற்றாமை போல்...

பெரும் சூறைக் காற்றில்...
சின்னாபின்னமாகி
கிடக்கும்... பூந்தோட்டம்
போல...

இயல்புநிலை திரும்புதல்...
அவ்வளவு எளிதன்று...



உன்
சொற்சித்திரம்...
செவிகளை..
நிறைத்தால்
ஒழிய...

தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி



## உலகாளும் உழவர்கள்

உலகம் எல்லாமே
உருவங்கள் மாறியே

உணர்வுகள் இல்லாத
உயிராகி போனாலும்

விரும்பிய நொடியில்
விரல்கள் நுனியில்

வித்தைகள் செய்யும்
விஞ்ஞானி ஆனாலும்

உயிருடன் வாழும்
ஒவ்வொரு நாளும்

ஊனைக் காத்திட
உணவுகள் வேண்டும்

என்கின்ற நினைவோடு
மெய்ஞானம் அறிந்து

எல்லோரும் எப்போதும்
விழிப்போடு இருந்து

வளமோடு நலமோடு
வாழ்க்கையை நடத்த

விலகாத மனதோடு
விவசாயம் காப்போம்

ஊருக்கெல்லாம்
அன்னமிட்டு உதிரத்தையே
சின்னமிட்டு

உத்தமமாய் வாழ்ந்த
உழவர்களை மதிப்போம்.

ரமணி ஸ்ரீநிவாசன்
கள்ளக்குறிச்சி.

## எழுந்து நிற்க எழுது!

தூங்கிக் கிடக்கும் தமிழ்ச் சமுதாயம் உடன்
எழுந்து நிற்க எழுது! விழித்தெழ எழுது!

கும்பகர்ணன் தூக்கம் தூங்கியது போதும்
குமுகாயம் சிறக்க எழுந்து நில்!

“தூங்காதே தம்பி தூங்காதே” என்று
திரைப்படத்தில் பட்டுக்கோட்டை எழுதினார்!

விழித்தெழு! விழித்தெழு! என்று பலரும்
வெள்ளித்திரையில் பாடல் பாடினார்கள்!

தமிழனின் தூக்கம் களைய வில்லை
தட்டி எழுப்புவோம் எழுத்தால் தட்டி எழுப்புவோம் !

உலகின் முதல்மொழி தமிழ் என்பதை
உணரவில்லை நம் தமிழர்!

உலகின் முதல்மனிதன் தமிழன் என்பதை
உணரவில்லை நம் தமிழர்!

அம்மா அப்பா என்று நல்ல
அழகிய தமிழ்ச் சொற்கள் இருக்கையில்!

ஆங்கிலத்தில் மம்மி டாடி என்கிறான்
ஆங்கில வழியில் கல்வி பயில்கின்றான்! மம்மி’
என்றால் செத்தபிணமென்று பொருள்
மம்மியின் பொருள் அறியாது விரும்புகின்றான்!

உலகம் முழுவதும் தமிழன் வாழ்கின்றான்
உள்ளூரில் தமிழ் வாழ்கின்றதா? இல்லை!

பேருந்து நிலையத்தை ‘பஸ் ஸ்டாண்டு’ என்கிறான்
தொடர்வண்டி நிலையத்தை ‘ரயில்வே ஸ்டேசன்’ என்கிறான்!

இப்படியே தமிங்கிலம் பேசிப் பேசி
இனிய தமிழ்மொழியைக் கொல்கிறான்

தொலைக்காட்சியில் தமிழ்க்கொலை என்பது
தொடர்கதையாகத் தொடர்ந்து வருகின்றது!

பேசுகின்ற பேச்சில் ஆங்கிலத்தைக் கலந்து
பைந்தமிழ் மொழியைச் சிதைத்து வருகின்றான்!

பத்துச் சொற்கள் பேசினால் அதில்
பாதிக்கு மேல் ஆங்கிலச் சொற்கள்!

தாய்மொழி குசராத்தியை காந்தியடிகள் நேசித்தார்
தனது வரலாற்றை குசராத்தி மொழியில் எழுதினார்!

டால்சுடாயின் வழி திருக்குறளை நேசித்தார்
டால்சுடாயின் வழி தமிழை வாசித்தார்!

அடுத்த பிறவி இருந்தால் திருக்குறள் பயில
அற்புத தமிழனாகப் பிறக்க விரும்பினார்! நோபல்
நாயகர் ரவீந்திரநாத் தாகூர்
நாளும் விரும்பியது அவரது தாய்மொழி வங்க மொழி!

மாமனிதர் அப்துல்கலாம் பயின்றது தமிழ்வழி
மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து மனதில் நின்றார்!

விஞ்ஞானிகள் சாதனையாளர்கள் அனைவரும்
விரும்பிப் பயின்றது தாய்மொழி தமிழ்மொழி!

ஆரம்பக்கல்வி அழகுதமிழில் இருந்தால்
அறிவாளியாக குழந்தைகள் வளரும்!

என்ன வளம் இல்லை நம் தமிழ்மொழியில்
ஏன் கையை ஏந்த வேண்டும் பிறமொழியில்!
இல்லாதவன் பிச்சை எடுத்தால் தவறில்லை
எல்லாம் இருப்பவன் ஏன் பிச்சை எடுக்க வேண்டும்!

சொற்களின் களஞ்சியம் நம் தமிழ்மொழி
சொற்களின் சுரங்கம் நம் தமிழ்மொழி!

காவியங்கள் காப்பியங்கள் நிறைந்த மொழி
கற்கண்டு கவிதைகள் உள்ள மொழி!

உலகப்பொதுமறையை உலகிற்கு தந்த மொழி
உலகம் போற்றிடும் உன்னத தமிழ்மொழி!

ஆராய்ச்சியாளர்களின் அறிவிப்பு முதல்மொழி தமிழ்
அறியவில்லை புரியவில்லை நம் தமிழர்களுக்கு!
தமிழின் பெருமையை தமிழர்கள் அறியவில்லை
தரணியில் மற்றவர் நன்கு அறிந்துள்ளனர்!

தமிழைப் பிரிக்கும் சாதியும் மதமும் வேண்டாம்
தமிழரை இணைக்கும் தமிழ்மொழி வேண்டும்!

உலகில் தமிழன் இல்லாத நாடே இல்லை
உலகத் தமிழர் யாவரும் தமிழால் ஒன்றுபடுவோம்!

தமிழருக்கு ஓர் இன்னல் என்றால் உடனே
தட்டிக் கேட்போம்! தோள் கொடுப்போம்!

ஒருநூறு ஆண்டுகளில் அழியும் மொழிகளில் தமிழ் ஒன்று
ஓர் எச்சரிக்கை செய்துள்ளனர் ஆய்வாளர்கள்!

உலகின் முதல்மொழி தமிழைத் தமிழர்கள்
ஒருபோதும் அழியவிட மாட்டோம் என்று உறுதி ஏற்போம்!

தமிங்கிலப் பேச்சுக்கு முடிவு கட்டுவோம்
தமிழர்களோடு தமிழிலேயே உரையாடி மகிழ்வோம்!

குழந்தைகளுக்கு முதலில் தமிழ் கற்பிப்போம்
குழந்தைகள் வளர்ந்தபின்னே ஆங்கிலம் பயிலட்டும்!

ஏமாந்த காலம் முற்றுப் பெறட்டும்
ஏமாற்றமின்றி விழிப்புணர்வு பெற்றிடுவோம்!

மற்றவரின் ஒற்றுமையைக் கண்டு பாடம் கற்று
மண்ணில்உள்ள தமிழர்கள் ஒன்றிணைவோம்!
ஒரு கை தட்டினால் ஓசை வராது
ஒன்றுபடாமல் கத்தினால் யாருக்கும் கேட்காது!

தமிழ்மொழி காக்க ஒன்றுபடுவோம்!
தமிழஇனம் காக்க ஒன்றுபடுவோம்!

கொட்டக் கொட்டக் குனிபவன் அல்ல தமிழன்
கொட்டிய கரத்தை முறிப்பவன் தமிழன்!

எழுத்திலும் வடமொழி நஞ்சு கலந்து வருகின்றனர்
எழுத்துக் கலப்பிற்கும் முடிவு கட்டுவோம்!

தமிழைத் தமிழாக தமிழர்கள் எழுதிடுவோம்
தமிழைத் தமிழாக தமிழர்கள் பேசிடுவோம்!

உணவில் கலப்படம் உடலுக்குக் கேடு தரும்
மொழியில் கலப்படம் மொழிக்குக் கேடு தரும்!

முடிந்தமட்டும் நல்ல தமிழ் பேசுவோம்
முடிந்தமட்டும் நல்ல தமிழ் எழுதுவோம்
தமிழராகப் பிறந்ததற்காக பெருமை கொள்வோம்
தமிழர்கள் யாவரும் பெருமை கொள்வோம்!

‘தமிழன் என்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா!’
தரணிக்கு நாமக்கல் கவிஞர் வரிகளை பறைசாற்றிடுவோம்!

உலகஅளவில் பல சாதனைகள் நிகழ்த்தியவர்கள்
தமிழர்கள் உணர்ந்து தமிழ்வழி பயின்றதால்
சாதித்துக் காட்டினார்கள்! ஒழுக்கத்தை உயிருக்கு
மேலாக உரைப்பது தமிழ்மொழி உயிருக்காக
இரங்கிட இரக்கம் காட்டுவது தமிழ்மொழி!

மனிதநேயத்தை மனதிற்கு கற்பிப்பது தமிழ்மொழி
மட்டற்ற இலக்கியத்தை தன்னில் கொண்டது தமிழ்மொழி

அகமும் புறமும் அழகாய் விளக்குவது தமிழ்மொழி
அய்ந்திணை இலக்கியங்கள் கொண்டது தமிழ்மொழி!

அறம் செய்ய விரும்பு என்று சொல்வது தமிழ்மொழி
அனைவரையும் நேசிக்க வைப்பது தமிழ்மொழி!

வீரத்தை போர்விதிகளை விளக்குவது தமிழ்மொழி
விவேகத்தை தன்னம்பிக்கையை விதைப்பது தமிழ்மொழி!

எல்லா மொழிகளின் தாய்மொழி தமிழ்மொழி
எல்லா மொழிகளின் மூலமொழி தமிழ்மொழி!

ஆங்கிலத்திலும் பல சொற்கள் உள்ள மொழி தமிழ்மொழி
ஆங்கிலேயரும் விரும்பிப் படித்த மொழி தமிழ்மொழி!

மதம் பரப்ப வந்தவரும் தமிழ் பரப்பிய வரலாறு உண்டு
மதம் கடந்து மனிதம் கற்பிக்கும் மொழி தமிழ்மொழி!

உலகத்தமிழ் மாநாடுகள் கண்ட மொழி தமிழ்மொழி
உலகமெங்கும் ஒலிக்கும் உன்னத மொழி தமிழ்மொழி!
எண்ணிலடங்காத சிறப்புப் பெற்ற மொழி தமிழ்மொழி
எண்ணத்தை தூய்மைப்படுத்திடும் மொழி தமிழ்மொழி!

கலை பண்பாடு கற்பிக்கும் மொழி தமிழ்மொழி
கனியை விட சிறந்த இனிமை மொழி தமிழ்மொழி!

தமிழ்சொற்கள் இல்லாத பிறமொழிகள் இல்லை
தரணியில் உள்ள மொழிகளில் வள்ளல் தமிழ்மொழி!

படைப்பாளிகள் அனைவருக்கும் வேண்டுகோள்
படைப்பில் விழிப்புணர்வு விதைத்திடுங்கள்!

ஆண்டாண்டு காலமாக தூங்கியது போதும்
அனைவரும் உடனே விழித்து எழுவோம்!

ஏமாளி அல்ல தமிழன் என்று மெய்ப்பிப்போம்
எப்பாடுபட்டாவது நம் தமிழ்மொழி காத்திடுவோம்!

அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்
அளவிற்கு மிஞ்சிய தூக்கமும் கேடாகும்



தமிழா! தமிழா! தூங்கி வழிந்தது போதும்
தமிழா! தமிழா! எழுந்து நில் எழுச்சி கொள்!

எழுந்து நிற்போம் எழுச்சி கொள்வோம்
எல்லோரும் ஒன்றிணைவோம்!

கவிஞர் இரா. இரவி.



## மம்மர் அறுக்கும் மருந்து!

(அறுசீர் மண்டிலம்)

இம்மையிலே
இன்பளிக்கும் கல்வி
ஈடிலாத சீர்தருமே கல்வி!
மம்மரையே
அழித்துவிடும் கல்வி
மாண்பான
ஒழுங்களிக்கும் கல்வி!
தம்புகழை
உயர்த்திவிடும் கல்வி
தக்கநல்ல
சிறப்பளிக்கும் கல்வி
அம்புவியில் ஏற்றதுவே கல்வி
அறிவுக்கேவித்தாகும் கல்வி!

புகழாக விளங்கிடுமே கல்வி
பொலிவாகத்
துலங்கிடுமே கல்வி
தகவாகக் கண்டிடுமே கல்வி
தண்மையினைத்
தந்திடுமே கல்வி!
வகையான இலக்கியமே கல்வி
வண்ணவண்ண இலக்கணமே
கல்வி அகப்புறத்தை
அளித்திடுமே கல்வி
அச்சத்தைப்போக்கிடுமே
கல்வி!

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.

வாழ்வின் வழிப் பயணத்தில்..
இயற்கையை நம்புங்கள்...
அதில் இறைவனைக்
காண்பீர்கள்! வருவதை
ஏற்றுக் கொள்ளுங்கள்;
கடந்தவை எதுவாக
இருந்தாலும் அதை
மாற்ற இயலாது. அந்த
மனப்பக்குவமே உங்கள்
வாழ்க்கைக்குத் துணையாக
வரும். வாழ்க்கை ஏன்
இப்படிப் போகிறது எனப் பல
நேரங்களில் உங்களுக்கும்
எனக்கும் புரிவதே இல்லை!
ஆனால், ஒரு பயணத்தின்
முடிவில்தான்... அந்த
வாழ்க்கையின் முழு
அர்த்தமும் நமக்குப்
புலப்படுகிறது.வெற்றியும்
தோல்வியும் ஒரு
முப்பது நாட்களுக்குள்
முடிந்துவிடக் கூடிய
வெறும் நிகழ்வுகளே!
அதற்குள் ஏன் இந்த
அவசரம்? ஏன் இந்தத்
தேவையற்ற பரிதவிப்பும்
ஆத்திரமும்? மௌனமாக
எதையும் எதிர்கொள்ளுங்கள்;
கண்ணியமாகஎல்லாவற்றையும்
கடந்து வாருங்கள். எங்கே
நாம்அவமானப்படுத்தப்பட்டோமோ,
அங்கே நாம் வென்று
காட்டுவோம்! பொய்கள்
அனைத்தும் ஒன்று கூடி
நின்றாலும், ஆணவம் அங்கே
அலங்காரமாகத் தான்
காட்சியளிக்கும்.
ஆனால், உண்மைக்கு எந்த
அலங்காரமும் தேவையில்லை;
உண்மையின் அழகு
அது ’உண்மை’
என்பதில் மட்டுமே
ஒளிந்திருக்கிறது!



ஜனனி
அந்தோணிராஜ்,
திருச்சிராப்பள்ளி.

## நினைத்த வாழ்வு கிடைத்தது

நம்பிக்கை மனதில் வந்த
நாளிலிருந்து துயரங்களை
கடந்த பாதைகள் எல்லாம்
வலிமையின் அறிவுரையாக
உணர்ந்தேனே ..
உறக்கத்தில் வந்த கனவு
நினைவானதே விழிகளில்
சந்தோஷம் நிறைந்ததே..
தொட்ட காரியங்கள் எல்லாம்
தூண்களாக மாறி
வெற்றியின் இல்லமாக
எழுந்தது இன்று என் உள்ளம்
நவில்கிறது நீ நினைத்த
வாழ்வை நீ
வாழ்கிறாய்.
இதுவே
நிம்மதி என
மகிழ்ந்தேன்



உஷா
முத்துராமன்

## சிக்கல் இல்லா வாழ்வு

அமைதியான சூழல்
மனதிற்கு மகிழ்ச்சி
எதிர்பார்ப்பு அளவோடு
இருந்தால் தினம்
கிடைக்குமே மகிழ்ச்சி
இதனால் நிம்மதி நம்மை
அரவணைக்குமே...
உள்ளத்தில் தோன்றும்
வேண்டா நினைவுகளை
விட்டொழித்தால்
இனிமையான மகிழ்ச்சி
வந்திடுமே இன்பம் அருகில்
வர வர துன்பம் என்ற
பெயர் ஓடி விடுமே...
வாழ்வில் மென்மையான
பாதையில் அடி எடுத்து
வைக்க வேண்டுமே என்றும்
தன்னம்பிக்கை..
தன்னம்பிக்கையோடு
நடப்போம் எட்டாத
வெற்றியை எட்டிப்
பிடிப்போம்

உஷா முத்துராமன்



## “உணவை வீணாக்காதீர் உலகத்தாரே?”

அன்னமே உயிர் தந்த
அமுதமென்றார் முன்னோர்!
பன்னீரும் பட்சணமுமின்றிப்
பசி பொறுத்தார் சான்றோர்!

பருக்கையொன்று
வீணானால் பாவம் உலகம்
பின்னாளில் அழும்!
குப்பையாய்க் கழிக்கப்படும்
சோறு கண்ணீராய் மாறும்
பாரு!

விதைத்தவன் வியர்வையை
நினை! வயலில் கண்ட
துயரத்தை நினை!
அறுத்தவனின் அறத்தை
நினை! அன்னம் வந்த
வழிதனை நினை!


உண்டபின் எஞ்சியதை
இல்லார்க்குக் கொடு!
பசியின் முகம் பார்த்து
பரோபகாரம் புரிந்திடு,!

அன்னமே தெய்வமென்பது
ஆன்றோர் சொன்ன மொழி!
அவமதிப்பவன் ஆயுளில்
அனுபவிப்பான் ஓர்நாளில்!

உண்ணும் முன் வணங்கிடு!
உண்டபின் காத்திடு!
உலகத்தார் பசி
நீங்க
ஒவ்வொரு
பருக்கையையும்
சேர்த்திடு!



முகில்
பதிப்பகம்
கோயமுத்தூர்




## கையூட்டு

விடுமுறை நாள்களும்
வேலை நாள்களாய்
குளிர்சாதன அறையில்–
உள்ளம் குளிர குளிர
அலுவலகத்துக்கு
அலுவலகம் கோப்புகளுக்கு
கோப்புகளாய் காப்புகளாய்
கைமாறுகிறது கையூட்டு.

மேசைக்கு மேசை பேப்பர்
வெயிட்டால் அடுத்தது
காட்டும் பளிங்குபோல்
ஒட்டப்படாத உறைகளில்
ஓசைபடாமல் சிரிக்கிறார்
காந்தி சாந்தி அடைகிறார்
அதிகாரி.

பூக்களாய் காய்களாய்
கனிகளாய் காலத்துக்குக்
காலம் லஞ்சம் தவிர்
நெஞ்சம் நிமிர் என இறந்து
போன மொழிகளில்
தள்ளுவதும், இழுப்பதுமாய்
அலுவலகப்
பணிகள்
தொடர
முகப்பு
வாயிலில்
குலுங்கும்
பூக்கள்
மட்டும் நம்
காதில் விழுந்து கொண்டே
இருக்கின்றன.



மீனாட்சி பாண்டியன்
திருவண்ணாமலை

1. பூக்களாக இருக்காதே
உதிர்ந்து விடுவாய்
செடிகளாக இரு
பூத்துக் கொண்டே இருப்பாய்

2. சொந்தங்கள் மீண்டும்
இணைந்து அன்போடு
ஆறுதலாக பேச ஒரு
உயிரிழப்பு தேவைப்படுகிறது

3. வாங்கியவன் சீக்கிரம்
மறக்கக் கூடியதும்
கொடுத்தவன் வாழ்நாள்
முழுக்க மறக்க முடியாததும்
கடன் மட்டுமே

4.வாழ்க்கையில்தோற்றவர்கள்
இரண்டு பேர்ஒருவர் யார்
பேச்சையும் கேட்காதவர்
மற்றொருவர் எல்லோருடைய
பேச்சையும் கேட்பவர்

5. டச்சில் இருந்த உறவுகளை
டச் இல்லாமல் செய்துவிட்டு
டச் இல்லாத உறவுகளை
டச்சில் வைத்தது
தான்
இந்த டச் போனின்
சாதனை



நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

## புதுவெள்ளம்

விழுந்தது போதும் இனி எழுந்து நில்! புதிய விடியலை
நோக்கிப் பார்த்தது போதும்! இனி பார் – புதிய பார்வை!
பாடியது போதும் இனி பாடு புதிய பாட்டு!

ஓடியது போதும் இனி ஓடு புதிய ஓட்டம்!
இழந்த எழுச்சியை மீட்டுவாக்கு! புதிய எழுச்சிகொள்!
இனி முயலும் வெல்லும் ஆமையும் வெல்லும் முயலாமை
வெல்லாது என்பதை உணர்.



இனி பூமிப் பந்தை உன் லட்சியம் நோக்கி
உதை! உன் எழுதுகோல் இனி பூமியை நகற்றும்
நெம்புகோளாகும். இனி பேசும் புதிய பேச்சு
எழுதும் புதிய வரலாறு!

எஸ். சந்திரசேகரன் அமுதா.
செஞ்சிக்கோட்டை

## வாழ வைக்கும் பூமி

வானும் , பூமியும் யாருக்கு
சொந்தம் அதை காத்து
வாழ்பவனுக்கே வசந்தம்...!

நீரும், சோறும் யாருக்கு
சொந்தம் அதை விளைய
வைப்பவனுக்கே ஆனந்தம்....!

அன்பும் , பாசமும்
யாருக்கு சொந்தம்அதை
பேனிகாக்கும்
பன்பாளனுக்கேசொந்தம்...!

இரும்பு விலகி போனால்
கூட....
காந்தம் அதை ஒட்டி
அனைத்துக்கொள்ளும்

செப்படி வித்தை காட்டும்
மனிதா...நீ வாழும்போதும்,
மரணித்த பிறகும்
இந்த பூமி அனைத்து
ஏற்றுக்கொள்ளும்...!



அனைத்தையும்
கொடுக்கும் பூமி உன்
பாசத்தை மட்டும்
அதனிடம் நீ காமி....!!

பொன்.கருணா
நவி மும்பை



இந்து சமய அறநிலையத்துறை

திருவண்ணாமலை மாவட்டம். செய்யாறு வட்டம், முனுகப்பட்டு கிராமம்

அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில்

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டயாகம்

# மஹா கும்பாபிஷேக பெருவிழா

## அழைப்பிதழ்

அன்புடையீர், வணக்கம் !

நிகழும் சுபஸ்ரீ விசுவாவசு வருஷம் உத்தராயண புண்ணியகாலம் மாசி மாதம் 10-ஆம் நாள் (22-02-2026) ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதி, அஸ்வினி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.30 மணிக்குமேல் 11.30 மணிக்குள்ளாக ரிஷப லக்னத்தில் அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால் அனைத்து பக்தகோடிகளும், ஆன்றோர்களும், சான்றோர்களும் கலந்துகொண்டு எல்லாம் வல்ல அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி அருளை பெற அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

நிகழ்ச்சி நிரல்

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நேரம் | நிகழ்ச்சி |
|---|---|---|---|
| மங்கள ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி மாதம் 7-ஆம் நாள் | 19-02-2026 வியாழக்கிழமை | காலை 8.00 மணிக்கு | மங்கள இசை அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை, கோபூஜை, மஹா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், மகாலஷ்மி ஹோமம், நட்சத்திர ஹோமம், பூர்ணாஹுதி உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| | | மாலை 5.00 மணிக்கு | வாஸ்து சாந்தி, ரக்ஷோக்ன ஹோமம், பிரவேசபலி பூஜைகள் |
| மாசி மாதம் 8-ஆம் நாள் | 20-02-2026 வெள்ளிக்கிழமை | காலை 8.00 மணிக்கு | தீர்த்த சங்கிரணம், அக்னி சங்கிரணம், திசா ஹோமம், மூர்த்தி ஹோமம், அஸ்திர ஹோமம், மந்திர ஜபம், சம்கிதா ஹோமம், யாகசாலை அலங்காரம் |
| | | மாலை 5.00 மணிக்கு | மங்கள இசை, கணபதி பிரார்த்தனை, மிருத்சங்கிரணம், அங்குரார்பணம், பிரதான ஆச்சார்யர் ரக்ஷாபந்தனம், எஜமானர்கள் காப்பு கட்டுதல், விஷேசந்தி, கும்பலங்காரம், கலாகர்ஷணம், முதல்கால யாகபூஜைகள் ஆரம்பம், நவகுண்ட பூஜைகள், சௌபாக்கிய திரவியங்கள் ஹோமங்கள் உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| மாசி மாதம் 9-ஆம் நாள் | 21-02-2026 சனிக்கிழமை | காலை 8.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிரார்த்தனை அங்குரபூஜை, இரண்டாம் கால யாகபூஜைகள் ஆரம்பம், மண்டப அர்ச்சனை வேதிகா உபசாரங்கள், அஷ்டபந்தனம் சாத்துதல், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| | | மாலை 5.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, மூன்றாம் கால யாகபூஜைகள் ஆரம்பம், மண்டப அர்ச்சனை, வேதிகா அர்ச்சனை, நவகுண்ட யாகபூஜைகள், நாடிசந்தானம், தத்துவார்ச்சனை, ஸ்பர்சாஹுதி சௌபாக்கிய திரவியங்கள், ஹோமம் சோடச உபகாரங்கள், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| மாசி மாதம் 10-ஆம் நாள் | 22-02-2026 ஞாயிற்றுக்கிழமை | காலை 7.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிரார்த்தனை அங்குரபூஜை, நான்காம் கால யாகபூஜைகள் ஆரம்பம். அவபிரதயாகம், நவகுண்ட யாக பூஜைகள், மஹா பூர்ணாஹுதி, யாத்ராதன சங்கல்பம், மஹா தீபாராதனை. |
| | | காலை 10.30 மணிக்கு | கலசங்கள் புறப்பாடு |
| | | காலை 11.00 மணிக்கு | ராஜகோபுரம் மற்றும் அனைத்து விமானம் கும்பாபிஷேகம் |
| | | காலை 11.15 மணிக்கு | மூலவர் அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி கும்பாபிஷேகம் |
| | | காலை 11.30 மணிக்கு | மஹா அபிஷேகம், அலங்காரம் |
| | | பகல் 12.00 மணிக்கு | சிறப்பு அன்னதானம் |
| | | மாலை 6.00 மணிக்கு | சுவாமி அம்பாள் திருக்கல்யாணம் |
| | | இரவு 8.00 மணிக்கு | சுவாமி அம்பாள் திருவீதிஉலா நடைபெறும் |
| | | இரவு 10.00 மணிக்கு | நாடகம் நடைபெறும் |

இங்ஙனம்

**திருக்கோயில் நிர்வாகம், திருப்பணி விழா குழுவினர்கள், திருக்கோயில் பணியாளர்கள், மற்றும் ஊர்பொதுமக்கள், முனுகப்பட்டு**

ஸ்ரீ சௌந்தர் பிரஸ், வேலூர்-4. செல் : 9894584829


**SHANMUGA PRIYA**
TOURS & TRAVELS
Porur, Chennai
நிறுவனத்திற்கு அனுபவமுள்ள
**TELE CALLERS**
பெண்கள் தேவை
Salary: 15,000/- TO 20,000/-
**99412 44226**

அசோக்நகரில் உள்ள
**மாயா நர்சிங் ஹோம்க்கு**
அருகில் வசிக்கும்
**வார்டு பாய்**
**ஆயாக்கள் தேவை**
சம்பளம் ரூ.18,000
ஆண் / பெண் - வயது: 35க்குள்
9361390688 / 9841383989

**MOUNT HOSPITAL**
@ Adambakkam & Thoraipakkam Req.
• HOSPITAL ADMIN with Insurance Experiance
• STAFF NURSES
• RECEPTIONIST
• LAB TECHNICIAN
• PHARMACIST
• DRIVERS
730 530 5231

**ST COURIER**®
The People's Choice
Domestic-International-Cargo-E commerce
சென்னை போரூரில் பணிபுரிய கீழ்கண்டவர்கள் தேவை
• நைட் / மார்னிங் - டியூட்டி
Full / Part Time ஆட்கள் தேவை.
(ஸ்கேனிங், லோடிங், அன்லோடிங்)
• வேன் டெலிவரி ஆட்கள்
(குறிப்பு: பைக் தேவையில்லை)
தகுதி: 10 வது, 12 வது, டிகிரி.
சம்பளம்: Upto Rs. 20,000 + Perks
Ct: 99406 11849

Breaking News Card.com
www.breakingnewscard.com
We Create Professional
**Breaking News Cards**
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY




ஆட்கள் தேவை
CNC டர்னிங் ஆப்பரேட்டர்
பெயிண்டர்
ஹெல்பர்
நல்ல சம்பளம் வழங்கப்படும்
Southern Heat Exchangers, Coimbatore
99444 40560

Aruvi SUPERMART
Shop Smart, Shop Smiles.
ACCOUNTANT
STOCK INVENTORY
DELIVERY BOY
Min 3 yrs Experience
SF No. 138/9A2, Kundrathur Main Rd, Mangadu, Chennai-122.
9087411008, 9087982000




உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும் ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

உள்ளூர் செய்திகள் முதல் வெளிநாட்டு செய்திகள் வரை துல்லியமாக தரும் ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com

தினம் தோறும் உள்ளூர், உலக செய்திகள் வரை தரும் தரமான நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz

PHARMACIST REQUIRED
Diploma in Pharmacy with Tamilnadu Pharmacy Council Registration Certificate with 3 yrs exp.
Maya Nursing Home
Ashoknagar, Chennai
Call: 98413 83989

கேரளாவில் உள்ள பிரபல ஹோட்டலுக்கு அனுபவமுள்ள
தோசை மாஸ்டர் & டீ மாஸ்டர் தேவை
உணவு, தங்குமிடம் இலவசம்
விருப்பமுள்ளவர்கள் ஆதார் கார்டு / அடையாள சான்றுடன் நேரில் வரவும்
8711 808080

ADVERTISE WITH US!


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மிக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed
Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots
PlayGroup
Nursery
EuroJunior
EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும்
உள்ளூர், உலக செய்திகள் வரை
தரும் தரமான
நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com

முனிஸ்வர் துணை
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget => We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 - Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

WANTED MALE/FEMALE
SALES ASSISTANT
PREFERABLE IN & AROUND ALANDUR
9962258000
Since 1953 SLJ
Sri Lakshmi Jewellery
ALANDUR, CHENNAI - 16.

WANTED
EXECUTIVES
Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999 BRAND
+91 893 999 7476
Email: 999lungies@kasz.in

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஜூஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

REQUIRED
Bank & Finance
LOAN CONSULTANCY
TELECALLER (F)
Age Below 30 | Fresh/Exp 2Yrs
Qual: +2 or Any Degree
Sal: 12 to 18K + Inc
West CIT Nagar, T.Nagar-35.
ct: 97907 88886

WANTED
Experienced candidate for Office Manager position.
Good salary offered.
Contact: 87544 55567
Email: requires2025@gmail.com



# பல்சுவை களஞ்சியம்





## அழிந்து போன பாரம்பரிய விளையாட்டுகள்

தற்போதைய கால கட்டத்தில் செல்போன் பயன்பாட்டின் ஆதிக்கத்தால் ஆரோக்கியமும், உடல் திறனையும் வளர்க்கும் இதுபோன்ற விளையாட்டுகள் மறைந்துபோய் விட்டன என்பது கவலை அளிக்கும் விஷயமாகும். தமிழக பாரம்பரிய விளையாட்டுகளுக்கு எழுதப்படாத விதிமுறைகள் உண்டு. இன்று டாஸ்' போட்டு விளையாட்டை தொடங்குவது போல கிராமிய விளையாட்டுகளில் ஆட்டத்தை தொடங்க ஆளை தேர்ந்தெடுப்பதற்கு ஒரு முறை வைத்திருக்கிறார்கள். தப்பா ஒண்ணு, தவளை ரெண்டு என்று ஆரம்பித்து சுருங்கி விழு என்று முடியும் சிறுபாடலை பாடுவார்கள். சாப்பூட் திரி, காயா-பழமா?, ஒத்தையா-ரெட்டையா? என்று வாய்மொழிகளை கூறும் வழக்கமும் இருக்கிறது. இதில் ஏதாவது ஒன்றை பாடி இறுதி வரி யார் மீது முடிகிறதோ அவர் ஆட்டத்தை தொடங்க வேண்டும் என்பது விதி. விளையாட்டுப் பருவம் என்றாலே அது குழந்தைப் பருவம்தான். குழந்தைகளுக்கான விளையாட்டுகளும் ஏராளம். வீடும், வீதியும், பொட்டலும், ஊர் மந்தையும் குழந்தைகளின் விளையாட்டு களங்கள்.



குழந்தைகளின் ஆட்டங்கள் பெரும்பாலும் குழு நிலையில் ஆரம்பித்து பிறகு வருவோரையும் தம்முடன் இணைத்துக் கொள்வதாக இருக்கும். இவர்களின் ஆட்டங்கள் பொழுதுபோக்கும், மனமகிழ்ச்சியும் தருபவை. போட்டி விளையாட்டுகள், உடல் திறன் விளையாட்டுகள், அறிவு விளையாட்டுகள் என சில வகைகள் உண்டு. கிட்டிப்புள், பம்பரம், கோலி, கபடி, நீச்சல் என்று பருவம் தோறும் விளையாட்டுகள் மாறும். சிறுவர்களின் பச்சைக்குதிரை ஆட்டம் பிரபலமானது. இது உயரம் தாண்டுதலின் முன்னோடி விளையாட்டு. இதில் முதலில் ஒருவர் தரையில் காலை நீட்டி அமருவார். மற்றவர்கள் காலை தாண்டுவார்கள். பிறகு கால்மேல் கால் வைத்து உயரம் கொஞ்சம் கூட்டப்படும். அதையும் எல்லோரும் தாண்டிவிட்டால் கைகளை நீட்டுவார், பிறகு குனிந்து நிற்பார், கழுத்தை மட்டும் குனிவார், இறுதியில் நிமிர்ந்து நிற்க அனைவரும் தாண்டுவர். இதில் எந்த நிலையில் ஒருவர் தாண்ட முடியாமல் போகிறாரோ அவர் தோற்றவராக காலை நீட்டி உட்காருவார், மற்றவர்கள் தாண்டுவார்கள். இது உடல் திறனை சோதிப்பதும், கூட்டுவதுமான விளையாட்டு. பூப்பறிக்க வருகிறோம் ஆட்டம் சிறுமிகளுக்கானது. முதலில் இரு குழுவாக பிரிவர். ஒரு



பிரிவினர் ஒவ்வொருவருக்கும் பூக்களின் பெயரைச் சூட்டிக்கொள்வர். பிறகு எதிர் குழுவினர் பூப்பறிக்க வருகிறோம் என்று பாடிக்கொண்டே முன்னே வருவர். என்ன பூ என்று கேட்டதும் ஒரு பூவின் பெயரைச் சொல்வார்கள். அந்த பூ பெயருடையவர் முன்னே வந்து நிற்க (கயிறு இழுத்தல் ஆட்டம் போல) அவரை தங்கள் பக்கம் இழுக்க எதிர் குழு முயற்சிக்கும். இதை பூக்குழுவினர் தடுப்பர். இந்த ஆட்டம் பூக்களை அறிதல் மற்றும் உடல்திறனை மேம்படுத்துகிறது. குழுவாக செயல்படுதல், பொறுப்புணர்ச்சியை வளர்க்கிறது. இளம் வயதுப் பெண்கள் ஆடும் ஆட்டங்கள் மிகவும் குறைவு. அதுவும் வீட்டுக்குள் ஆடும் ஆட்டமே. கடும் கட்டுப்பாடு, மிகுதியான வேலை நேரம் தவிர்த்து பல்லாங்குழி, தாயம், சில்லுக்கோடு, தட்டாமலை போன்ற ஆட்டங்களை ஆடுவர். வெளியில் சென்றால் கும்மியாட்டம், கோலாட்டம் ஆடுவார்கள். திருவிழா காலங்களில்தான் இந்த விளையாட்டுகள் மிகுதியாக ஆடப்படும். மகளிர் விளையாட்டுகள் மன மகிழ்ச்சியையும், பொழுதுபோக்கையும் அடிப்படையாக கொண்டுள்ளன. இவ்விளையாட்டுகள் அறிவுத்திறனையும், உடல்திறனையும் மேம்படுத்துகின்றன. தற்போதைய கால கட்டத்தில் செல்போன் பயன்பாட்டின் ஆதிக்கத்தால் ஆரோக்கியமும், உடல் திறனையும் வளர்க்கும் இதுபோன்ற விளையாட்டுகள் மறைந்துபோய் விட்டன என்பது கவலை அளிக்கும் விஷயமாகும்


## மீம்ஸ்







## அறவாழ்வே ஆனந்தம் தருமே!



1.தாய் தந்தை இருவரும் குழந்தைகளுக்கு முன்னுதாரணமாய்த் திகழ வேண்டும்.
2.அன்பான வார்த்தைகளைக் குழந்தைகள் முன் பேசவேண்டும்
3.பணிச்சுமை மன அழுத்தத்தால் குழந்தைகள் மீது கோபப்படுவதைத் தவிர்த்தல் நலம்.
4.சினம் தவிர்த்தலைப் பயிற்சி மூலம் கடைபிடிக்கலாம்.
5.குழந்தைகளின் ஒவ்வொரு செயலையும் மனம் திறந்து பாராட்டுங்கள்.
6.தவறை பிறர் முன்னிலையில் கண்டிப்பது தவிர்த்தல் நல்லது. தவறைப் புரியவைத்துப் பின் சரிசெய்யக்கற்றுக்கொடுத்தல் நன்று.
7.குழந்தைகள் மீதுள்ள பாசத்தைப் புரிய வைத்துவிட்டால் அவர்கள் செயலில் மிளிர்வர்.
8.வாழ்வதற்குப் பொருள்வேண்டும். வாழ்வதிலும் பொருள் வேண்டும். எனவே குழந்தைகbள் உணர்வுக்கு மதிப்பளித்து தினமும் ஒருமணிநேரமாவது மகிழ்வாக இருங்கள்.
9.சிறுசிறு வேலைகளைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்து சுயமாகச் செய்யப் பழக்குதல் நல்லது.
10.குழந்தைகளின் தனித்திறனைக் கண்டறிந்து ஊக்குவிப்பதன் மூலம் சாதனையாளராக உருவாக்க முடியும்.
11.தொடுதல் பற்றிய விழிப்புணர்வைக் குழந்தைகளுக்குப் புரியும் வண்ணம் விளக்கமாக எடுத்துரைக்கவேண்டும்.
12.குழந்தைகளின் கற்றல் குறித்து ஆசிரியரிடம் கேட்டறிந்து அதன் அடிப்படையில் புரிதலை மேம்படுத்த வேண்டும்.
13.பள்ளியில் அன்றாட நடத்திய பாடத்தை அன்றே திருப்புதல் நன்று.வீட்டுப்பாடம் இருப்பின் எழுதச் சொல்லி வழிநடத்தலாம்.
14.தற்போது நடைமுறையில் உள்ள எண்ணும் எழுத்தும் கல்வி முறை படிப்பாளி களைப் படைப்பாளர்களாக உருவாக்கும் உந்துசக்தியாக உள்ளது. அரசுக்குப் பாராட்டுக்கள்..
15.ஊட்டச்சத்து உணர்வுகளைக் குழந்தைகளுக்கு வழங்கிப் பாரம்பரிய விளையாட்டுகளை விளையாட அனுமதிக்க லாம்.
16.பிற உயிர்களிடத்து அன்பு பாராட்டுதல்,பெரியவர்களை மதித்தல்,சக குழந்தைகளிடம் நட்பு பாராட்டி மன்னிக்கும் மாண்பை வளர்த்தல் போன்றவற்றைக் கற்றுத்தர வேண்டும்.
17.ஒவ்வொருவரும் தனித்தன்மையோடு படைக்கப்பட்டவர்கள் எனவே பிறரோடு ஒப்பிடுவதை அறவே தவிர்க்க வேண்டும்
18.குடும்பத்தில் அனைவரும் ஒரு வேளையாவது ஒன்றாக அமர்ந்து உணவு அருந்துதல் நல்லது.
19.திறன்பேசியைக் குழந்தைகளிடம் கொடுப்பதைக் கட்டுப்படுத்தவேண்டும். வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் விதமாக செய்தித்தாள்களை வாசிக்கச்சொல்லலாம்.
20.குழந்தை தொழிலாளர் ஒழிப்பு பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். 14 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் கட்டாயம் கல்வி பயின்று இருக்க வேண்டும்
21.அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் மதிப்பு கொடுக்க வேண்டும்
22தியானம் யோகா ஆரம்ப நிலையிலேயே கொண்டு வர வேண்டும். கல்வி சாரா செயல்பாடுகளில் ஊக்குவிக்க வேண்டும்



## விடுகதை

| | |
|---|---|
| வெள்ளை ராஜாவுக்கு கறுப்பு உடை அது என்ன? | உழுந்து |
| முத்துக் கோட்டையிலே மகாராணி சிறைபட்டிருக்கிறாள். அவள் யார்? | நாக்கு |
| கூரை வீட்டைப் பிரிச்சா ஓட்டுவீடு! ஓட்டு வீட்டுக்குள்ள வெள்ளை மாளிகை!வெள்ளை மாளிகைக்கு நடுவில் குளம்!அது என்ன? | தேங்காய் |
| பேச்சுக் கேட்குது பேசுபவர் தெரியவில்லை. அது என்ன? | வானொலி பெட்டி |
| கந்தல் துணிக்காரி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்? | சோளப்பொத்தி |
| வடிவழகு மாப்பிள்ளை வயிற்றால் நடக்கிறார். அவர் யார்? | பாம்பு |

## ஜோக்ஸ்



உன் ஆசிரியர் ரொம்ப நல்லவர்னு எப்படி சொல்ற?

ஞாயிற்றுக்கிழமை கூடாது டியூஷன் வைத்து பாடம் நடத்தி எங்கள தூங்க வைச்சிடுவார்.

=================

எங்க அப்பாவை நினைச்சா பாவமா இருக்குடா!

ஏன்டா?

எங்க வாத்தியார் கூட "முட்டாள் பையன் மகனே" னு சொல்றாரு டா.




=================

உங்க தாத்தா பாஸ், பாஸ்னு சந்தோஷத்தில் குதிக்கிறார். நீ பரிட்சையில் பாஸ் ஆனதாக குதிக்கிறாரா?

இல்ல. அவர் முதியோர் கல்வி தேர்வில் பாஸ் ஆகிட்டார். அதுக்கு தான்.

=================

மகாராஜாவின் மனைவி காற்றடிச்சா பறந்து விடுவார்கள்!

மகாராணி அவ்வளவு ஒல்லியா?

இல்ல அவங்க தான் "பட்டத்து" ராணி ஆச்சே!

=================

நமது மன்னர் போர் புரிவது போல் அடிக்கடி கனவு வருவதாக சொல்கிறார். ஏன்?

கனவில்கூட போருக்கு செல்ல மாட்டார் என்று யாரும் சொல்லிவிடக் கூடாது என்பதற்காக தான்.



# பன்முகம்



## சத்துகள் நிறைந்த செவ்வாழைப்பழம்

தினமும் ஒரு செவ்வாழைப் பழம் சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறையுமாம். மற்ற பழங்களை விட செவ்வாழையில் குறைவான கலோரி அளவு மற்றும் அதிகமான நார்ச்சத்து காணப்படுவதே காரணமாகும்.

செவ்வாழைப்பழத்தில் அதிக அளவு பொட்டாசியம் உள்ளதால், சிறுநீரகத்தில் கற்கள் உருவாகாமல் தடுக்கிறது. ரத்த ஓட்டத்தை



மேம்படுத்துவதால் சருமம் ஆரோக்கியமாக இருக்கும். இதில் 75 சதவீதம் நீர் மற்றும் ஆன்டி ஆக்சிடென்டுகள் உள்ளதால், சருமத்துக்கு தேவையான ஈரப்பதம் கிடைக்க உதவுகிறது.

அடிக்கடி செவ்வாழைப்பழம் சாப்பிடுவதால், சருமத்தில் ஏற்படும் வடுக்கள், துளைகள் சரியாகின்றன. செவ்வாழைப்பழத்தில் உள்ள வைட்டமின் பி 6, ரத்தத்தின் தரத்தை மேம்படுத்தி ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்கிறது.

ரத்தசோகை நோய் உள்ளவர்கள் தினமும் 2 அல்லது 3 செவ்வாழைப்பழம் சாப்பிட்டால் அவர்களின் சிவப்பு ரத்த அணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

செவ்வாழைப் பழத்தை தேங்காய், எள் அல்லது பாதாம் எண்ணெய்யுடன் கலந்து தலையில் தேய்த்தால் தலைமுடியில் பொடுகு நீங்குவதுடன், வறட்சியும் குறைகிறது.

மலச்சிக்கலைப் போக்குவதில் செவ்வாழைப் பழம் மிகவும் உதவியாக இருக்கிறது. நாள்பட்ட மலச்சிக்கல், மூலத்தை குணப்படுத்த உதவுகிறது. தினமும் மதிய வேளையில் செவ்வாழை சாப்பிடுவதால் செரிமானம் மேம்படும்.

புகை பிடிக்கும் பழக்கத்தைக் கைவிடவும் செவ்வாழைப் பழம் உதவுகிறது என்றால் ஆச்சரியமாக இருக்கும். உண்மையில், செவ்வாழைப்பழம் சாப்பிடுவதால் நிகோடின் உட்கொள்வதை குறைக்க முடியும். புகை பிடிக்கும் பழக்கத்தை கைவிட்ட நபர்களுக்கு ஏற்படும் அறிகுறிகளை குறைக்க இந்த பழத்தில் உள்ள பொட்டாசியம், மெக்னீசியம் உதவுகிறது.

## தண்ணீரை எத்தனை நாட்கள் சேமித்து வைத்து உபயோகிக்கலாம்?





நீரின்றி அமையாது உலகம் என்ற சொல்லுக்கேற்ப தண்ணீர் இல்லாமல் உலகமும் இயங்காது, உடலும் இயங்காது. நமது உடல் எடையில் சுமார் 60 சதவீதம் தண்ணீரால் நிரப்பப்பட்டிருக்கிறது. எனவே உடல் ஆரோக்கியத்திற்கு நல்ல சுத்தமான கிருமிகள் அற்ற குடிநீர் மிகமிக முக்கியம்.

நல்ல குடிநீருக்கென்று ஒரு சுவை, மணம், தரம் உண்டு. அதிக வெப்பம் உள்ள இடத்தில் இருக்கும் குடிநீரில் பாக்டீரியாக் கிருமிகள் வளரவும், நேரடி சூரிய ஒளி படும் இடத்தில் இருக்கும் குடிநீரில் பாசி படரவும் வாய்ப்பு அதிகம். குளிர்ச்சியான இடத்தில் வைக்கப்படும் குடிநீரில் கிருமிகள், பாசிகள் வளர வாய்ப்பு குறைவு.

வீட்டினுள் சாதாரண இடத்தில் நாம் குடிநீரை பாத்திரத்தில் வைத்திருக்கிறோம் என்றால் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களில் காலி பண்ணிவிடுவது நல்லது. வீட்டிற்குள் பிரிட்ஜில் வைக்கப்படும் வடிகட்டிய குடிநீரை சுமார் நான்கைந்து நாட்களுக்கு மட்டுமே வைத்துக் கொள்ளலாம்.

குடிநீர் வைத்திருக்கும் பாத்திரம் நன்றாக மூடி வைக்கப்பட்ட வேண்டும். இல்லையென்றால் பிரிட்ஜின் உள்ளே இருக்கும் உணவுப் பொருட்கள் மூலம் பூஞ்சைக் காளான் படர வாய்ப்புண்டு.

அதிக நாட்களுக்கு வடிகட்டிய குடிநீரை சேமித்து வைக்க வேண்டும் என்றால் நன்றாக மூடப்பட்ட, சீல் வைக்கப்பட்ட பெரிய பெரிய பாத்திரங்களில் சேமித்து வைக்க வேண்டும். அத்துடன் இந்த பாத்திரங்கள் குளிர்ந்த, இருட்டான பகுதியில் தான் பாதுகாக்கப்பட வேண்டும்.

சூரிய ஒளி நேராக படக்கூடாது. வெப்பமும் அருகில் இருக்கக் கூடாது. அப்பொழுதுதான் நுண்ணுயிர்க் கிருமிகள் வளரும் வாய்ப்பில்லாமல் தடுக்கப்படும்.

பிளாஸ்டிக் பாட்டில்களில் கேன்களில், வைக்கப்படும் குடிநீர் வெப்பத்திலும், சூரிய வெளிச்சத்திலும் அதிக நேரம் இருந்தால் பிளாஸ்டிக்கில் உள்ள கண்ணுக்குத் தெரியாத ரசாயனப் பொருட்கள் சிதைந்து குடிநீரில் கலந்துவிட வாய்ப்புண்டு. எனவே உயர்தரமான பிளாஸ்டிக் பாட்டில்கள் மற்றும் கேன்களில் தண்ணீரை வைத்து பாதுகாப்பது நல்லது.

நமது வீட்டு வெப்ப சூழ்நிலையில் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் தான் குடிநீரை சேமித்து வைக்க முடியும். மிகப் பழைய குடிநீரை குடிப்பது நல்லதல்ல. பாட்டிலை திறந்து விட்டால் அந்தத் தண்ணீர், நமது அறையில் இருக்கும் காற்றிலுள்ள கார்பன் டை ஆக்ஸைடை இழுத்துக் கொள்ளும். அதனால் சுவை மாறிவிடும்.

பாட்டிலைத் திறந்து விட்டால் ஓரிரு நாட்களுக்குள் குடித்து முடித்து விடுவது நல்லது. காரில் வைக்கப்படும் குடிநீர் பாட்டில்களில் வெயில் பட்டு பாக்டீரியா வளர வாய்ப்புண்டு. தினமும் கண்ணாடி டம்ளரை உபயோகித்து தண்ணீர் குடிப்பது, குடித்த பின் அவ்வப்பொழுது கழுவி வைப்பது மிகவும் நல்லது.

## பச்சை ஆப்பிள் ஏன் சாப்பிட வேண்டும்?



ஆப்பிள் என்றதுமே சிவப்பு நிறம்தான் நினைவுக்கு வரும். ஆனால் ஆப்பிள்களில் விதவிதமான வண்ணங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றில் சிவப்பு ஆப்பிளுக்கு அடுத்தபடியாக பச்சை ஆப்பிள் அதிகம் புழக்கத்தில் இருக்கிறது. இதுவும் சிவப்பு ஆப்பிளை போல் ஆரோக்கியத்துக்கு பலம் சேர்க்கக்கூடியதுதான். சிவப்பு ஆப்பிளை ருசிக்க விரும்பாத குழந்தைகளுக்கு மாற்றுத்தேர்வாக பச்சை ஆப்பிளை கொடுக்கலாம். இந்த ஆப்பிளை ஏன் சாப்பிட வேண்டும் என்பது பற்றி பார்ப்போம்.

* சிறு வயதிலேயே குழந்தைகள் பலர் பார்வை குறைபாடு பிரச்சனையை எதிர்கொள்கிறார்கள். பச்சை ஆப்பிளில் பார்வைத்திறனை பலப்படுத்த உதவிடும் வைட்டமின் ஏ சத்து நிறைந்துள்ளது. கண்களின் ஆரோக்கியத்தையும் காக்கக்கூடியது. சிவப்பு ஆப்பிளை போலவே இந்த ஆப்பிளின் வெளிப்புற தோல் பகுதியை தவிர்க்கக்கூடாது. நன்கு கழுவிவிட்டு உட்கொள்ள வேண்டும். நோய் எதிர்ப்பு சக்தியை மெருகேற்றும் தன்மையும் பச்சை ஆப்பிளுக்கு உண்டு.

* எலும்புகளுக்கு வலிமை சேர்க்கும் கால்சியம் பச்சை ஆப்பிளில் இருக்கிறது. குறிப்பாக இந்த ஆப்பிள் ஆஸ்டியோபோரோசிஸ் பாதிப்பை தடுக்கக்கூடியது. இதனுடன் பிற ஊட்டச்சத்து உணவுகளையும் உட்கொள்வது எலும்புகளை வலிமையாக்கும்.

* தினமும் பச்சை ஆப்பிள் சாப்பிடுவது நுரையீரல் தொடர்பான நோய் அபாயங்களை குறைக்கும் என்பது ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது. அத்துடன் ஆஸ்துமா அபாயத்தையும் குறைக்கும். நோய்த்தொற்று பரவும் காலத்தில் பச்சை ஆப்பிள் சாப்பிடுவது நுரையீரலுக்கு பாதுகாப்பு அரணாக அமையும்.


* பச்சை ஆப்பிளில் இருக்கும் கரையக்கூடிய நார்ச்சத்து கொழுப்பு அளவைக் குறைக்க உதவிடும். பக்கவாதம் ஏற்படும் அபாயத்தையும் தடுக்கும். பச்சை ஆப்பிள் கெட்ட கொழுப்பின் அளவைக் குறைக்கும் என்பது அமெரிக்கன் ஜர்னல் ஆப் கிளினிக்கல் நியூட்ரிஷன் நடத்திய ஆய்வில் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

* உடலில் அதிக கொழுப்பு சேர்ந்து அவதிப்படுபவர்கள் பச்சை ஆப்பிளை உட்கொள்வது நல்லது. ரத்த அழுத்த பிரச்சனை கொண்டவர்களுக்கும் பச்சை ஆப்பிள் சிறந்த நண்பனாக விளங்கும்.

*பச்சை ஆப்பிளில் அதிக நார்ச்சத்து உள்ளது. அது உடலில் உள்ள நச்சுக்களை நீக்க உதவிடும். செரிமான செயல்பாட்டுக்கும் துணை புரியும். வளர்சிதை மாற்றத்தையும் துரிதப்படுத்தும். உடல் எடையை கட்டுக்குள் வைத்திடவும் உதவிடும்.

பச்சை ஆப்பிளை காலை மற்றும் மதிய உணவுக்கு இடையே சாப்பிடலாம். இரவில் சாப்பிடுவது குடல் இயக்க செயல்பாடுகளுக்கு இடையூறை ஏற்படுத்தக்கூடும். வாயு தொல்லை ஏற்படவும் வழிவகுத்துவிடும்.

## குழந்தைகள் காலைப் பொழுதை எப்படித் தொடங்கலாம்?



குழந்தைகள் காலைப்பொழுதை எப்படி தொடங்கினால், அன்றைய நாள் சிறப்பானதாக இருக்கும் என்பதை இந்த தொகுப்பு விளக்குகிறது.

காலையில் புன்னகையோடு, நம்பிக்கை எண்ணத்துடன் எழுந்திருங்கள். காலைச் சூரியனுக்கு, 'குட் மார்னிங்' வைக்கலாம். கண்களுக்கு நல்லது. வைட்டமின்-டி சத்தும் கிடைக்கும்.

காலையில் வீசும் இளங்காற்றை ஐந்து நிமிடங்களாவது மொட்டை மாடியிலோ அல்லது வெளி இடங்களுக்குச் சென்றோ சுவாசிக்கலாம். நடைப்பயிற்சி செய்வது நல்லது.

வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடிய பழ ரசம், சத்துமாவுக் கஞ்சி, கூழ், காய்கறி சூப், உளுந்தங் கஞ்சி ஆகியவற்றைச் சாப்பிடலாம். அந்த நாளை நல்ல உணவோடு தொடங்கும் வாய்ப்பு இது.

பத்து நிமிடங்களாவது தியானம், யோகா போன்ற பயிற்சிகளைச் செய்யலாம். அல்லது கண்களை மூடி வெறும் சுவாசத்தை மட்டும்கூட கவனிக்கலாம்.

கோடை காலத்தில் குளிர்ந்த நீரிலும், மழை மற்றும் பனிக்காலத்தில் வெந்நீரிலும் குளிப்பது நல்லது. இதனால் உடல் புத்துணர்வாக, சுறுசுறுப்பாக இருக்கும்.

ஒரு காகிதத்தில், இன்று நாம் செய்யவேண்டியவை என்னென்ன என்று குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.

தவறாமல் காலை உணவைச் சாப்பிட வேண்டும்.

அன்றைய வேலையைத் தொடங்கும்போது 'இன்று நான் சிறப்பாகச் செயல்படுவேன்' என்ற உத்வேகத்தோடு தொடங்குங்கள். அந்த நாள் சிறப்பானதாக, உங்களுக்கானதாக அமையும்.

## குழந்தைகள் டி.வி. பார்ப்பது நல்லதா?




செல்போன், வீடியோ கேமுக்கு அடுத்தபடியாக குழந்தைகளின் விருப்பமான பொழுதுபோக்காக தொலைக்காட்சிதான் விளங்குகிறது. அதிலும் விடுமுறை நாட்களில் மணிக்கணக்கில் டி.வி.யில் மூழ்கிவிடும் குழந்தைகள் நிறைய பேர் இருக்கிறார்கள். கார்ட்டூன், விளையாட்டு தொடர்பான நிகழ்ச்சிகள்தான் அவர்களின் விருப்ப தேர்வாக இருக்கிறது.

குழந்தைகள் டி.வி. பார்ப்பது தவறல்ல. ஆனால் அதிலேயே மூழ்கி விடுவதுதான் நல்லதல்ல. அவர்கள் பார்க்கும் நிகழ்ச்சிகள் அறிவுத்திறனை மேம்படுத்துவதாக அமைந்தால் பாதகமில்லை. வெவ்வேறு கலாசாரங்கள், பாரம்பரிய இடங்கள், உலகின் ஒவ்வொரு பகுதியில் வாழும் மக்களின் பழக்கவழக்கங்கள், அங்குள்ள புகழ்பெற்ற இடங்கள் என பொது அறிவையும், சிந்தனை திறனையும் விசாலப்படுத்த வித்திடும் நிகழ்ச்சிகளை பார்ப்பது நல்லது.

குழந்தைகள் வாசிப்பதிலோ, எழுதுவதிலோ தடுமாற்றத்தையோ, சிரமங்களையோ எதிர்கொண்டால் அவர்களை டி.வி., செல்போன் உள்ளிட்ட மின்னணு சாதனங்களின் திரைகளின் முன்பு சிறிது நேரம் செலவிட வைக்கலாம். எழுதுவதில் சிரமம் கொண்ட குழந்தைகளை பள்ளிக்கூடத்திலோ, வீட்டிலோ டி.வி. திரைகள் முன்பு சிறிது நேரம் அமர வைக்கலாம். அதில் தென்படும் காட்சியும், ஒலியும் அதன் மீது கவனம் செலுத்த வைக்கும். அந்த காட்சிகள் குழந்தைகள் விரும்பும் விளையாட்டு, கார்டூன் சார்ந்த காட்சிகளாக இருக்கலாம் என்று அந்த ஆய்வு குறிப்பிடுகிறது.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No

8122664699

## சிவராத்திரி தாண்டவ தரிசனம் நாட்டிய நாடகம்



ஆம்பூர் வர்த்தக மையத்தில் நேற்று நடந்த நிருத்யாஞ்சலி விழாவில் சிவராத்திரி தாண்டவ தரிசனம் நாட்டிய நாடகம் நடந்தது.

## விளையாட்டு விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள்



கோவை ராமகிருஷ்ணா மகளிர் கல்லூரியின் 35வது விளையாட்டு விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## பாரம்பரிய உணவு திருவிழா



கன்னியாகுமரியில் பாரம்பரிய உணவு திருவிழா நடந்தது.

## தூத்துக்குடி சக்தி பீடத்தில் பெண்கள் இளநீர் அபிஷேகம்



விவசாயம் வளம் பெற வேண்டி தூத்துக்குடி சக்தி பீடத்தில் பெண்கள் இளநீர் அபிஷேகம் செய்து வழிபாடு நடத்தினர்.

## கோதண்ட ராமர் கோயிலில் கும்பாபிஷேகம்



சென்னை சோழவரம் அருகே உள்ள எருமை வெட்டி பாளையம் கோதண்ட ராமர் கோயிலில் கும்பாபிஷேகம் நேற்று நடந்தது.

## கற்சிலா வேல் சிலை கும்பாபிஷேகம்



பழனி கிரிவீதியில் கற்சிலா வேல் சிலை கும்பாபிஷேகம் நேற்று நடந்தது.

## 500 இளைஞர்கள் பங்கேற்ற வாகனப்பிரச்சாரம்



முதல்வர் ஸ்டாலின் பிறந்த நாள் விழாவினையொட்டி திருவள்ளூரில் நேற்று சாலை பாதுகாப்பு மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்விற்காக 500 இளைஞர்கள் பங்கேற்ற மாபெரும் இருசக்கர வாகனப்பிரச்சாரம் நடந்தது. இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், நடிகர் ஆர்யா பங்கேற்றனர்.

## கோவை கம்பன் கழக விழா மலர்



கோவை கம்பன் கழக விழாவில் விழா மலரை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி இரா.சுரேஷ்குமார் வெளியிட்டார்.

## வளைகாப்பு விழாவில் கர்ப்பிணிகளுக்கு சீர்வரிசை



திருவெறும்பூர் எழில்நகரில் நேற்று நடந்த சமுதாய வளைகாப்பு விழாவில் கர்ப்பிணிகளுக்கு சீர்வரிசைகளை வழங்கி அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வாழ்த்தினார்.

## மரபுத்திருவிழா விழிப்புணர்வு கண்காட்சி



சேலத்தில் மரபுக்காய்கறிகள், கிழங்குகள், மரபு நெல் வகைகளைக் கொண்ட மரபுத்திருவிழா விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் விற்பனை நடைபெற்றது.

## ஜாக்டோ ஜியோ சார்பில் பாராட்டு விழா



உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு ஜாக்டோ ஜியோ சார்பில் சென்னையில் நேற்று பாராட்டு விழா நடந்தது.

## பெருமாள் கோயில் குடமுழுக்கு விழா



கண்டியூர் ஹரசாப விமோசன பெருமாள் கோயில் குடமுழுக்கு விழாவில் பங்கேற்ற பக்தர்கள்.

## அங்கன்வாடி பணியாளர்கள் போராட்டம்



கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலக வளாகத்துக்குள் அங்கன்வாடி பணியாளர்கள் நேற்று 6வது நாளாக போராட்டம் நடத்தினர்.

## மாற்றுத் திறன் படைத்த மாணவர்களுக்கான விழா



பாளையங்கோட்டையில் உதவும் நண்பர்கள் நடத்திய மாற்றுத் திறன் படைத்த மாணவர்களுக்கான விழா, அன்னை தெரசா நினைவு 26-வது ஆண்டு பகிர்வு விழாவில் நலத்திட்ட உதவிகளை எஸ்பி பிரசன்னகுமார் வழங்கினார்.

## பெருமாள் கோயிலில் குடமுழுக்கு




தஞ்சாவூர் அருகே கண்டியூர் ஹரசாப விமோசன பெருமாள் கோயிலில் குடமுழுக்கு நேற்று நடந்தது.

## பனையடி ஐயனார் கோயிலில் கும்பாபிஷேகம்



சிவகங்கை அருகே ஜெயங்கொண்டநிலை சித்தமல்லிக்கண்மாயில் பனையடி ஐயனார் கோயிலில் நேற்று கும்பாபிஷேகம் நடந்தது.

## சிறப்பு அலங்காரத்தில் அம்மன்



பர்கூரில் மகா மாரியம்மன் கோயில் திருவிழாவில் அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

## ஸ்ரீ தன்வந்த்ரி பகவான் மஹாஹோமம் 25–ஆம் ஆண்டு விழா



சேலத்தில் ஸ்ரீதன்வந்த்ரி ஆஸ்ரமம் டிரஸ்ட் & தேசிய சேவா சமிதி இணைந்து நடத்திய ஸ்ரீ தன்வந்த்ரி பகவான் மஹாஹோமம் 25–ஆம் ஆண்டு விழாவில் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பங்கேற்றார்.

## பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் பணியாளர்களுக்காக ரூ.83 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்தார்



சென்னையில் திருவல்லிக்கேணி தணிகாசலம் தெருவில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் பணியாளர்களுக்காக ரூ.83 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை துணை முதல்வர் உதயநிதி நேற்று திறந்து வைத்தார்.உடன் அமைச்சர் சேகர்பாபு, அறநிலையத்துறை ஆணையர் ஸ்ரீதர் உள்ளனர்.

## பூமி பூஜை



குமரி மாவட்டம் சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலய சுவாமி திருக்கோயில் தெப்ப குளத்தின் பழுதடைந்த சுற்று சுவர் பகுதியினை சீரமைக்க ரூ1.46 கோடி ஒதுக்கப்பட்டு நேற்று பணி துவங்கியது. பூமி பூஜையில் மேயர் மகேஷ், அதிமுக எம்எல்ஏ தளவாய்சுந்தரம் கலந்து கொண்டனர்.

## மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி



ஆலங்குடி சட்டமன்ற தொகுதி வடகாடு அரசினர் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் மெய்யநாதன் வழங்கினார்.

## அதிமுக மகளிர் அணி ஆலோசனை கூட்டம்



சென்னையில் அதிமுக மகளிர் அணி ஆலோசனை கூட்டம் நடந்தது.




## செய்யாறு கலைஞர் சிலை அருகே கலைஞர் பாஸ்கரன் ஏற்பாட்டில் அன்னதானம் !



செய்யாறு, பிப்.09:

செய்யாறு கலைஞர் சிலை அருகே 38ம் நாளான நேற்று மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் கலைஞர் பாஸ்கரன் ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கப்பட்டது.

ஒன்றிய செயலாளர்களான என்.சங்கர், ஞானவேல், தினகரன், மாவட்ட அயலக அணி துணைத் தலைவர் எம்.கே.கார்த்திகேயன், செயற்குழு உறுப்பினர்கள் வேல்முருகன், வெங்கடேஷ் பாபு ஆகியோர் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர்.

மாவட்ட துணைச் செயலாளர் லோகநாதன், நகர செயலாளர் விஸ்வநாதன், புரிசை சிவக்குமார், கோபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதையடுத்து தி.மு.க., பொறுப்பாளர்களான தங்கராஜ், ராஜதுரை, கோபு, சரத்பாபு, துரை, கவுன்சிலர்கள் ரமேஷ், அண்ணாதுரை, சூரியபிரகாஷ், தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு, பொதுமக்கள் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

அன்னதானத்தை பெற்றுக் கொண்ட பொதுமக்கள் மனதார வாழ்த்து தெரிவித்து விட்டு சென்றனர்.

## மாற்று கட்சியினர் அதிமுகவில் இணைந்தனர்



அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் பலரும் நேற்று அதிமுகவில் சேர்ந்தனர்.

# சுற்றுலா: குளு குளு ஊட்டியில் காண வேண்டிய முக்கியமான இடங்கள்!

பச்சைப் போர்வை போர்த்திய எழில்மிகு மலைகள், கண்ணாமூச்சி ஆட்டம் காட்டும் மேகங்கள், உடலுக்குமட்டுமல்லாதுமனதிற்கும் குளிர்ச்சி தரும் தட்பவெப்பநிலை, பாறைகளுடன் விளையாடியபடி ஓடி வந்து நம் கண்முன்னே விழுந்து நம்மைமகிழ்விக்கும் அருவிகள் என இயற்கையின் ஆதிக்கம் அதிகம் நிறைந்திருக்கும் இடம் ஊட்டி என்று சுருக்கமாக அழைக்கப்படும் உதகமண்டலம். ஊட்டியில் நாம் காண வேண்டிய இடங்களைப் பற்றி இந்த பதிவில் பார்ப்போம்.



மலை ரயில்

ஊட்டிக்கு மேட்டுப்பாளையத்திலிருந்துமலைரயிலைதினந்தோறும் இயக்குகிறார்கள். இரண்டுபக்கமும் ஓங்கி உயர்ந்து நிற்கும் மரங்கள், பூத்துக் குலுங்கி நம்மைப் பார்த்து தலையசைக்கும் வண்ண வண்ண பூக்கள் இவை யாவும் கண்களுக்கு இயற்கை தரும் விருந்து. சுவாரசியமான இந்த இரயில் பயணம் சுமார் ஐந்து மணி நேரம் நீடிக்கிறது. வழியில் மலைகளைக் குடைந்து குகைப் பாதைகளை அமைத்திருக்கிறார்கள்.

தொட்டபெட்டா

நீலகிரி மாவட்டத்தின் மிக உயரமான இடம் ஊட்டியிலிருந்து பத்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள தொட்டபெட்டா. கடல் மட்டத்திலிருந்து சுமார் 2623 மீட்டர் உயரத்தில் இந்த இடம் அமைந்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒரு தொலைநோக்கி நிலையத்தை அமைத்துள்ளார்கள். சக்திவாய்ந்த தொலைநோக்கி வழியாக இயற்கைக் காட்சிகளை வெகு அருகில்கொண்டுவந்துரசிக்கலாம். ஊட்டி பேருந்துநிலையத்திலிருந்து கோத்தகிரி செல்லும் பேருந்தில் ஏறினால்தொட்டபெட்டாஜங்ஷனில் இறங்கிக் கொண்டு அங்கிருந்து ஷேர் ஜீப்பில் தொட்டபெட்டாவை அடையலாம்.

தாவரவியல் பூங்கா

ஊட்டியில் மிகவும் புகழ்பெற்ற ஒரு இடம் தாவரவியல் பூங்கா. 1847 ல் உருவாக்கப்பட்ட இந்த பூங்கா 22 ஹெக்டேர் பரப்பளவு கொண்டது. இந்த பூங்கா தமிழ்நாடு அரசின் தோட்டக்கலைத் துறையால் நிர்வகிக்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் மே மாதத்தில் மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது.

ரோஜாப் பூங்கா

தாவரவியல் பூங்காவிலிருந்து அருகில் அமைந்துள்ள ரோஜாப் பூங்காவிற்குச்செல்லலாம். உலகின் சிறந்த பதினைந்து ரோஜாத் தோட்டங்களில் இதுவும் ஒன்று என்ற பெருமையினைப் பெற்றுள்ளது. இந்தபூங்காசுமார் 10ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்தியாவிலேயே அதிக அளவிலான ரோஜாச் செடிகளைக் கொண்ட பூங்கா என்ற சிறப்பைப் பெற்றுள்ளது. இந்த பூங்காவில் சுமார் 3600 வகையான ரோஜாச் செடிகள் அமைந்துள்ளன.

படகுத்துறை

விடுமுறைகளில் குடும்பத்தோடு படகுச் சவாரி செய்வது மகிழ்ச்சி தரும் ஒரு விஷயம். ஊட்டியில் அமைந்துள்ள இந்த செயற்கை ஏரி சுமார் மூன்று கிலோமீட்டர் நீளம் கொண்டது. இங்கு பெடலிங் போட் வசதியும் இருக்கிறது.

குன்னூர்

மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்குச் செல்லும் வழியில் ஊட்டியிலிருந்து இருபது கிலோமீட்டருக்கு முன்னால் அமைந்துள்ள இடம் குன்னூர். ஊட்டியிலிருந்து ஏராளமான பேருந்துகள் குன்னூருக்கு இயக்கப்படுகின்றன. ஒரு மணி நேரப்பயணம்தான்.

டால்ஃபின் நோஸ்

குன்னூரிலிருந்து சுமார் பத்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஒரு வியூபாயிண்ட் டால்பின் நோஸ். இங்கிருந்து நின்று பார்த்தால் கேதரின் நீர்வீழ்ச்சியைக் கண்டு களிக்கலாம். டால்பின் நோஸ் போகும் வழியில் அமைந்துள்ள மற்றொரு வியூபாயிண்ட் லேம்ப்ஸ் ராக். இந்த இடத்தில் நின்று இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கலாம். இந்த இரண்டு இடங்களிலும் வியூபாயிண்ட்டை அமைத்துள்ளார்கள்.

சிம்ஸ் தாவரவியல் பூங்கா

குன்னூரில் சிம்ஸ் தாவரவியல் பூங்கா அமைந்துள்ளது. குழந்தைகள் விளையாட நிறைய வசதிகள் இருக்கின்றன. ஒரு சிறிய நீச்சல் குளமும் இருக்கிறது. சிம்ஸ் பூங்காவிற்கு அருகில் ஊட்டியில் விளையும் அரிதான சீசனல் பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

ஊட்டி வர்க்கி

ஊட்டிக்கு புகழ் சேர்க்கும் ஒரு பேக்கரி உணவு வர்க்கி. பேக்கரிகளில் கிடைக்கும் இந்த பிஸ்கட் போன்ற பொருள் மிகவும் சுவையுடையது. மேலும் இங்கு சாக்லேட் பர்பியும் மிகவும் பிரபலம்.

அவசரமயமான உலகத்தில் ஏதோ ஒன்றைத்தேடி நாம் ஓடிக் கொண்டிருக்கிறோம். இதற்கு பரிசாகக் கிடைப்பதோ மனஅழுத்தமும் வியாதிகளும்தான். மனதை எப்போதும் புத்துணர்ச்சியோடு வைத்துக் கொண்டு சுறுசுறுப்பாக இயங்க வருடத்திற்கு ஒரு முறையாவது ஊட்டி போன்ற மலைவாசஸ்தலங்களுக்குச் சென்று வாருங்கள். மனமும் உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### வாகன தொழிற்சாலையில் வாய்ப்பு

சென்னை ஆவடியில் உள்ள கனரக வாகன தொழிற்சாலையில் (எச்.வி.எப்.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஜூனியர் டெக்னீசியன் பிரிவில் மணல், ஷாட் பிளஸ்டர் 122, மெஷினிஸ்ட் 55, மெட்டீரியல் ஹேண்ட்லிங் 25, பிட்டர் 6 உட்பட மொத்தம் 220 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு, ஐ.டி.ஐ.,

வயது: 18-35 (14.2.2026ன் படி) தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, டிரேடு தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

The Chief General Manager, Heavy Vehicles Factory, (A Unit of Armoured Vehicles Nigam Limited), Post Bag No. 01, HVF Estate, Avadi, Chennai - 600 054

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 300. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை. கடைசிநாள்: 14.2.2026

விவரங்களுக்கு: avnl.co.in

### உயிரியல் மையத்தில் பணியிடங்கள்

மத்திய அரசின் கீழ் செயல்படும் ஐதராபாத்தில் உள்ள 'செல்லுலர் & மூலக்கூறு உயிரியல் மையத்தில்' காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'டெக்னீசியன்' பிரிவில் மொத்தம் 50 இடங்கள் உள்ளன. கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு/ ஐ.டி.ஐ.,

வயது: 18-28 (23.2.2026ன் படி)

தேர்ச்சி முறை: டிரேடு தேர்வு, எழுத்துத்தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைனில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

The Section Officer (Recruitment Section), CSIR-Centre for Cellular and Molecular Biology, Uppal Road, Habsiguda, Hyderabad - 500 007, Telangana

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 23.2.2026

விவரங்களுக்கு: ccmb.res.in

## திருமுல்லைவாயிலில் ரூ. 65 லட்சம் நில மோசடி: 3 பேர் கைது

**சென்னை, பிப்.9:**

திருமுல்லைவாயல் விவேகானந்தா நகர், ரோஜா தெருவில் அமைந்துள்ள 3746 சதுரடி கொண்ட காலி மனையில் பாதி மனையை 1842 சதுர அடியை மட்டும் விலைபேசி நிலத்தின் உரிமையாளரான ஆனந்தகுமார், மோகன் என்பவரிடம் இருந்து கடந்த 31.08.2023 அன்று அம்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரைய ஆவண எண் 12269/2023-ன் படி கிரையம் பெற்றுள்ளார்.

அந்த இடத்தை துரைபாண்டி, ராஜேஷ், எட்வின், கோபி. வெங்கடேசன், அப்துல் அசன் குத்தூஸ் மற்றும் சிலர் ஒன்று கூடி போலியான ஆவணம் தயாரித்து மனுதாரரின் சொத்திற்கும் எதிர்மனுதாரரின் சொத்திற்கும் சம்மந்தமே இல்லாத நிலையில் மனுதாரரின் நிலத்தில் அத்துமீறி நுழைந்து கம்பி வேலியை சேதப்படுத்தி போலி ஆவணங்கள் தயாரித்து மனுதாரரின் நிலத்தை அபரித்துள்ளதாகவும் நடவடிக்கை எடுத்து நிலத்தை மீட்டு தரக்கோரி காவல்துறையில் புகார் கொடுக்கப்பட்டது. சொத்தின் மதிப்பு ரூ.65 லட்சம் ஆகும். இது தொடர்பாக நிலப்பிரச்சினை விசாரணை பிரிவு காவல் ஆய்வாளர் தனம்மாள் தலைமையிலான போலீசார் தீவிர விசாரணை நடத்தி அபுல் அசன் குத்தூஸ், துரைபாண்டி, கலீலூர்ரஹ்மான் ஆகியோரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது..

## ரூ.14.50 கோடியில் கிண்டியில் கடல் ஆமை பாதுகாப்பு மையம்: முதல்வர் ஸ்டாலின் அடிக்கல்

**சென்னை, பிப்.9:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (6ந் தேதி) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில், கடல் பல்லுயிர் பாதுகாப்பில் ஒரு முக்கிய மைல்கல்லாக சென்னை, கிண்டியில் 14.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள தமிழ்நாட்டின் முதல் கடல் ஆமை பாதுகாப்பு மையத்திற்கு அடிக்கல் நாட்டினார். மேலும் தமிழ்நாடு நகர்ப்புற பசுமை கொள்கை 2026 யை வெளியிட்டார்.

இந்த மையம் அறிவியல் ஆராய்ச்சி, டெலிமெட்ரி, கண்காணிப்பு மற்றும் மையப்படுத்தப்பட்ட தரவு மேலாண்மை ஆகியவற்றிற்கான சிறப்பு உட்கட்டமைப்பை வழங்குவதோடு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு மையமாகவும், பொதுக்கல்வி மற்றும் சமூக தொடர்பு தளமாகவும் செயல்படுவதோடு, தொடர்புடைய துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்திற்கான ஒரு முக்கிய மையமாகவும் செயல்படும். அழிந்து வரும் ஆலிவ் ரிட்லி கடல் ஆமைகள் கூடு கட்டும் வாழ்விடங்களில் மிக முக்கியமான ஒன்று தமிழ்நாட்டின் கடற்கரையோரம் ஆகும். ஒவ்வொரு ஆண்டும், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களின் கடற்கரையோரங்களில் பரந்த பகுதிகளில் ஆலிவ் ரிட்லி கடல் ஆமைகள் பெரிய அளவிலான கூடுகளை கட்டுகின்றன. உலகின் ஆறு கடல் ஆமை இனங்களில், 5 இனங்கள் இருக்கும் இந்தியாவின் ஒரே மாநிலம் தமிழ்நாடு. இது அதன் உலகளாவிய சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

## சென்னை ரெயில்வே கோட்டத்தில் முதன்முறையாக வேளச்சேரி ரயில் நிலையத்தில் பொதுமக்களுக்கான விளையாட்டு மைதானம்



**சென்னை, பிப்.9:**

சென்னை ரெயில்வே கோட்டத்தில் முதன்முறையாக வேளச்சேரி ரயில் நிலையத்தில் விளையாட்டு மையம் திறந்து வைக்கப்பட்டது.

ரெயில்வே நிலத்தை புதுமையான முறையில் பயன்படுத்துதல் மற்றும் சமூகத்தை மையமாகக் கொண்ட உள்கட்டமைப்பை மேம்படுத்துதலின் ஒரு முக்கிய படியாக, தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் வேளச்சேரி ரெயில் நிலையத்தில் புதிய வெளிப்புற விளையாட்டு மையத்தைத் திறந்து வைத்தது. சென்னை கோட்டத்தில் காலியாக உள்ள ரெயில்வே நிலம், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்நோக்கு விளையாட்டு வசதியாக மாற்றப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும். இவ்விளையாட்டு மையத்தை சென்னை கோட்ட கூடுதல் ரெயில்வே மேலாளர் தேஜ் பிரதாப் சிங் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் முதுநிலை கோட்ட வணிக மேலாளர் பரத் குமார் மற்றும் பிற அதிகாரிகள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

ஐந்தாண்டு உரிம ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம், ஆண்டுக்கு ரூ. 12.07 லட்சம் கட்டணமில்லா வருவாய் கிடைக்கும். இதன் மொத்த ஒப்பந்த மதிப்பு ரூ. 64.09 லட்சமாகும். அடிப்படை பயணிகள் சேவைகளைப் பாதிக்காமல் நிலையான வருவாயை ஈட்டுவதில் சென்னை கோட்டத்தின் உறுதிப்பாட்டை காட்டுகிறது. இந்த வெளிப்புற விளையாட்டு மையம், பாக்ஸ் கிரிக்கெட், பிக்கிள்பால் மைதானம், ஸ்கேட்டிங் தளம் மற்றும் பாரம்பரிய சிலம்பம் பயிற்சிக்கான இடங்கள் உள்ளிட்ட நவீன மற்றும் எளிதில் அணுகக்கூடிய விளையாட்டு உள்கட்டமைப்பை வழங்குகிறது. இதன் மூலம் இளைஞர்கள் மற்றும் உள்ளூர்வாசிகளிடையே உடற்பயிற்சி, பொழுதுபோக்கு மற்றும் பாரம்பரிய விளையாட்டுகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

சென்னை கோட்ட வணிகப் பிரிவின் இந்த முயற்சி, ரெயில்வே வளாகங்களுடனான பொதுமக்களின் ஈடுபாட்டை அதிகரிக்கும் என்றும், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இந்திய ரயில்வேயின் சமூக சார்ந்த ரயில் நிலைய மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, வேளச்சேரி ரெயில் நிலையம் ஒரு செயல்பாட்டு மையமாக மாறும்.

## ரூ.25 கோடி மதிப்புள்ள உயர்ரக கஞ்சா விமான நிலையத்தில் பறிமுதல்

**சென்னை, பிப்.9:**

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு தாய்லாந்து நாட்டு தலைநகர் பாங்காக்கில் இருந்து விமானம் வந்தது. அதில் வந்த வாலிபர்கள் சுற்றுலா விசாவில் தாய்லாந்துக்கு சென்றுவிட்டு திரும்பி வந்திருந்தனர். அவர்களது உடைமைகளை விமான நிலைய சங்க இலாகா அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அதில் அவர்களிடம் இருந்த சூட்கேசுக்குள் 14 பதப்படுத்தப்பட்ட ணவு பாக்கெட்டுகளில் ஹைட்ரோபோனிக் என்ற பதப்படுத்தப்பட்ட உயர்ரக கஞ்சாவை மறைத்து வைத்து கடத்தி வந்ததை கண்டுபிடித்தனர். 3 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 10 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இதேபோல வியட்நாம் ஹனோயில் இருந்து மலேசியா வழியாக சென்னைக்கு விமானத்தில் வந்த பயணிகளை சுங்க இலாகா அதிகாரிகளும், மத்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளும் இணைந்து சோதனை செய்தனர். அதில் 2 வாலிபர்கள் 35 காற்று புகாத பாக்கெட்டுகளில் 11 கிலோ ஹைட்ரோபோனிக் கஞ்சாவை கடத்தி வந்தது தெரிந்தது. இதையடுத்து தமிழ்நாடு போலீஸ் உதவியுடன் விமான நிலையத்தில் இருந்து 50 கிலோ மீட்டர் தூரம் சென்ற பயணியையும் பிடித்து அவரிடம் இருந்து 4 கிலோ கஞ்சாவை கைப்பற்றினார்கள். மேலும் இவர்கள் கொடுத்த தகவலின்பேரில் கஞ்சா கடத்தலுக்கு மூளையாக செயல்பட்டவரை கைது செய்தனர். இதையடுத்து 4 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 15 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

சென்னை விமான நிலையத்தில் மலேசியா, தாய்லாந்து நாட்டில் இருந்து கடத்தி வரப்பட்ட சுமார் ரூ.25 கோடி மதிப்புள்ள 25 கிலோ உயர்ரக கஞ்சாவை பறிமுதல் செய்த இலாகா அதிகாரிகள், இது தொடர்பாக 6 பேரை கைது செய்தனர்.

## எடப்பாடியை சந்தித்து கொங்குநாடு முன்னேற்றக் கழகம் ஆதரவு

**சென்னை, பிப்.9:**

சட்டமன்ற தேர்தலையொட்டி எடப்பாடி பழனிசாமியை நேரில் சந்தித்த கொங்குநாடு முன்னேற்றக் கழக நிர்வாகிகள், அண்ணா தி.மு.க.வுக்கு தங்களது ஆதரவை தெரிவித்தனர்.

தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. இந்த நிலையில், சென்னை பசுமைவழி சாலையில் உள்ள இல்லத்தில் அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை தமிழக முன்னேற்றக் காங்கிரஸ் கட்சி தலைவர் வயன் எஸ்.அருளதாஸ் சந்தித்தார். அப்போது, சட்டமன்றத் தேர்தலில் தனது கட்சியின் ஆதரவைத் தெரிவித்துக்கொண்டார். இதேபோல கொங்குநாடு முன்னேற்றக் கழக தலைவர் பெஸ்ட் ராமசாமி, கொங்கு முன்னேற்றக் கழக மாநிலப் பொதுச்செயலாளர் தங்கவேல் ஆகியோர் எடப்பாடி பழனிசாமியை நேரில் சந்தித்து சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு தங்களது ஆதரவை தெரிவித்துக்கொண்டனர்.

## பறவைக் காய்ச்சல் எதிரொலி: கோழிப் பண்ணைகளில் தீவிர பாதுகாப்பு நடவடிக்கை



**சென்னை, பிப்.9:**

சென்னையில் பறவைக் காய்ச்சால் காரணமாக காகங்கள் இறந்தத்தை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழகம் முழுவதும்கோழிப்பண்ணைகளில் தீவிர பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் இறந்த காகங்களை பறவைக் காய்ச்சல் தாக்கியுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. இது பறவைகளிடையே விரைவாகப் பரவக்கூடியது.பறவைக் காய்ச்சலை உருவாக்கும் எச்5என்1 வைரஸ் கிருமிகள் குறிப்பாக இடம் விட்டு இடம் பறக்கும் புறா, காகம், கொக்கு, நாரை போன்ற பறவைகளால் அதிகமாக பரப்பப்படுகிறது.மேலும், அவை வீடுகள் மற்றும் பண்ணைகளில் வளர்க்கப்படும் வாத்துகள் மற்றும் கோழிகளுக்கும் பரவுகிறது. சில நேரங்களில் மனிதர்கள் மற்றும் பிற பாலூட்டிகளிலும் பரவக்கூடும்.

தொற்றுநோய் பரவலைத் தடுக்க தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை, மாநிலம் முழுவதும் கண்காணிப்பை மேம்படுத்தவும், பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் உத்தரவிட்டுள்ளது. நாமக்கல், சேலம், ஈரோடு உள்பட நாமக்கல் மண்டலத்தில் சுமார் 1,000 கோழிப்பண்ணைகளில் 6 கோடிக்கும் அதிகமான முட்டை கோழிகள் வளர்க்கப்படுகின்றன. 2 கோடிக்கும் அதிகமான பிராய்லர் கோழிகள் வளர்க்கப்படுகின்றன.

இந்தநிலையில் தமிழகம் முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கோழிப் பண்ணைகளில் வெளியாட்கள் மற்றும் வாகனங்கள் நுழைவதற்கு தடை செய்யப்பட்டு, உயிரி பாதுகாப்பு (பயோ செக்யூரிட்டி) நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.பண்ணை வளாகங்களில் கிருமி நாசினி மருந்துகள் தெளிக்கப்படுகிறது.

நாமக்கல் மண்டலத்தில் சுகாதாரமான முறையில் கோழிப்பண்ணைகளை அமைத்து நடத்தி வருவதாலும், சென்னையில் இருந்து நாமக்கல்லுக்கோ, நாமக்கல்லில் இருந்து சென்னைக்கோ கோழிப்பண்ணை சம்மந்தமான முட்டை, தீவனம் போன்ற பொருட்கள் போக்குவரத்து நடைபெறுவதில்லை. இதனால் நாமக்கல் மண்டலத்தில் பறவைக்காய்ச்சல் தொற்று நோய் பரவ வாய்ப்பில்லை என பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# விவாதத்தில் கண்ணியத்தைக் கடைப்பிடிப்பது அவசியம்: மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா

**புதுடெல்லி, பிப்.9:**





'அவையில் விவாதம் மேற்கொள்வது ஜனநாயகத்தின் ஓர் அங்கம்; ஆனால் எந்தச் சூழலிலும் கண்ணியம் தவறாமல் விவாதம் நடைபெறுவது அவசியம்' என மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா சனிக்கிழமை தெரிவித்தார்.

பிகார் சட்டப்பேரவை நிறுவன நாளை முன்னிட்டு பேரவை வளாகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் ஓம் பிர்லா பங்கேற்றார். அப்போது தேசிய இ-விதான் செயலியை (நேவா) அவர் தொடங்கி வைத்தார்.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பேரவை நடவடிக்கைகளை காகிதமில்லா எண்ம நடைமுறையில் மேற்கொள்ள நேவா உருவாக்கப்பட்டுள்ளது.

பிகார் பேரவை அலுவல்களை எண்மமயாக்கும் நேவா அறிமுக நிகழ்ச்சியில் பிகார் பேரவைத் தலைவர் பிரேம் குமார், மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் நாராயண் சிங், மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு உள்ளிட்டோர் பங்கேற்றனர். பிகார் முதல்வர் நிதீஷ் குமார் பங்கேற்கவில்லை.

நிகழ்ச்சியில் ஓம் பிர்லா பேசியதாவது: நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களது கருத்துகளைத் தெரிவிக்க முழு உரிமை உள்ளது. அவையில் விவாதம் மேற்கொள்வது ஜனநாயகத்தின் ஓர் அங்கம்; ஆனால் எந்தச் சூழலிலும் கண்ணியம் தவறாமல் விவாதம் நடைபெறுவது அவசியம்.

சட்டப்பேரவை செயல்பாடுகள் குறித்து உறுப்பினர்கள் முறையாகக் கற்க வேண்டும். மக்களின் நம்பிக்கையைப் பெற்று உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் ஜனநாயக ரீதியாக முறையான கோரிக்கைகளை முன்வைத்து சட்டம் இயற்றும் நடைமுறையை அர்த்தமுள்ளதாக மாற்ற வேண்டும்.

அறநெறிகளைப் பின்பற்றி, பொறுப்புடன் செயல்பட்டு, அரசமைப்புச் சட்டத்தை தெளிவாகப் புரிந்து நடந்துகொள்ளும் உறுப்பினர்களால் வெளிப்படையான மக்களுக்கான நிர்வாகத்தை உறுதி செய்ய முடியும். ஜனநாயக பாரம்பரியத்தின் பிறப்பிடமாகத் திகழும் பிகார்தான் நாடாளுமன்ற முறைக்கு கொள்கை ரீதியான அடித்தளத்தை அமைக்க வழிவகுத்தது என்றார்.

## விளையாட்டு செய்திகள்

### டி20 உலகக்கோப்பை: அமெரிக்காவை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் தொடங்கிய இந்தியா

**மும்பை, பிப்.9:**

இந்தியா மற்றும் இலங்கை இணைந்து 10-வது ஐ.சி.சி. ஆடவர் டி20 உலக கோப்பை கிரிக்கெட் போட்டித்தொடரை நடத்துகிறது. 20 அணிகள் பங்கேற்கும் இந்த தொடரில் தலா 5 அணிகள் என 4 பிரிவுகளாக (ஏ,பி,சி,டி) பிரிக்கப்பட்டு லீக் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இதில் 3-வது ஆட்டத்தில் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறும் நடப்பு சாம்பியனான இந்தியாவுடன், அமெரிக்கா அணி மோதியது. இதில் டாஸ் வென்ற அமெரிக்கா அணியின் கேப்டன் மோனங்க் படேல் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி இந்தியா முதலில் பேட்டிங் செய்தது. தொடக்க வீரர்களாக அபிஷேக் சர்மா , இஷான் கிஷான் களமிறங்கினர். தொடக்கத்தில் அபிஷேக் சர்மா டக் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார். பின்னர் அமெரிக்கா அணியின் சிறப்பான பந்துவீச்சால் இஷான் கிஷான் 20 ரன்களும், திலக் வர்மா 25 ரன்களும் , ஷிவம் துபே டக் அவுட் ஆனார்.

பின்னர் ரிங்கு சிங் , ஹர்திக் பாண்டியா 5 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். அக்சர் படேல் 14 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். மறுபுறம் சூர்யகுமார் யாதவ் நிலைத்து ஆடி ரன்கள் குவித்தார். பந்துகளை பவுண்டரி, சிக்சருக்கு பறக்க விட்ட அவர் அரைசதமடித்து அசத்தினார்.

இறுதியில் இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 161 ரன்கள் எடுத்தது. சூர்யகுமார் யாதவ் 84 ரன்கள் எடுத்தார். அமெரிக்கா அணியில் ஷாட்லி வான் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதையடுத்து, 162 ரன்கள் என்ற இலக்குடன் அமெரிக்கா களமிறங்கியது.

அந்த அணியின் தொடக்க வீரர்கள் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்த நிலையில், மிலிந்த் குமார் மற்றும் சஞ்சய் கிருஷ்ணமூர்த்தி ஜோடி சற்று நிதானமாக ஆடி ரன் சேகரிப்பில் ஈடுபட்டனர். இறுதியில் அமெரிக்க அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 132 ரன்கள் எடுத்தது. இதன் மூலம் இந்திய அணி 29 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, டி20 உலகக்கோப்பை தொடரை வெற்றியுடன் தொடங்கியுள்ளது.

### டி20 உலகக் கோப்பை: சிறப்பு டூடுல் வெளியிட்ட கூகுள்

**சென்னை, பிப்.9:**

டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் தொடங்கியுள்ளது. போட்டிகள் இந்தியாவில் அகமதாபாத், மும்பை, சென்னை உள்ளிட்ட 5 நகரங்களிலும், இலங்கையின் கொழும்பு, பல்லேகல்லேயிலும் நடைபெற உள்ளன. இந்நிலையில், டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை சிறப்பிக்கும் வகையில் கூகுள் தனது முகப்பு பக்கத்தில் சிறப்பு டூடுல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இணைய தேடு பொறியில் முதன்மை நிறுவனமான கூகுள் சுதந்திர தினம், குடியரசு தினம் போன்ற முக்கிய நாட்கள், பிரபலங்களின் பிறந்த நாட்கள் மற்றும் பண்டிகை காலங்களில் அதன் தேடு பொறியில் புதிய டூடுலை மாற்றியமைக்கும். தனது டூடுல் அமைப்பை அந்த நாளின் சிறப்புக்கு ஏற்றார் போல் மாற்றி அமைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஹரியாணாவில் ராட்டினம் சரிந்து விபத்து: காவலர் பலி, 13 பேர் காயம்

**புதுடெல்லி, பிப்.9:**



ஹரியாணாவில் நடைபெற்ற கண்காட்சியில் ராட்சத ராட்டினம் சரிந்து விபத்துக்குள்ளானதில் காவலர் ஒருவர் பலியானார்.

ஹரியாணா மாநிலம், சூரஜ்குன்ட் கண்காட்சியில் சனிக்கிழமை ராட்சத ராட்டினம் திடீரென சரிந்து விபத்துக்குள்ளானது. இந்த சம்பவத்தில் பணியில் இருந்த காவல் அதிகாரி ஒருவர் பலியானார். மேலும் 13 பேர் காயமடைந்தனர்.

விபத்து தொடர்பான விடியோக்கள் இணையதளங்களில் வைரலாகி வருகிறது.

தகவல் கிடைத்ததும் மாவட்ட துணை ஆணையர் ஆயுஷ் சின்ஹா, சுற்றுலா மேலாண்மை இயக்குனர் பார்த் குப்தா ஆகியோர் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்தனர்.

மாலை 6 மணியளவில் சுமார் 15 பேருடன் ராட்டினம் திடீரென சரிந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்று அவர்கள் மேலும் கூறினர். மீட்பு நடவடிக்கையின் போது, கடை நடத்துனர் ராகவ்விற்கும் காயம் ஏற்பட்டது. முன்னதாக, மாலை 5 மணியளவில், கண்காட்சி திடலின் 2வது வாயில் திடீரென இடிந்து விழுந்ததில் குழந்தை உட்பட இரண்டு பேர் காயமடைந்தனர்.

# சத்தீஸ்கர்: 51 நக்ஸல்கள் சரண்

**புதுடெல்லி, பிப்.9:**

நக்ஸல் தீவிரவாதத்திற்கு அடுத்த மாதம் 31-ஆம் தேதிக்குள் முடிவு கட்ட வேண்டும் என்று கெடு விதித்து மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனிடையே, பாதுகாப்புப் படையினருடனான சண்டையில் கொல்லப்படும் நக்ஸல்களின் எண்ணிக்கையும், சரண் அடையும் நக்ஸல்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், பிஜாபூர் மாவட்டத்தில் 30 நக்ஸல்கள் சனிக்கிழமை சரண் அடைந்தனர். இதேபோல், சுக்மா மாவட்டத்திலும் 21 நக்ஸல்கள் சரண் அடைந்தனர். சரண் அடைந்த 51 நக்ஸல்களில் 34 பேர் பெண்கள் ஆவர்.

51 நக்ஸல்களும் பல்வேறு வன்முறை சம்பவங்களில் தொடர்புடையவர்கள். அவர்கள் குறித்து தகவல் தெரிவித்தால், ரூ.1.61 கோடி வெகுமதி அளிக்கப்படும் என பாதுகாப்புப் படையினரால் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு, அமைதிப் பாதைக்குத் திரும்பியது ஏன் என்பது குறித்து பேட்டியளித்துள்ள அவர்கள், நக்ஸல்கள் சரண் மற்றும் மறுவாழ்வு தொடர்பாக சத்தீஸ்கர் அரசு கடைப்பிடித்து வரும் கொள்கையால் ஈர்க்கப்பட்டே இந்த முடிவை எடுத்ததாகத் தெரிவித்துள்ளனர்.

சனிக்கிழமை சரண் அடைந்த 51 பேரையும் சேர்த்து, சத்தீஸ்கர் மாநிலத்தில் பாதுகாப்புப் படையினரிடம் இந்த ஆண்டில் சரண் அடைந்த நக்ஸல்களின் எண்ணிக்கை 300-ஆக அதிகரித்துள்ளது.

# கப்பலில் எண்ணெய் கடத்தல்; சர்வதேச சட்டவிரோத கும்பல் நடுக்கடலில் கைது; இந்தியா அதிரடி

**புதுடெல்லி, பிப்.9:**

இந்திய கடலோர காவல் படையானது நவீன உபகரணங்கள், மின்னணு சாதன வசதிகளுடன் ரோந்து மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில், வான் மற்றும் கடல் வழியே ஒருங்கிணைந்த முறையில் நடத்தப்பட்ட ரோந்து பணியின்போது,சந்தேகத்திற்குரிய வகையில் கப்பல் ஒன்று சென்று கொண்டிருப்பது தெரிய வந்தது. சட்டவிரோத வகையில், சர்வதேச எண்ணெய் கடத்தல் கும்பல் ஒன்று கப்பலில் பயணித்து உள்ளது. அதன் டிஜிட்டல் தரவுகளை ஆய்வு செய்தபோது, மலிவான எண்ணெய்யை அதிக அளவில் கடத்தி செல்வது தெரிய வந்தது.

போர்களால் கடுமையாக பாதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து இதுபோன்று, எண்ணெய்யை கப்பலில் கொண்டு சென்று நடுக்கடலில், சர்வதேச நீர்வழி பகுதியில் பிற கப்பல்களுக்கு வழங்குவது தெரிய வந்தது. இதனை பல்வேறு நாடுகளை சேர்ந்த கும்பல்கள் ஒரு நெட்வொர்க் போன்று செயல்பட்டு இயக்கி வருவது தெரிய வந்துள்ளது.

நவீன மற்றும் டிஜிட்டல் முறையில் இந்த நெட்வொர்க் செயல்பட்டு வருகிறது. கடலில் கப்பல்கள் செல்லும்போது, சரக்குகளை நடுக்கடலில் பரிமாறி கொள்வது, விற்பதும் ஒருங்கிணைந்த நெட்வொர்க் முறையில் செயல்படுவதும் தெரிய வந்துள்ளது.

இதனால், இந்தியா உள்பட பல்வேறு நாடுகளுக்கான வரிகளை செலுத்த வேண்டியதில் இருந்து தப்பித்து கொள்கின்றனர். இதன்படி, பல கப்பல்கள் இதில் ஈடுபட்டு வந்துள்ளன. அவற்றில் ஒரு கப்பலை இந்தியாவுக்கு கொண்டு வர அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர். இதன்பின் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்படும்.

# நாடு முழுவதும் பெண் நீதிபதிகள் எண்ணிக்கை என்ன? - மக்களவையில் சட்டத்துறை அமைச்சர் பதில்

**புதுடெல்லி, பிப்.9:**



நாடு முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களில் பெண் நீதிபதிகள் எண்ணிக்கை குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், உத்தராகண்ட், திரிபுரா மற்றும் மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் ஒரு பெண் நீதிபதி கூட இல்லை எனத் தெரிவித்தார்.

இது குறித்த கேள்விக்கு மக்களவையில் பதிலளித்த மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் கூறியதாவது: உயர் நீதிமன்றங்களில் தற்போது பணியாற்றும் நீதிபதிகளின் எண்ணிக்கை 814. அவர்களில் 116 பேர் பெண்கள். பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தில் அதிகபட்சமாக 18 பெண் நீதிபதிகள் உள்ளனர். உச்ச நீதிமன்றத்தில் உள்ள 33 நீதிபதிகளில் ஒரே ஒரு பெண் மட்டுமே உள்ளார்.

2014 ஆம் ஆண்டு முதல் உயர் நீதிமன்றங்களில் 170 பெண் நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 96 பேர் அடங்குவர்.

உச்ச நீதிமன்றத்தில் ஆறு பெண் நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். மத்திய அரசிடம் உள்ள தரவுகளின்படி, அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் அதிகபட்சமாக 110 நீதிபதிகள் உள்ளனர்.

இதில் ஏழு பேர் பெண்கள். பம்பாய் உயர் நீதிமன்றத்தில் 12 பெண் நீதிபதிகள் உள்ளனர். அதே நேரத்தில் டெல்லி மற்றும் சென்னை உயர் நீதிமன்றங்களில் தலா 10 பெண் நீதிபதிகள் உள்ளனர். உத்தரகாண்ட், திரிபுரா மற்றும் மணிப்பூர் உயர் நீதிமன்றங்களில் பெண் நீதிபதிகள் எவரும் இல்லை. உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமனம் அரசியலமைப்பின் 124, 217 மற்றும் 224 ஆகிய பிரிவுகளின் கீழ் செய்யப்படுகிறது.

அவை எந்தவொரு சாதி அல்லது பிரிவினருக்கும் இடஒதுக்கீடு வழங்கவில்லை. இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் கூறினார்.

## க்ரைம் கார்னர்

### தமிழகத்தில் இருந்து கடத்திய ரூ.2 கோடி மதிப்புள்ள மாத்திரைகள் பறிமுதல் 2 பேர் கைது

**ராமேஸ்வரம், பிப்.9:**

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு கடத்தப்பட்ட ரூ.2 கோடி வலி நிவாரணி மாத்திரைகள் இலங்கையில் பறிமுதல் செய்யப்பட்டது. இதுதொடர்பாக 2 பேர் கைதாயினர். தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு கடல் மார்க்கமாக பொருட்கள் கடத்தப்பட்டு, பின்னர் சாலை வழியாக கொண்டு செல்லப்படுகிறது. இதுபற்றி அறிந்த இலங்கை காவல் துறையினர் கொழும்பு அருகே வத்தளை நெடுஞ்சாலையில் சோதனையில் ஈடுபட்டனர்.

இதில் ஒரு சரக்கு வாகனத்தில் 75க்கும் மேற்பட்ட பண்டல்களில் 7 லட்சத்து 44 ஆயிரத்து 500 வலி நிவாரணி மாத்திரைகளை பறிமுதல் செய்தனர். மேலும், சரக்கு வாகனத்தில் இருந்த கொழும்புவைச் சேர்ந்த இரண்டு பேரை கைது செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட வலி நிவாரணி மாத்திரைகள் அந்நாட்டு சுங்கத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. கடத்தலில் மேலும் தொடர்புடையவர்கள் குறித்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறனர். பறிமுதல் செய்யப்பட்ட மாத்திரைகளின் சர்வதேச மதிப்பு சுமார் ரூ.2 கோடியாகும்.

### திருப்பதியில் போலீசார் அதிரடி 6 செம்மரக்கட்டைகளை கடத்திய 2 பேர் கைது

**திருமலை, பிப்.9:**

திருப்பதி செம்மரக்கடத்தல் அதிரடிப்படை தலைவர் எல்.சுப்பாராயுடுவின் நடவடிக்கைகளின்படி, எஸ்பி ஸ்ரீனிவாஸ், ஏஎஸ்பி ஜே.குலசேகரின் மேற்பார்வையில் டி.எஸ்.பி. எம்.டி. ஷரீப், ஆர்.ஐ சாய் கிரிஹாதர், ஏஆர்எஸ்ஐ ஈஸ்வர் ரெட்டி குழுவினர் கேவிபிபுரம் மண்டலத்தில் ரோந்து சென்றனர். அங்கு அப்பகுதி எப்பிஓ எம். சுரேஷ் குமாருடன், மாரப்பரெட்டி காண்ட்ரிகா சோதனைச் சாவடியில் வாகனங்களை ஆய்வு செய்தனர். நேற்று அதிகாலை, அந்த வழியாக வேகமாக வந்த ஒரு காரை அதிரடிப்படை போலீசார் கண்டறிந்து நிறுத்த முயன்றனர்.

அதற்குள் கடத்தல்காரர்கள் சிறிது தூரத்தில் காரை நிறுத்தி அதிலிருந்து இருவர் இறங்கி தப்பி ஓட முயன்றனர். இருப்பினும், அதிரடிப்படை போலீசார் அவர்களை துரத்திச் சென்று பிடித்தனர். காரில் சோதனை செய்ததில் 6 செம்மரக்கட்டைகள் கடத்தி செல்வது அறிந்து அவர்களை கைது செய்யப்பட்டு விசாரித்ததில் அவர்கள் திருப்பதி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்தது.

இதனையடுத்து அவர்களை காருடன் திருப்பதி அதிரடிப்படை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு டிஎஸ்பி வி. ஸ்ரீனிவாச ரெட்டி மற்றும் ஏசிஎப் ஜே. ஸ்ரீனிவாஸ் ஆகியோர் விசாரணை நடத்திய பின்னர் இன்ஸ்பெக்டர் காதர் பாஷா வழக்குப் பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

### மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் காவலருக்கு 23 ஆண்டுகள் சிறை தண்டனை

**திருநெல்வேலி, பிப்.9:**

திருநெல்வேலி மாவட்டம் களக்காடு சிதம்பராபுரத்தை சேர்ந்தவர் ஆனந்த கலைச்செல்வன் (34). திருநெல்வேலி டிஐஜி அலுவலகத்தில் காவலராகப் பணியாற்றி வந்தார். இவர், பாளையங்கோட்டையில் உள்ள உறவினரின் மகளான பிளஸ் 2 மாணவியை 2024-ம் ஆண்டில் பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். மேலும், இதுகுறித்து வெளியே சொல்லக்கூடாது என்று அந்த மாணவியை மிரட்டியதுடன், சூடும் வைத்துள்ளார். இது தொடர்பாக அந்த மாணவியின் தாயார் பாளையங்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸார் விசாரணை நடத்தி, போக்சோ சட்டத்தின்கீழ் ஆனந்த கலைச் செல்வனை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை நெல்லையில் உள்ள போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி சுரேஷ்குமார், குற்றம் சாட்டப்பட்ட காவலர் ஆனந்த கலைச்செல்வனுக்கு 23 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.12,500 அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

ரூ.10 லட்சம் இழப்பீடு: மேலும், பாதிக்கப்பட்ட மாணவிக்கு ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்குமாறு தமிழக அரசுக்கு நீதிபதி உத்தரவிட்டு உள்ளார்.

## வணிகச் செய்திகள்

### கோட்டக் மியூச்சுவல் ஃபண்டின் புதிய திட்டம் தொடக்கம்

**சென்னை, பிப்.9:**

சென்னை: கோட்டக் மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனம் கோட்டக் சர்வீசஸ் ஃபண்ட் என்ற புதிய முதலீட்டு திட்டத்தை (என்எப்ஓ) அறிமுகப்படுத்தி உள்ளது. கடந்த 4-ம் தேதி தொடங்கிய இதில் வரும் 18-ம் தேதி வரை முதலீடு செய்யலாம்.

குறைந்தபட்ச முதலீடு ரூ.1,000. இந்த திட்டம் நாட்டின் வளர்ச்சிக்கு வித்திடும் சேவைத் துறை சார்ந்த நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்ய, முதலீட்டாளர்களுக்கு வழிவகை செய்கிறது. இது ஒரு திறந்தநிலை ஈக்விட்டி திட்டம் ஆகும்.

இதுகுறித்து கோட்டக் மஹிந்திரா அஸெட் மேனேஜ்மென்ட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் நிலேஷ் ஷா கூறும்போது, "கோட்டக் சர்வீசஸ் ஃபண்ட் மூலம், இந்தியாவின் சேவைப் பொருளாதாரத்தில் உருவாகி வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு போர்ட்ஃபோலியோவை உருவாக்கி, நீண்டகால மதிப்பை வழங்க நாங்கள் இலக்கு வைத்திருக்கிறோம்.

முதலீட்டாளர்களுக்கு நிலையான, நீண்டகால செல்வத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில் எங்கள் முதலீட்டு உறுதிப்பாடு நிலை நிறுத்தப்பட்டுள்ளது" என்றார்.

# மணிப்பூர்: இரண்டு நாள்களுக்குப் பின் இயல்புநிலை திரும்பியது



புதுடெல்லி, பிப்.9:

மணிப்பூரின் சுராசந்த்பூரில் இரண்டு நாள்களுக்குப் பின் சனிக்கிழமை காலையில் இயல்பு நிலை திரும்பத் தொடங்கியது.

குகி சமூகத்தினர் பெரும்பான்மையாக வசிக்கும் சுராசந்த்பூர் மாவட்டம் துய்போங் பகுதியில் புதிய அரசுக்கு எதிராக கடந்த வியாழக்கிழமை போராட்டங்கள் வெடித்த நிலையில், தற்போது இயல்புநிலை திரும்பத் தொடங்கியது.

மணிப்பூரில் மைதேயி, குகி சமூகத்தினர் இடையிலான மோதல் காரணமாக 2 ஆண்டுகளுக்கும் மேலாக வன்முறை நிலவியது. இதில் சுமார் 260 பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர். இந்த வன்முறை காரணமாக கடந்த ஆண்டு பிப். 9-ஆம் தேதி மாநில முதல்வர் பதவியை பாஜகவை சேர்ந்த பிரேன் சிங் ராஜிநாமா செய்தார்.

இதைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு பிப்.12-ஆம் தேதி முதல் அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது. குடியரசுத் தலைவர் ஆட்சி கடந்த 4-ஆம் தேதி விலக்கிக் கொள்ளப்பட்ட நிலையில், மணிப்பூரில் புதிய அரசு அமைக்கப்பட்டது. பாஜகவை சேர்ந்த யும்நாம் கெம்சந்த் சிங் முதல்வராக பதவியேற்றார்.

துணை முதல்வர்களாக பாஜகவை சேர்ந்த நெம்சா கிப்கென், பாஜகவுடன் கூட்டணியில் உள்ள நாகா மக்கள் முன்னணியைச் சேர்ந்த எல் டிகோ ஆகியோர் பதவியேற்றனர்.

இதையடுத்து, குகி சமூகத்தைச் சேர்ந்த நெம்சா கிப்கென் புதிய அரசில் இணைந்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து குகி-ஜோ அமைப்புகள் சுராசந்த்பூர் மாவட்டம் துய்மோங்கில் வியாழக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டன.

போராட்டக்காரர்கள் டயர்களுக்கு தீ வைத்ததோடு, சாலை மறியலிலும் ஈடுபட்டனர். அதைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டனர். குகி மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை 12 மணி நேர முழு அடைப்புப் போராட்டத்துக்கு குகி-ஜோ அமைப்புகளின் கூட்டமைப்பு அழைப்பு விடுத்திருந்தது. இதனால் அங்கு மீண்டும் பதற்றமான சூழல் நிலவியது. இந்நிலையில், இரண்டு நாள்களுக்குப் பின் சுராசந்த்பூர் மாவட்டத்தில் போராட்டங்கள் குறைந்து சனிக்கிழமை காலை முதல் இயல்புநிலை திரும்பத் தொடங்கியதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மணிப்பூரில் யும்நாம் கெம்சந்த் சிங் தலைமையிலான புதிய அரசுக்கு தில்லி மற்றும் என்சிஆர் பகுதியைச் சேர்ந்த குகி-ஜோ இளைஞர் அமைப்பு எதிர்ப்பு தெரிவித்தது. மேலும், குகி மக்கள் வசிக்கும் பகுதிக்கு சட்டப்பேரவையுடன்கூடிய யூனியன் பிரதேச அந்தஸ்தை வழங்கி தனி நிர்வாகத்தை கொண்டுவர வலியுறுத்தி தில்லி ஜந்தர் மந்தரில் குகி-ஜோ இளைஞர் அமைப்பு சனிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டது.

## தமிழகம் உள்பட 19 மாநிலங்களில் 8.48 கோடி விவசாயிகளுக்கு எண்ம அடையாள அட்டை வழங்கல்

புதுடெல்லி, பிப்.9:

வேளாண் துறையில் எண்ம முறை வேகமாக விரிவுபடுத்தப்படுகிறது; தமிழகம் உள்பட 19 மாநிலங்களைச் சேர்ந்த 8.48 கோடி விவசாயிகளுக்கு எண்ம (டிஜிட்டல்) அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது என்று மாநிலங்களவையில் மத்திய வேளாண் துறை அமைச்சர் சிவராஜ் சிங் செளஹான் தெரிவித்தார்.

மாநிலங்களவையில் வெள்ளிக்கிழமை கேள்வி நேரத்தில் துணைக் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது: காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக் காலத்தில் வேளாண் துறையில் எண்ம முன்னெடுப்புகள் எதுவும் மேற்கொள்ளவில்லை. பாஜக ஆட்சியில் வேளாண் துறையில் எண்ம முறை வேகமாக விரிவுபடுத்தப்படுகிறது. 'அக்ரி ஸ்டாஸ்க்' இணையதளம் மூலம் வேளாண்மை, விவசாயிகள் தொடர்பான அனைத்து விவரங்களும் எண்ம முறையில் சேகரிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. விவசாய கிராம விவரங்கள், அங்குள்ள காலநிலை, உயிரிச்சூழல், சாகுபடிப் பயிர்கள் என அனைத்து விவரங்களும் அதில் இடம் பெற்றுள்ளன. தமிழகம், ஆந்திரம், பிகார், குஜராத், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், கர்நாடகம் உள்பட 19 மாநிலங்களைச் சேர்ந்த 8.48 கோடி விவசாயிகளுக்கு எண்ம (டிஜிட்டல்) அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதில் அவர்களின் நில விவரம், குடும்ப விவரம் என அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அடுத்ததாக கோவா, சிக்கிம், ஜம்மு-காஷ்மீர் விவசாயிகளின் விவரங்கள் பதிவு செய்யப்படவுள்ளன. இந்தத் திட்டத்துக்காக மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அனைத்து நிலைகளிலும் உதவி வருகிறது என்றார்.

## டில்லி: 10 ஆண்டுகளில் காணாமல் போன 1.80 லட்சம் பேர் மீட்பு

புதுடெல்லி, பிப்.9:

ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் டெல்லியின் முன்னாள் முதல்-மந்திரியான கெஜ்ரிவால் சமீபத்தில் கூறும்போது, நாட்டின் தலைநகர் டெல்லியில் ஜனவரி 1-ந்தேதி முதல் 15-ந்தேதி வரை பெண்கள், குழந்தைகள் என 807 பேரை காணவில்லை. அப்படியென்றால், நாளொன்றுக்கு 54 பேர் காணாமல் போயுள்ளனர். அவர்களில் பலர் இளம் சிறுமிகள் என கூறி அதிர்ச்சி ஏற்படுத்தினார். டெல்லியில், மக்களின் பாதுகாப்பு கேள்வியாக உள்ளது. இது அச்சமூட்டும் வகையில் உள்ளது. ஆனால், பா.ஜ.க. அரசோ தூங்கி கொண்டிருக்கிறது என்றும் குற்றச்சாட்டாக கூறினார். டெல்லியில் சட்டம் ஒழுங்கு ஐ.சி.யு.வில் உள்ளது என்றும், மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் உங்களுடைய குழந்தைகளை கவனத்துடன் பாதுகாத்து கொள்ளுங்கள் என்றும் கூறினார். இந்நிலையில், குழந்தைகள் காணாமல் போன விவகாரத்தில் பொதுமக்கள் அச்சமடையவோ, பயப்படவோ வேண்டிய அவசியமில்லை என டெல்லி போலீசார் தெரிவித்தனர். அவர்கள் வெளியிட்ட தகவலில், டெல்லியில் மக்கள் தொகை அதிகரித்து வரும் சூழலில் 2016-ம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 23 ஆயிரம் முதல் 24 ஆயிரம் என்ற அளவில் உள்ளது. நடப்பு ஆண்டு ஜனவரியில் 1,777 பேர் காணாமல் போயுள்ளனர் என வழக்குகள் பதிவாகி உள்ளன. இது மாதத்திற்கு சராசரியாக 2 ஆயிரம் பேர் என்ற எண்ணிக்கையை விட குறைவு ஆகும். இதுவரை 1 லட்சத்து 80 ஆயிரத்து 805 பேர் கண்டறியப்பட்டு, அவர்களுடைய குடும்பத்தி னருடன் மீண்டும் இணைந்து ள்ளனர். இதனால், மீட்பு விகிதம் 77 சதவீதம் ஆக உள்ளது என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## "அமெரிக்கா உடனான இந்திய வர்த்தக ஒப்பந்தம் ஒரு புதிய அத்தியாயம்..." - ஜெய்சங்கர்

புதுடெல்லி, பிப்.9:

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தில் உள்ளதாகத் தெரிவித்துள்ள வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இந்த ஒப்பந்தம் இரு தரப்பு உறவுகளில் புதிய அத்தியாயத்தை தொடங்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தலைநகரில் நடைபெற்ற அரிய வகை கனிமங்கள் தொடர்பான 50-க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்ற சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், மாநாட்டின் இடையே அமெரிக்க நிதி அமைச்சர் ஸ்காட் பெசென்ட், வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான அதிபர் டொனால்டு ட்ரம்ப்பின் அறிவிப்பை அடுத்து இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பு குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள ஜெய்சங்கர், "எனது அமெரிக்கப் பயணம் பயனுள்ளதாகவும், நேர்மறையானதாகவும் இருந்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், அதன் விவரங்களை இறுதி செய்யும் கட்டத்தில் உள்ளது. அது விரைவில் நிறைவடையும். இது நமது இருதரப்பு உறவுகளில் புதிய அத்தியாயத்தைத் திறக்கிறது. மேலும், பரந்த சாத்தியக்கூறுகளை வழங்குகிறது" என தெரிவித்துள்ளார்.

அரிய வகை கனிமங்கள் குறித்துப் பேசிய ஜெய்சங்கர், "அரிய வகை கனிமங்கள் மீதான நமது ஒத்துழைப்பும் வேகமாக முன்னேறி வருகிறது. வரும் நாட்களில், இரு தரப்பு பிரச்சினைகள், பாதுகாப்பு மற்றும் எரிசக்தி சார்ந்த பிரச்சினைகள் குறித்த பேச்சுவார்த்தைகளை எதிர்பார்க்கிறோம். ஒட்டுமொத்தமாக ஒரு வலுடான உத்வேகம் தெளிவாகத் தெரிகிறது" என குறிப்பிட்டுள்ளார்.

ஸ்மார்ட்போன்கள் தயாரிப்பு முதல் விமானங்கள் தயாரிப்பு வரை பயன்படும் அரிய வகை கனிமங்களை தற்போது சீனாதான் அதிக அளவில் உற்பத்தி செய்து வருகிறது. உலக அளவிலான விநியோகத்தில் சீனாவின் பங்கு 60 சதவீதத்தை சீனா கொண்டுள்ளது.

இந்நிலையில், சீனாவுக்குப் போட்டியாக அரிய வகை கனிமங்களின் உற்பத்தி, விலை, உலக சங்கிலி ஆகியவற்றை தீர்மானிப்பது தொடர்பாக அமெரிக்கா இந்த மாநாட்டுக்கு ஏற்பாடுகளை செய்திருந்தது. இதில், இந்தியா உட்பட 50-க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி 7.4% ஆக உயர்த்தி கணிப்பு: ஆர்பிஐ




புதுடெல்லி, பிப்.9:

2025-26 ஆம் ஆண்டுக்கான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி(ஜிடிபி) 7.4 சதவிகிதம் அதிகரிக்கும் என மத்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

உலகளாவிய வர்த்தக நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் டிரம்ப் வரி விதிப்பு காரணமாக ஏற்பட்ட நிதிச் சந்தை ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியில், உள்நாட்டுத் தேவையின் நீடித்த தன்மை மீது நம்பிக்கை தெரிவிக்கும் விதமாக, வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகிய கால கடன்களுக்கான வட்டி விகிதங்களில் (ரெப்போ ரேட்) மாற்றங்களை அறிவிக்காத நாட்டின் மத்திய வங்கியான ரிசர்வ் வங்கி, ஏற்கெனவே கணிக்கப்பட்டிருந்த 2025-26 ஆம் ஆண்டுக்கான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி(ஜிடிபி) கணிப்பை 7.3 சதவீதத்தில் இருந்து 7.4 சதவீதமாக உயர்த்தியுள்ளது.

திருத்தப்பட்ட இந்தக் கணிப்பு, டிசம்பரில் அறிவிக்கப்பட்ட 7.3 சதவீத வளர்ச்சி மதிப்பீட்டிலிருந்து ஒரு மிதமான உயர்வாகும். இது, ஆசியாவின் மூன்றாவது பெரிய பொருளாதாரம் உலகளாவிய சவால்களிலிருந்து ஒப்பீட்டளவில் பாதுகாக்கப்பட்டு தொடர்ந்து வலுவாக உள்ளது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

2026-27 ஆம் ஆண்டுக்கான தனது முந்தைய கணிப்புகளை ரிசர்வ் வங்கி திருத்தியுள்ளது. முந்தைய மதிப்பீடுகளான 6.7 சதவீதம் மற்றும் 6.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், முதல் காலாண்டில் 6.9 சதவீதமாகவும், இரண்டாவது காலாண்டில் 7 சதவீதமாகவும் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி இருக்கும் என்று ஆண்டறிக்கையில் கணித்திருந்தது. சாவதேச அளவில் புவி அரசியல் பதற்றங்கள் அதிகரித்தாலும் இந்தியப் பொருளாதாரம் வலுவாக உள்ளது. வளர்ச்சியும் மேம்பட்டு வருகிறது. ஐரோப்பிய யூனியனுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமெரிக்காவுடனும் வர்த்தக ஒப்பந்தம் இறுதிக் கட்டத்தில் உள்ளது. நுகர்வு மற்றும் முதலீட்டில் நீடித்த உத்வேகத்தின் ஆதரவுடன், பொருளாதார செயல்பாடு அடுத்த நிதியாண்டிலும் சிறப்பாக நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

# சாலை விபத்து இழப்பீடு இழப்பை ஈடு செய்யாது: உச்சநீதிமன்றம்



புதுடெல்லி, பிப்.9:

சாலை விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ரூ.20 லட்சம் இழப்பீடு அளிக்க வெள்ளிக்கிழமை உத்தரவிட்ட உச்சநீதிமன்றம், இத்தகைய விபத்துகளில் ஏற்படும் உயிரிழப்புக்கு அளிக்கப்படும் தொகை எவ்வளவு பெரிதாக இருந்தாலும், அது குடும்பத்தினரின் இழப்பை ஈடுசெய்யாது என்று தெரிவித்தது.

கடந்த 2011-ஆம் ஆண்டு சாலை விபத்தில் உயிரிழந்த வேலு என்ற நபரின் மரணத்துக்கு ரூ.20 லட்சம் இழப்பீடு கோரி, சென்னை மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயத்தை அவரின் குடும்பத்தினர் அணுகினர்.

லாரி மோதி வேலு உயிரிழந்த நிலையில், அந்த லாரி பார்தி ஆக்ஸா ஜெனரல் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்திருந்தது. வேலுவின் குடும்பத்துக்கு ரூ.9.37 லட்சம் இழப்பீடு வழங்குமாறு அந்தக் காப்பீட்டு நிறுவனத்துக்கு தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

இந்த இழப்பீட்டை ரூ.10.51 லட்சமாக உயர்த்தி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், அந்தத் தொகையை மேலும் அதிகரிக்கக் கோரி, வேலுவின் குடும்பத்தினர் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் தீபாங்கர் தத்தா, சதீஷ் சந்திர சர்மா ஆகியோர் அடங்கிய அமர்வு, 'சாலை விபத்தில் ஒருவரின் உயிரிழப்புக்கு அளிக்கப்படும் தொகை எவ்வளவு பெரிதாக இருந்தாலும், அது அந்த இழப்பை ஈடு செய்யாது. உயிரிழந்தவரை சார்ந்திருந்த குடும்ப உறுப்பினர்களுக்கு ஏற்படும் நிதிச் சுமையைக் குறைக்கும் முயற்சியாக இழப்பீடு வழங்கப்படுகிறது.

குடும்பப் பிணைப்புகள் திடீரென முறிந்துபோகும் சந்தர்ப்பங்களில், மனித யதார்த்தங்களுக்கு ஏற்ப சட்டம் செயல்பட வேண்டும்' என்று தெரிவித்தது. இதைத்தொடர்ந்து மனுதாரருக்கான இழப்பீட்டை ரூ.20.80 லட்சமாக உயர்த்தி அளிக்க காப்பீட்டு நிறுவனத்துக்கு நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டது.

## விசாரணைக்காக மட்டுமே கைது நடவடிக்கைக் கூடாது: உச்சநீதிமன்றம்

புதுடெல்லி, பிப்.9:

'கைதுநடவடிக்கைஎன்பதுஆதாரங்களைச்சேகரித்தல் உள்ளிட்ட முறையான விசாரணை நடத்துவதற்கு காவல் அதிகாரிக்கு உதவும் சட்டபூர்வவிருப்பத் தேர்வு மட்டுமே; மாறாக, கைது நடவடிக்கையைக் கட்டாயமானதாகக் கருதக் கூடாது' என்றும் தெளிவுபடுத்தியது. பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா (பிஎன்எஸ்எஸ்) 2023 சட்டத்தின் பிரிவு 35(3)-இன் கீழ் கைது நடவடிக்கை தொடர்பான அலகாபாத் உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதில், 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கக் கூடிய வகையிலான குற்றம் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் விசாரணைக்காக இந்தச் சட்டப் பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது கைது நடவடிக்கை கட்டாயமானதா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டது. இந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், என்.கே.சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு விதித்த தீர்ப்பு, உச்சநீதிமன்ற வலைதளத்தில் அண்மையில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

அதில் கூறியிருப்பதாவது: பிஎன்எஸ்எஸ் 2023 சட்டத்தின் பிரிவுகள் 35(1) (பி) மற்றும் 35(3) முதல் 35(6) வரையிலான பிரிவுகளைப் பொறுத்தவரை, கேள்வி கேட்பதற்காக அல்லது விசாரணை நடத்துவதற்காக மட்டுமே ஒரு காவல் அதிகாரி ஒருவரை கைது செய்யலாம் என்றுபொருள் அல்ல. மாறாக, 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படக் கூடிய ஒரு குற்றத்தின் மீதான விசாரணை, சம்பந்தப்பட்ட நபரை காவலில் எடுக்காமல் திறம்பட முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதை காவல் அதிகாரி தன்னைத் தானே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே அதன் பொருள். கைது செய்யாமலும் விசாரணையை முன்னெடுத்துச் செல்ல முடியும். இதற்கு முரணான எந்தவொரு அணுகுமுறையும், அந்தச் சட்டப் பிரிவுகளின் நோக்கத்தைச் சிதைத்துவிடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## மே 24-இல் யுபிஎஸ்சி சிவில் சர்வீசஸ் முதல்நிலைத் தேர்வு

புதுடெல்லி, பிப்.9:

ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஎஃப்எஸ் ஆகிய பதவிகளுக்கு யுபிஎஸ்சி மூலம் ஒவ்வொரு ஆண்டும் முதல்நிலை, பிரதான தேர்வு (மெயின்), நேர்முகத் தேர்வு என 3 கட்டத் தேர்வுகள் நடத்தப்படும். 2026-ஆம் ஆண்டில் 933 பணியிடங்கள், இந்தத் தேர்வு மூலம் நிரப்பப்படவுள்ளது. இதில் 33 பணியிடங்கள், மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான முதல்நிலைத் தேர்வு மே மாதம் 24-ஆம் தேதி நடத்தப்படுகிறது. இதற்கான அறிவிக்கையை யுபிஎஸ்சி வியாழக்கிழமை வெளியிட்டது.

மேலும் அந்த அறிவிக்கையில், பாதுகாப்பாகவும், சுமூகமாகவும் தேர்வு நடைபெறுவதை உறுதி செய்ய முக அடையாள சரிபார்ப்பு அனைத்து தேர்வு மையங்களிலும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும், அடையாள சான்றுக்கு ஆதாரை அனைத்துதேர்வாளர்களும்பயன்படுத்தவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ஐஏஎஸ், ஐஎஃப்எஸ் பணியிடங்களில் பணிபுரிவோர் 2026-ஆம் ஆண்டு தேர்வில் பங்கேற்க தகுதி இல்லை என்றும், அதேபோல் ஐபிஎஸ் அதிகாரியாக தேர்வு செய்யப்பட்டிருந்தாலோ அல்லது நியமிக்கப்பட்டிருந்தாலோ, மீண்டும் அதே இடத்திற்கு 2026 தேர்தலில் பங்கேற்க முடியாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கேரளா: வெங்காயம் ஏற்றிச்சென்ற லாரியில் வெடிமருந்து

திருவனந்தபுரம், பிப்.9:

கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டம் செம்மண்ட் பகுதியில் வெங்காயம் ஏற்றிச்செல்லும் லாரியில் வெடிமருந்து கடத்தப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் போலீசார் நேற்று இரவு தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, செம்மண்ட் பகுதியில் உள்ள செங்கல் சூளையில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் வெங்காயம் ஏற்றிச்சென்ற லாரி நின்றுகொண்டிருந்தது.

இதையடுத்து, அந்த லாரியில் இருந்த வெங்காய மூட்டைகளை இறக்கிவிட்டு அதில் போலீசார் சோதனை நடத்தினர். அப்போது, லாரியில் வெங்காய மூட்டைகளுக்கு மத்தியில் வெடிமருந்துகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததை போலீசார் கண்டுபிடித்தனர். 10 ஆயிரம் ஜெலட்டின் குச்சிகள், ஒயர்கள், டெடனேட்டர்கள், வெடிமருந்து உள்ளிட்டவற்றை போலீசார் கைப்பற்றினார். இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார், ஒருவரை கைது செய்தனர். சட்டவிரோத சுரங்கத்தில் பயன்படுத்த இந்த வெடிமருந்து கடத்தி வரப்பட்டதாக போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## ராஜஸ்தான்: தற்காப்புக்காக சிறுத்தையை கோடரியால் தாக்கிக்கொன்ற விவசாயி

புதுடெல்லி, பிப்.9:

ராஜஸ்தான் மாநிலம், கோட்புட்லி-பெஹ்ரூர் மாவட்டத்தில் கர்கதி கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி ஷ்ரவன் குர்ஜர்(48). இவர் தனது ஆடுகளுக்குத் தீவனம் சேகிரிப்பதற்காக வயலுக்குச் சென்றிருந்தார். மரக்கிளைகளை வெட்டிக்கொண்டிருந்தபோது அருகிலுள்ள புதர்களில் மறைந்திருந்த சிறுத்தைக் குட்டி அவரைத் தாக்கியது. சிறுத்தை நகம் பட்டதோடு கடித்ததில் விவசாயிக்கு பலத்த காயம் ஏற்பட்டது. உடனே தன்னை தற்காத்துக்கொள்ள கோடரியால் சிறுத்தையின் தலையில் தாக்கியுள்ளார். இதில் சிறுத்தை சம்பவ இடத்திலேயே இறந்தது. காயமடைந்த விவசாயி ஆல்வாரில் உள்ள அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறுத்தையின் உடல் துறை அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், விதிகளின்படி மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வனத்துறை அதிகாரி மனோஜ் நாகா தெரிவித்தார். இச்சம்பவம் குறித்து மேலும் விசாரணை நடந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பசிபிக் பெருங்கடலில் படகில் போதை பொருள் கடத்தல்; 2 பேரை சுட்டு வீழ்த்திய அமெரிக்க ராணுவம்

**புளோரிடா, பிப்.9:**

அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் தலைமையிலான அரசு, போதை பொருள் கடத்தலை ஒழிக்கும் நடவடிக்கையில் தீவிரத்துடன் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், அமெரிக்க ராணுவம் வெளியிட்ட செய்தியில், போதை பொருள் கடத்தல் வழிகளை நன்கு அறிந்து, அதன் வழியே படகில் போதை பொருட்கள் கடத்தலில் ஈடுபட்ட 2 போதை பொருள் பயங்கரவாதிகளை சுட்டு வீழ்த்தி உள்ளோம்.




இதனை அமெரிக்க பாதுகாப்பு படையின் ஜெனரல் பிரான்சிஸ் எல். டோனோவான் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர். கிழக்கு பசிபிக் பெருங்கடல் பகுதியில் இந்த போதை பொருள் கடத்தல் நடந்தது.

இதில், அமெரிக்க ராணுவத்தினருக்கு எந்த பாதிப்பும் இல்லை என தெரிவிக்கப்பட்டு உள்ளது. படகை தாக்கி இதுதொடர்பான அழிக்கும் வீடியோ ஒன்றும் வெளியானது. அதனை அமெரிக்க பாதுகாப்பு துறை மந்திரி பீட் ஹெக்சேத்தும் பகிர்ந்து உள்ளார். அந்த படகில் போதை பொருட்கள் கடத்தப்பட்டன என கூறப்படுகிறது. கரீபியன் கடல் பகுதியில் இதுபோன்ற அதிரடி நடவடிக்கையால், சில போதை பொருள் கடத்தல் கும்பலின் தலைவர்கள் அனைத்து போதை பொருள் கடத்தல் நடவடிக்கையையும் காலவரையின்றி நிறுத்த முடிவு செய்துள்ளனர். இது அமெரிக்காவுக்கு கிடைத்த வெற்றி. அமெரிக்கர்களின் வாழ்வை ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் பாதுகாத்து உள்ளார் என ஹெக்சேத் தெரிவித்து உள்ளார்.

## தற்கொலை படை தாக்குதல் : பாக்-இல் 3 பேர் கைது

**இஸ்லாமாபாத், பிப்.9:**

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள ஷியா பிரிவு மசூதியில் பிப்.6 வெள்ளியன்று தொழுகையின் போது தற்கொலைப்படை தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த பயங்கரமான தாக்குதலில் 60 க்கும் மேற்பட்டோர் பலியாகினர். சுமார் 169 பேர் படு காயமடைந்துள்ளனர். சமீபத்திய ஆண்டுகளில் ஷியா சமூகத்தைக் குறிவைத்து நடத்தப்பட்ட மிக மோசமான பயங்கரவாதத் தாக்குதல்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது. இது தொடர்பாக கைபர் பக்துன்க்வா மாகாணத்தின் பெஷாவரில் ஒரு பெண் உட்பட மூன்று பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

## சூடானில் டிரோன் தாக்குதல்: 8 குழந்தைகள் கொலை

சூடானில் துணை ராணுவம் நடத்திய டிரோன் தாக்குதலில் 8 குழந்தை கள் உட்பட 24 பேர்படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அந்நாட்டின் வடக்கு கோர்டோஃபான் மாகாணத்தில் ரஹாத் நகரில்இடம்பெயர்ந்த மக்களை ஏற்றிச் சென்ற வாகனம் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அந்நாட்டில் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக 2023 முதல்அந்நாட்டு ராணுவமும் துணை ராணுவமும் உள்நாட்டுப்போரில் ஈடுபட்டுள்ளன. மேலும் துணை ராணுவம் நாட்டின் பல பகுதிகளில் படுகொலைகளை அரங்கேற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

## உக்ரைன்-ரஷ்ய போர் ஜூனுக்குள் முடிவுக்கு வர அமெரிக்கா விருப்பம்

உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையிலான போரை ஜூன் மாதத்திற்குள் முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா விரும்புவதாகவும், அதற்கான பேச்சுவார்த்தைகளை அடுத்த வாரம் நடத்த அமெரிக்கா முன் வந்துள்ளதாகவும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். உக்ரைனை தவிர்த்து விட்டு, ரஷ்யாவுடன் எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அமெரிக்கா மேற்கொள்வதை ஏற்க முடியாது என்றும் எங்களைப் பற்றிய ஒப்பந்தங்களை, எங்களை இணைக்காமல் அமெரிக்காவும் ரஷ்யாவும் மேற்கொள்வதை உக்ரைன் ஏற்காது எனவும் ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

## எப்ஸ்டீன் பைல்ஸ் விவகாரம் : பில் கிளிண்டன் சவால்

கொடூர பாலியல் குற்றவாளியான ஜெப்ரி எப்ஸ்டீனின் வழக்கு ஆவணத்தில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டனின் பெயர் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் எப்ஸ்டீனுடனான தனது தொடர்புகள் கிளிண்டன் அறக்கட்டளை சார்ந்த மனிதாபிமானப் பணிகளுக்காக இருந்தது. அவரது தீவுக்கு நான் சென்றதில்லை. இது குறித்த விசாரணையை பொதுவெளியில் நடத்த வேண்டும் என்று பில் கிளிண்டன் கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் குடியரசு கட்சி இந்த விவகாரத்தை அரசியல் லாபத்திற்காக பயன்படுத்துவதாகவும் தனக்கே நியாயம் கூறிக்கொண்டார்.

## நிபா வைரஸ் பாதிப்பு : ஆசியா முழுவதும் கண்காணிப்பு




இந்தியாவில் இரண்டு நபர்களுக்கு நிபா வைரஸ் பாதிப்புகள் கண்டறியப்பட்டது. தற்போது வங்கதேசத்திலும் இந்த மரணம் நிகழ்ந்தது தெரிய வந்துள்ளது. ஜனவரி 21 அன்று 40 வயது பெண் ஒருவ ருக்கு காய்ச்சல் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து அதிகப்படியான உமிழ்நீர் சுரப்பு, வலிப்பு போன்ற தீவிர அறிகுறிகள் தோன்றிய ஒரு வாரத்தில் அவர் உயிரிழந்தார். மறுநாள் அவருக்கு நிபா வைரஸ் தொற்று இருந்தது உறுதி செய்யப்பட்டது. இதனால் ஆசியா முழுவதும் உள்ள விமான நிலையங்களில் மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான்: மத வழிபாட்டு தலத்தில் தற்கொலைப்படை தாக்குதல் - பலி எண்ணிக்கை 36 ஆக உயர்வு

**இஸ்லாமாபாத், பிப்.9:**

பாகிஸ்தான் நாட்டின் தலைநகர் இஸ்லாமாபாத்தின் ஷேசாத் நகர் பகுதியில் இஸ்லாமிய மத வழிபாட்டு தலமான மசூதி உள்ளது.

இந்த மத வழிபாட்டு தலத்தில் (வெள்ளிக்கிழமை) மதியம் வழிபாடு நடந்துகொண்டிருந்தது. அப்பகுதியை சேர்ந்த ஏராளமான இஸ்லாமியர்கள் மத வழிபாடு செய்துகொண்டிருந்தனர்.

அப்போது, அந்த மத வழிபாட்டு தலத்திற்குள் உடலில் வெடிகுண்டைகட்டிக்கொண்டு பயங்கரவாதி வந்தார். அந்த பயங்கரவாதி மத வழிபாட்டு தலத்தில் வைத்து தனது உடலில் கட்டி இருந்த வெடிகுண்டை வெடிக்கச்செய்தார். இந்த சம்பவத்தில் 31 பேர் உயிரிழந்தனர். மேலும், 169 பேர் படுகாயமடைந்தனர்.

இதையடுத்துபடுகாயமடைந்த வர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர். இந்த தற்கொலைப்படை தாக்குதலுக்கு ஐஎஸ் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது.

இந்நிலையில், தற்கொலைப்படை தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 36 ஆக அதிகரித்துள்ளது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 5 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இதனால், பாகிஸ்தான் தற்கொலைப்படை தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 36 ஆக அதிகரித்துள்ளது.

## பயணங்களை தவிர்க்க குடிமக்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை




**இஸ்லாமாபாத், பிப்.9:**

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் இமாம்கார் நகரில் தர்லாய் கலான் பகுதியில் உள்ள ஷியா பிரிவு மசூதி ஒன்றில் மக்கள் தொழுகையில் ஈடுபட்டு இருந்தபோது, தற்கொலை வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், 31 பேர் பலியானார்கள். 169 பேர் காயமடைந்தனர். இந்நிலையில், பாகிஸ்தானில் அமைந்துள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்ட செய்தியில், பாகிஸ்தானுக்கு பயணிக்கும் அல்லது பாகிஸ்தானில் வசிக்கும் அமெரிக்கர்கள் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களை தவிர்க்கவும் என கேட்டு கொண்டுள்ளது. தனிப்பட்ட பாதுகாப்புக்கான திட்டங்களை மறுஆய்வுசெய்துகொள்ளும்படியும் அறிவுறுத்தி உள்ளது. நிலைமை பற்றி உள்ளூர் ஊடக செய்திகளை உன்னிப்பாக கவனிக்கும்படியும், எல்லா நேரத்திலும் முறையான அடையாள அட்டையை வைத்திருக்கும்படியும், உள்ளூர் போலீசாருக்கு தேவைப்படும்போது ஒத்துழைப்பை வழங்கும்படியும் வலியுறுத்தி உள்ளது.

## ஸ்பெயின், போர்ச்சுகல்லில் கனமழை: ஒருவர் பலி; பெண் காணவில்லை

**ரோண்டா, பிப்.9:**

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஸ்பெயின் நாட்டின் தெற்கே ரோண்டா நகரில் லியோனார்டோ என பெயரிடப்பட்ட புயல் கடுமையாக தாக்கி வருகிறது. இந்த ஆண்டின் 7-வது புயலான இது பல மாதங்களுக்கு பெய்ய வேண்டிய மழையை ஒரு சில மணிநேரத்தில் பொழிந்து விட்டு சென்றுள்ளது. இந்த புயல் போர்ச்சுகல்லையும் விட்டு வைக்கவில்லை.




போர்ச்சுகல்லில் கடந்த வாரம் 5 பேர் பலியானதுடன் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். ஆயிரக்க ணக்கான வீடுகளில் மின் இணைப்பு இன்றி மக்கள் தவித்தனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீட்பு குழுவினர் நிவாரண பணிகளில் ஈடுபட்டு உள்ளனர். ஒருவர் பலியாகி உள்ளார்.

இதில், ஸ்பெயினின் ஆண்டலூசியா என்ற தெற்கு பகுதியின் சில பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது. மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் என பாதிக்கப்பட்ட 4 ஆயிரம் பேர் தங்கள் வீடுகளை விட்டு விட்டு வெளியேறி சென்றுள்ளனர்.

தொடர் மழையால் வயல்கள் வெள்ளம் சூழ்ந்தும், நீரில் மூழ்கியும் இருந்தன. கட்டிடங்கள், வீடுகள் மழை நீரால் சூழப்பட்டு இருந்தன. கார்கள், பைக்குகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. நாயை காப்பாற்ற சென்ற பெண் ஒருவர் தண்ணீரில் அடித்து செல்லப்பட்டார். எனினும், அவருடைய நாய் மீட்கப்பட்டது.

## ‘முழுமையான இந்திய வரைபடம்’ - பாக்., சீனாவை மூக்குடைத்ததா அமெரிக்கா?




**வாஷிங்டன், பிப்.9:**

இந்தியா உடனான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்க அரசு அதிகாரபூர்வமாக பகிர்ந்த எக்ஸ் பதிவில் இடம்பெற்றிருந்த ‘முழுமையான இந்தியா’ வரைபடம் பல்வேறு விவாதங்களுக்கு வழிவகுத்துள்ளது. இந்தியா - அமெரிக்கா இடையேயான இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தை இரு நாடுகளும் ஏற்றுக்கொண்டதை அடுத்து, இது தொடர்பான கூட்டறிக்கையை வெள்ளை மாளிகை வெளியிட்டது. வர்த்தக உலகில் இந்த ஒப்பந்தத்தை ஒட்டி பல்வேறு கருத்துகள் ஒருபுறம் வெளியாகி வரும் சூழலில், கூட்டறிக்கை குறித்து அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி ஒருவர் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த இந்திய வரைபடம் மறுபுறம் விவாதத்தைக் கிளப்பியுள்ளது. அந்தப் பதிவில், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் (POK) என்று அறியப்படும் ஜம்முவின் வடக்கு பகுதி, தனது எல்லைக்கு உட்பட்ட பகுதி என்று சீனா உரிமை கோரிவரும் அக்ஷய் சின் (AKSAI CHIN) ஆகியனவற்றை அந்த இந்திய வரைபடம் உள்ளடக்கியுள்ளது. இது இப்போது இணைய வெளியில் பேசுபொருளாகியுள்ளது.

## நேபாளத்தில் பஸ் விபத்து; 13 பேர் பலி

**காத்மாண்டு, பிப்.9:**

நேபாள நாட்டின் சுதூர்பச்சிம் மாகாணத்தில் பைதடி நகரில் பஸ் ஒன்று மலை பகுதியில் சென்று கொண்டிருந்தது. அந்த பஸ்சில் பைதடி நகரின் பாவ்னி கிராமத்தில் இருந்து, பாஜங் நகரின் சன்குடா கிராமத்திற்கு திருமண நிகழ்ச்சிக்காக சிலர் சென்றனர்.

இந்நிலையில், அந்த பஸ் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து திடீரென மலையில் இருந்து, 150 மீட்டர் ஆழ பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில், சம்பவ இடத்தில் 6 பேர் பலியானார்கள். 8 பேர் சிகிச்சையின்போது உயிரிழந்தனர். இந்த சம்பவத்தில், சிக்கி மொத்தம் 13 பேர் உயிரிழந்து உள்ளனர். இதுதவிர பஸ்சில் பயணித்தவர்களில் 34 பேர் காயமடைந்தனர். அவர்களில் பலர் கவலைக்குரிய வகையில் உள்ளனர். இதனால், பலி எண்ணிக்கை உயர கூடும் என அஞ்சப்படுகிறது.

பஸ் ஓட்டுநருக்கு லேசான காயங்கள் ஏற்பட்டு உள்ளன. அவரை போலீசார் விசாரணைக்கு அழைத்து சென்றுள்ளனர்.

அதிக அளவில் ஆட்களை ஏற்றியது விபத்திற்கு காரணம் என்றும் அதனால் பஸ் மேலே ஏற முடியாமல் போனது எனவும் முதல்கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்து உள்ளது.

## நேபாளம்: மர்ம பொருள் வெடித்து 4 சிறுவர்கள் காயம்

**சப்தரி, பிப்.9:**

நேபாளத்தின் சப்தரி மாவட்டத்தில் உள்ள துதைலா நதி அருகே சனிக்கிழமை 4 சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது மர்ம பொருள் வெடித்ததில் அவர்கள் 4 பேரும் காயமடைந்தனர். சிறுவர்கள் சுற்றுலா சென்றிருந்தபோது இந்த சம்பவம் நிகழ்ந்தது. இதுகுறித்து துணை காவல் கண்காணிப்பாளர் தம்பர் பகதூர் பூரி கூறுகையில், வனப்பகுதியில் பட்டாசுக்கு பயன்படுத்தப்படும் ராக்கெட் போன்ற ஒரு பொருளை அவர்கள் கண்டுபிடித்தனர். அதை அவர்கள் எடுத்தபோது வெடித்துள்ளது. காயமடைந்த சிறுவர்கள் ரூபனியில் உள்ள மாதேஷ் மாகாண மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களின் நிலை ஆபத்தில் இல்லை. இவ்வாறு குறிப்பிட்டார். இதனிடையே இந்த சம்பவம் குறித்து மேலும் விசாரணை நடத்தி வருவதாக காவல் துறையினர் தெரிவித்தனர்.

## “அமெரிக்கா எங்களை தாக்கினால்...” - ஈரான் எச்சரிக்கை!

**ஈரான், பிப்.9:**

கடந்த 2025 டிசம்பர் முதல் ஈரான் அரசுக்கு எதிராக அந் நாட்டு மக்கள் போராட்டத் தில் ஈடுபட்டுள்ளனர். போராட் டத்தை ஒடுக்க ஈரான் மேற் கொண்ட நடவடிக்கையில் ஏராளமானோர் கொல்லப் பட்டனர்.

இந்த கொடூர அடக்கு முறைக்கு பதிலடியாக, ஈரான் மீது தாக்குதல் நடத் தப் போவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்தார். அப் போது முதல் இரு நாடுகள் இடையே மீண்டும் பதற்றம் அதிகரித்துள்ளது.



ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்கி விடக் கூடாது என் பதால் தங்கள் நாட்டுடன் ஒப் பந்தம் செய்து கொள்ள வேண் டும் என ட்ரம்ப் கோரி வரு கிறார். ஈரானை அச்சுறுத்த அமெரிக்க போர்க் கப்பல் களை வளைகுடா பகுதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்த நிலையில் அமெரிக்கா ஈரான் மீது தாக்குதல் நடத்தினால், அமெரிக்க ராணுவத் தளங்கள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தும் என்று அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் அப்பாஸ் அரக்சி எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து ஒரு பேட்டியில் பேசிய அவர், “எங்களால் அமெரிக்க மண்ணைத் தாக்க முடியாமல் போகலாம், ஆனால் எங்கள் பிராந்தியத்தில் உள்ள அவர்களின் தளங்களை நிச்சயமாகத் தாக்குவோம். இது அந்தத் தளங்களைக் கொண்டுள்ள அண்டை நாடுகளுக்கு எதிரான தாக்குதல் அல்ல. அங்குள்ள அமெரிக்கப் படைகளுக்கு எதிரான நடவடிக்கை மட்டுமே. எந்தவொரு பேச்சுவார்த்தையும் மிரட்டல்கள் இன்றி நடைபெற வேண்டும். நாங்கள் அணுசக்தி விவகாரத்தை மட்டுமே விவாதிப்போம், மற்ற விஷயங்களை அல்ல” என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ஈரானில் உள்ள அமெரிக்க மக்கள் உடனே ஈரானை விட்டு வெளியேற வேண்டும் என அமெரிக்க அரசு அறிவுறுத் தி இருந்தது.

இந்தச் சூழலில், அடுத்த வாரத் தொடக்கத்தில் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெற வாய்ப்புள்ளதாக அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இருப்பினும், இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் இந்த நேரடித் தாக்குதல் மிரட்டல்கள், உலக அளவில் கச்சா எண்ணெய் விலை மற்றும் சர்வதேசப் பாதுகாப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.